# கவிதைப் பூம்பொழில்

வித்துவான் க. வேந்தனார்

# கவிதைப் பூம்பொழில்

# கவிதைப் பூம்பொழில்

வித்துவான் க. வேந்தனார்

மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்

32/9 ஆற்காடு சாலை சென்னை 24

தமிழ்நாடு இந்தியா

**கவிதைப் பூம்பொழில்**
ஆசிரியர் : வித்துவான் க. வேந்தனார்
உரிமை : 2010, திருமதி சவுந்தரநாயகி வேந்தனார்
முதற்பதிப்பு : 1964, சைவப்பிரகாச அச்சியந்திர சாலை, யாழ்ப்பாணம்
இரண்டாம்பதிப்பு : 2010
வெளியீடு : மித்ர வெளியீடு

**Kavithaip Poom Pozhil**

By
**Vidwan K. Venthanar**
**© Mrs. Savuntharanayagi Venthanar**
**First Edition** : 1964 Jaffna
**Second Edition** : January 2010

Mithra : 198
ISBN : 978 - 81 - 89748 - 85 -2

Pages : 248
Price :

Printed & Published by
**Mithra Arts & Creations Pvt Ltd.,**
32/9 Arcot Road, Kodambakkam,
Chennai - 600 024.
Ph : 2372 3182, 2473 5314
www.mithra.co.in

ஸ்ரீ லங்கா அச்சகம், நூலகம் என்பவற்றின் அதிபர்
உயர்திருவாளர் நா. தெய்வேந்திரனார் அவர்களுக்கு
இக் கவிதைப் பூம்பொழிலை
நன்றிக் காணிக்கையாக நல்கும்

# உ ரி மை ம யு ரை

தண்ணருள் நிறைந்த சான்றோன் தவநெறித் தந்தை யோகர்
கண்ணருள் நோக்கம் பெற்றுக் கவினுறுங் கருணைப் பூங்கா
எண்ணருங் குணஞ்சா லேந்தல் இலக்கிய இன்பங் காண்போன்
விண்ணருள் மழைபோ லென்றும் விளைபயன் வேண்டா தீய்வோன்.

கற்றவர் களிக்கும் மேலாம் காவியத் தலைவன் போன்ற
கொற்றமும் குலமும் சால்பும் கொண்டொளி பரப்புங் கோமான்
உற்றவர்க் குறுதி சூழ்வோன் ஊருடன் உவந்து வாழ்வோன்
அற்றவர்க் கன்னை யாகி அறம்பல ஆற்றி நிற்போன்.

அலகில் புகழ்ஸ்ரீ லங்கா அச்சகம் நூலக மிவற்றின்
தலைமை கொளுந்தண்ணளியான் தமிழ்வாழத் தான்வாழ்வோன்
உலகு புகழ்சிவ நெறியின் ஒளிஓம் பியுயிர் தழைத்தோன்
நிலவு புலநெறி வழக்கின் நிலைநின் றோர்நெஞ் சகத்தான்.

அன்புடன் என்னைக் கூவி அருகினில் இருத்தி நீங்கள்
இன்தமிழ் இலக்கி யநூல் சமயநூல் எழுதித் தந்தால்
பொன்தரு கின்றேன் என்று புகன்றெனைப் புரந்த வள்ளல்
தன்திரு அனைத்தும் ஈசன் தாள்நிழல் தந்த தென்போன்.

என்றுமென் உள்ளந் தன்னில் இருந்திடும் இனியோன் தில்லை
மன்றில்நின் றாடும் ஈசன் மலரடி மறவாத் தூயோன்
பொன்றிகழ் தெய்வேந் திரனார்க் கிக்கவி தைப்பூம் பொழிலை
நன்றியின் காணிக் கையாய் நயந்துநான் நல்கு கின்றேன்.

'கலைச்சோலை'
8, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
17-11-64.

**க. வேந்தனார்**

# சிறப்புப் பாயிரம் I

## சித்தாந்தசாகரம்

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

### நல்கியது

ஒரு நாள் மாலை நேரத்திலே "சும்மா இருப்ப தெப்படி" என்று சிந்தித்துக்கொண்டு, நான் சும்மா இருந்தேன். எனது கண்ணுக்கணிகலம் கண்ணின் ஒத்துழைப்பின்மையால் தூரத்திலே ஒதுங்கிக் கிடந்தது. கைக்கணியான எழுதுகோலும் எங்கேயோ மறைந்து விட்டது.

இந்நிலையில் இருக்கும்போது கவிராயர் ஒருவர் அச்சுப் பிரதி ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு என் முன்னிலையில் தோன்றினார். நான் அவரை உபசரித்து எதிரிலே இருத்தி அவர் கைகளை நோக்கினேன்.

கவிராயர் 'இ∴தொரு கவிதைப் பூம்பொழில்; பல்வேறு சந்தர்ப்பங்களில் உதித்தவை இப்பொழிலில் ஒருங்கு காட்சியளிக்கின்றன; அவற்றைச் சற்றே தரிசியுங்கள்' என்று கூறிப் பிரதியை என்பால் உதவினார். நான் சற்றே தயங்கினேன். என்னிலையைக் கண்டுகொண்ட கவிராயர் பிரதியை என்னிடம் பெற்றுக்கொண்டு, தம் குரலையும் ஒருவாறு சரி செய்து, பூம்பொழிலில் உயிர்ப்பான பகுதிகளை எட்டியும் சுட்டியும் தொட்டுக் காட்டுவாராயினார்.

பூம்பொழிலில் யான் புகுந்தேன். குயில்கள் கூவின. மயில்கள் ஆடின. கிளிகள் மழலை பொழிந்தன. மந்த மாருதந் தவழ்ந்தது. மல்லிகை முல்லைகள் மலர்ந்தன. ஆறுகள் மலைகள் முகில்கள் அணிசெய்தன. ஐந்திணை வளங்கள் மிகுந்தன. சிறுவர் சிறுமியர் ஆடினர்; பாடினர். எனக்குக் குதூகலம் வீறியது. அங்கும் இங்கும் உலாவத் தொடங்கினேன். அருமந்த பாடல்கள் இனிய இசைக்கறியோடு சற்றே அபிநய தாளிதமுஞ் சேருமானால் என்னை ஆனந்தக்கூத்தாட்டியிருக்கும். முப்பது வருடங் களுக்கு முன்னே தோன்றியிருக்குமானால் கத்தரித்தோட்டத்துக்கு அருகிலே ஆடிப்பிறப்பை அடுத்து இப்பாடல்கள் அமர்ந்திருக்கும். அது நிற்க.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைப்பாடு என்னைப் பெரிதும் வசீகரித்தது. அவர்களின் அரும்பெருஞ் செயல்கள் மலையடுக்கங்களா யெழுந்தன. கதிர்காமத் தலத்துக்கு வணக்கஞ் செய்தேன். 'அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி' என்று பாடிய சோமசுந்தரப்புலவரின் ஞாபகம் வந்தது. புலவர் தோன்றினார். அவர் பாடல்கள் திரையெறிந்தன.

நல்லூரைத் தரிசித்தேன். இன்னும் எத்தனை! எத்தனை!

மற்றும் ஒருமுறை மாலைநேரத்திலே அவ்வாறாகியதொரு நிலையில் கவிராயர் தோன்றினார். அன்று அவர் கையிலிருந்தவை (அவனும் அவளும்) புறநானூற்றின் சாரமாய் அதன் உயிர்துடிக்கும் பாடல்கள். அவைகள் அத்தனையும் உயர்வகுப்பு மாணவர்கள் மனனஞ் செய்வதோடமையாது சிந்திக்கவேண்டியவை. கவிதைகளின் தெளிவும் சொல்லோட்டமும் என்னை விழுங்கிவிட்டன.

சும்மா இருந்த என்பால் சுமை ஒன்றிருந்ததை அப்பொழுது உணர்ந் தேன். அங்கே தேசிகவிநாயகம்பிள்ளை இங்கே சோமசுந்தரப்புலவர் என்று சொல்லிக்கொண்டிருப்பவன் யான். தேசிகவிநாயகம்பிள்ளைக்கு வாரிசு ஆய் அங்கே எத்தனையோபேர் உளராமே. இங்கே சோமசுந்தரப் புலவரின் வாரிசு யார் என்பதுதான் என்பாலிருந்த சுமை.

கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தசுவாமிகளின் அரும்பெருங் கவித்துவத்துக்குப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வாரிசு. வடக்கு மாகாணத்தில் சோமசுந்தரப்புலவரின் வாரிசு யார் என்பதற்கு இப்பொழுது விடை எளிதாய்ப்போய்விட்டது.

அன்று ஒருநாள் மாலையிலும் மற்றொருநாள் மாலையிலும் கவிராயரெதிரில் நான் சும்மாவிருந்தது பொய்; சுமையோடுதானிருந்தேன். கவிராயர் கவிதைப் பூம்பொழிலைத் திரைப்படஞ் செய்தபிறகுதான் என் சுமை இறங்கிச் சும்மா இருக்கத் தொடங்கினேன். இதனை நான் சும்மா சொல்லவில்லை.

இனி இரசிகசிகாமணிகளே, சோமசுந்தரப்புலவரின் வாரிசு ஆகிய கவிராயர் அவர்களின் நாமத்தை உச்சரித்துக்கொள்ளுங்கள். நான் கவிராயர் என்று வழங்குவதுபோலவே, பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு முகமாகப் பலவாகிய பட்டங்களை அவருக்கு வழங்கியிருக்கின்றார்கள். முயற்சி திருவினையாக்கும் அன்றோ.

கவிராயர் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு மிகப்பழக்கமானவர், யாவருக்கும் அறிமுகமானவர்.

**கவிராயர் வாழ்க!**
**கவிதைப் பூம்பொழில் வாழ்க!**

**சி. கணபதிப்பிள்ளை**

# சிறப்புப் பாயிரம் II

## தமிழ்ப் பாதுகாப்புக் கழகத் தலைவர்
## நவாலியூர்
## பண்டிதர் சோ. இளமுருகனார் அவர்கள்
## நல்கியது

### ஆசிரியப்பா

ஆன்றவிந் தடங்கிய வருணெறிக் கொள்கைச்
சான்றோ ரிருந்து தமிழ்வளர்த் திட்ட
பொன்றிக ழீழ மண்டலத் திந்நாட்
கன்றிய வரன்முறைக் கல்வியுங் கேள்வியுங்
குன்றிய வருதலிற் குலவிய மரபும்
இலக்கண வரம்பு மிலக்கியச் செம்மையும்
அடிதலை மாறித் தடுமா றுற்றன;
இலைமறை காய்போ லொருசில ரிருந்து
தலைமுறை வழக்கைத் தாங்கா நின்றனர்;
கட்டளைப் பட்டுச் சூளையில் வெந்த
இட்டிகைச் செங்கல் லிருப்பினைக் கைவினை
சாலாச் சிற்பி மேலெடுத் தமைத்த
கோலங் கொள்ளாக் கோபுரம் போலப்
பொருள்வறி தான சொன்னிலை மாடக்
காப்பியங் கட்டுங் கவிஞரு முளரே;
யாப்பியல் வழக்கு மணிவகைத் திறமுஞ்
சொல்லின் நுட்பமும் பொருளின் செம்மையுந்
தொல்வழி மரபு மல்வழிப் படவே
புதுமை புதுமை புதுமை யென்றே
மதுமலர் நாடும் வண்டினம் போலப்
பூசலி னெழுந்து புன்மையி னிகலி
மாசறு பழைமைக்கு நீர்க்கட னிதுவெனச்
சீரடி தளையெலா மடிதலை மாற்றி
வேற்றுமை வழியிற் புணரிய லழித்தே
அறமுதற் பொருட்கு விடுதலை தந்து

வேற்று நாட்டார் வேண்டும் பொருளே
ஊற்ற மாக வுணர்வினிற் கொண்டு
பாவகை யிதுவெனத் தேவருந் தேறா
வசனக் கவிதையும் பிசினக் கவிதையும்
மண்வா சனைப்படு மண்ணின் கவிதையும்
இயற்றுங் கவிஞரு மிங்குள ரம்ம!!

அவர்தாம்,
பற்றிலார் போலப் பழைமையும் பேணார்
பழைமை தழுவிய புதுமையுங் காணார்
அவர்திற மெல்லா மவ்வா றாக
ஒல்லும் வகையா னவையவை யோம்பிக்
கல்விச் சிறுவர் களஞ்சிய மாகப்
புதிய கவிதைப் பூம்பொழில் சமைத்தனன்;

ஆங்கண்,
மதிவளர் செஞ்சடை மணிமிடற் றண்ணல்
தந்தவேன் முருகனைத் தமிழ்கூட் டுண்ணுபு
வந்தருள் கென்றழை வண்ணக் குயின்முதல்
நாவலர் பாவலர் காவலர் முதலாம்
பூவலந் தொழூஉம் புண்ணியச் சான்றோர்க்
கரும்புக முடம்பு விருப்புறத் தந்தே
உலவா திருத்தி யுலாப்புக வைத்தனன்;

அதாஅன்று,
விண்ணக மீனினம் மண்ணகம் புக்கெனத்
தண்ணடை யூடே வெண்மலர் பரப்பிய
மல்லிகைப் பந்தரும் மலர்ப்பூங் காவும்
நல்லியற் காதலர் பயிலிட மாக
வாலிதி னமைத்தனன் மற்றவ ராங்கண்
பான்மதி வெண்ணிலாப் பரப்பிய முற்றத்து
மன்ற லளைஇய தென்றலை நுகர்ந்தும்
திமிதிமி திமியெனச் சதிபெற மிதித்தே
நாடக மாமயி லாடுதல் கண்டும்
ஏடவிழ் மலர்மணத் தின்பந் துய்த்துங்
குயிலொடு கூவியுங் கிளியொடு பேசியும்
ஊசலாடியும் வாசமலர் கொய்தும்
கந்துகப் பாடல் முந்துறப் பாடி
வந்துபந் தடித்தும் மகிழ்தரச் செய்தனன்;

அதாஅன்று,

பழகு தமிழிற் குழவிப் பாடல்
எழுதிய கவிஞனுந் தலைகிறுக் கிடவே
கனிவுறு சொன்மலர் கருவி யாக
இனியன வெளியன விசைவன பற்றிச்
சுவைகெழு பாத்தொடை பலபல யாத்தே
அழகெனக் குழந்தைக ளணிதரச் செய்தனன்;
மற்றவன் யாவ னோவெனின் மாசறக்
கற்றவர் மதிக்குங் கலைதெரி பண்டிதன்
நாவலர் பாவலர் நயமறி சுவைஞர்
மேவிய வவைதொறு மிடுக்கொடு புகுந்து
குறிக்கோள் முழக்கஞ் செவிப்பட் டதிர
விரிவுரை யமுதப் பெருமழை பொழியும்
தெரிதமிழ்க் கொண்டல் செஞ்சொற் பாவலன்
சேலணை பழனத்து வேலணை யூரன்
காலெழுந் தடித்துக் கதிர்நிலை மாறினும்
வாழி செந்தமிழ்க் கொள்கையின் வழுவான்
ஏந்து நல்லிசை யெங்கணு நிறீஇய
வேந்த னாரெனும் விளங்குபெய ரோனே.

---

உள்ளம் உவகையுற ஊக்கமுடன் வீற்றிருந்து
அள்ளுசுவைத் தேனை ஆர்ந்திடல்போல் - விள்ளுஞ்சீர்
தெய்வமார் செந்தமிழைத் தேர்ந்துநான் கற்றவிடம்
ஐயனார் கோவிலடி ஆல்

**—வித்துவான் க. வேந்தனார்**



# வித்துவான் வேந்தனார் (1918 - 1966)

*"வேந்தனாரின் பேச்சு மூச்செல்லாம் தமிழ். உள்ளம்*
*உயிர் எல்லாம் தமிழ். அவர் வாழ்வு தமிழ்.*
*தமிழே அவர். அவரே தமிழ் - தனித்தமிழ்."*

என அறிஞர் போற்றத்தக்க வகையிலே கால்நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்திலே தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர் வித்துவான் வேந்தனார்.

சிறுவயதில் இருந்தே தமிழ்ப்பற்றும் தமிழைக் கற்பதில் பேரார்வமும் மிக்கவராக இருந்த இவர் 'தனித்தமிழ்' ஈடுபாட்டினால் தமது பதினாறாவது வயதில், **நாகேந்திரம்பிள்ளை** என்று பெற்றோர் சூட்டிய பெயரை **வேந்தனார்** என மாற்றினார்.

தமிழ்ப் பற்றினாலும் சமய ஈடுபாட்டினாலும் பிறர் துணையின்றித் தாமாகவே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் சைவ சிந்தாந்த நூல்களையும் கற்று, **பாலபண்டிதர்** (1934 - ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்), **பண்டிதர்** (1941 - மதுரைத் தமிழ்ச்சங்கம்), **சைவப்புலவர்** (1942 - சைவ சித்தாந்த சமாஜம்) ஆகிய பட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து **பயிற்றப்பட்ட ஆசிரியர்** (1943 - யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரி ஆசிரிய பயிற்சிக் கழகம்) ஆகவும், **வித்துவான்** (1944 - சென்னைப் பல்கலைக் கழகம்) ஆகவும் தகுதி பெற்றார். வித்துவான் தேர்வுக்காகச் சென்னையில் இருந்த காலத்திலே 'தனித்தமிழ்' இயக்க முன்னோடி மறைமலையடிகளாரைத் தமது வழிகாட்டியாகக் கொண்டார்.

வேந்தனாருக்குத் திருவாவடுதுறை மகா சந்நிதானம் "தண் தமிழ்த்தாயின் தனித் தெய்வத் தன்மைகளைத் தேமதுரத் தமிழ்ப்பாக்களால் திசைமணக்கத் திகழ்வித்திருப்பதற்காக" **தமிழ்ப் பேரன்பர்** (1947) என்னும் பட்டத்தை வழங்கியது. இவரின் சைவ சித்தாந்த அறிவை வியந்து பாராட்டி ஸ்ரீலங்கா சைவாதீனம் **சித்தாந்த சிரோமணி** (1964) என்னும் பட்டத்தை அளித்தது.

வித்துவான் வேந்தனார் 32 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1934 - 1945 காலப்பகுதியில் தாம் கல்வி கற்ற

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, சரசுவதி வித்தியாசாலை ஆகியவற்றிலும், 1946ஆம் ஆண்டிலிருந்து தமது மறைவு வரை யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றி மாணவர் உலகில் மதிப்புப் பெற்றார். மேலும் 1964ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசாங்க புத்தக வெளியீட்டுச் சபையின் தமிழ்ப்பகுதி உறுப்பினராகவும், ஸ்ரீலங்கா சைவாதீனத்தின் 'நாவலன்' பத்திரிகையின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் தமது தமிழ்ப்பணியை விரிவு செய்தார்.

1940களில் எழுத்துலகில் இறங்கிய வேந்தனார் தமது எழுத்துக்களால் கவிஞர், குழந்தைக் கவிஞர், கட்டுரையாசிரியர், உரையாசிரியர் எனப் பல நிலைகளில் தனித்துவம் பெற்று விளங்கினார். ஈழத்துப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் கவிதைகளையும் பல நூற்றுக்கணக்கான இலக்கிய இலக்கண சமயக் கட்டுரைகளையும், இலக்கிய விவாதக் கட்டுரைகளையும் எழுதினார். 1940களின் இறுதியில் வேந்தனாரின் இலக்கிய விவாதக் கட்டுரைகள் எழுப்பிய கருத்து மோதல்களினால் 'ஈழகேசரி' வேந்தனாரின் இலக்கிய விவாதத்திற்கு ஓர் இலக்கிய அரங்கினையே அமைத்துக் கொடுத்தது. 1950களில் தினகரனில் வேந்தனார் எழுதிய கட்டுரைகள் தமிழின் சிறப்பினையும், தமிழ் இலக்கியங்களின் நயத்தினையும் எடுத்து விளக்குவனவாகவும், தமிழ் மொழியின் உரிமைக்குக் குரல் எழுப்புவனவாகவும் அமைந்தன. அன்று வேந்தனார் எழுதிய குழந்தைப் பாடல்கள் இன்றுவரை ஈழத்துக் குழந்தைகளின் நாவில் ஒலிக்கின்றன. இன்று உலகின் பல நாடுகளில் வாழும் எமது குழந்தைகளும் இவற்றைப் பாடுகின்றனர்.

'திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும்' (1961), 'கவிதைப் பூம்பொழில்' (1964) என்பன இவரது கவிதை நூல்கள். மாணவர்களின் பயன்பாட்டுக்கு 'இந்துசமயம்' என்ற நூலினையும், கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைப் படலம், காட்சிப் படலம், நிந்தனைப் படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப் படலம் என்பவற்றிற்கான உரைகளையும், பாரதியார் பாடல்களுக்கு உரையினையும் எழுதியுள்ளார்.

எழுத்தாற்றல் மிகப் பெற்ற வேந்தனார் தலைசிறந்த பேச்சாளரும் ஆவார். 1940களிலும் 1950களிலும் ஈழத்துப் பத்திரிகைகள்

வேந்தனாரின் சொற்பொழிவுகளைப் பெரிய தலைப்புகளுடன் முழுமையாகவும், பகுதிகளாகவும் வெளியிட்டுப் பெருமைப்படுத்தின.

வேந்தனார் தமது எழுத்தாலும் பேச்சாலும் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழர் பண்பாடு, தமிழர் உரிமை, சமூகநலன் என்பனவற்றிற்கு முதன்மை கொடுத்து உணர்ச்சியுடன் செயற்பட்டவர். ஆசிரியப் பணியினால் மாணவர்கள் மத்தியிலும் இத்தகைய உணர்வுகளை ஊட்டியவர். இவற்றால் பண்டிதர் பரம்பரையில் இருந்து சிறிது வேறுபடுத்தியும் நோக்கப்பட்டார்.

05-11-1918இல் யாழ்ப்பாணம் வேலணையூரில் பிறந்து, ஈழத்தமிழ் உலகில் முடிசூடா வேந்தனாகக் கால்நூற்றாண்டு ஆட்சி செலுத்திய வித்துவான் வேந்தனார் 18.09.1966இல் அமரர் உலகடைந்தார்.

இரண்டாம் பதிப்புக்கான

# முன்னுரை

ஈழவிடுதலைப் போராட்டக் காலத்தில் ஈழத்தமிழர்களாகிய எமக்கு ஏற்பட்ட இழப்புகள் எண்ணற்றவை. எமது இளந்தலை முறையினரை, மக்களைப் பல்லாயிரக்கணக்கில் இழந்தோம். எமது கலை, பண்பாட்டு அடையாளங்களை இழந்தோம். எமது நாட்டு எழுத்தாளர்களின் இலக்கிய ஆக்கங்களை இழந்தோம். இத்தகைய இழப்புகளின் மத்தியில் உயிர்ப்பு முயற்சிகளும் நடைபெறுகின்றன. பழைய நூல்கள் மீள் பதிப்புப் பெறுவதும் அத்தகைய முயற்சிகளுள் ஒன்றாகும்.

எனது தந்தை வித்துவான் வேந்தனாரின் கவிதைகள், கட்டுரைகள், சொற்பொழிவுகள் என்பனவற்றைத் தொகுத்து நூல் வடிவில் வெளிக்கொணர விரும்பினேன். எனினும் அதனைச் செயற்படுத்தச் சூழல் இடங் கொடுக்கவில்லை. நாம் பேணி வைத்திருந்த வேந்தனாரின் ஆக்கங்கள் அனைத்தையும் ஈழ விடுதலைப் போராட்டக் காலத்தில் இழந்துவிட்டோம். போர்ச்சூழல், புலம்பெயர்வு, அழிவுகளினால் ஏற்பட்ட மனச்சோர்வு என்பன நெடுங் காலப்பகுதியைக் கடக்க வைத்த நிலையில் தற்பொழுது வேந்தனாரின் 'கவிதைப் பூம்பொழில்' என்ற நூலை இரண்டாம் பதிப்பாக வெளி யிடுவதில் ஓரளவு மனநிறைவு அடைகின்றேன்.

1964ஆம் ஆண்டில் வெளிவந்த இந்நூல் இன்று கிடைப்பது அரிது. அதனால் வேந்தனாரின் கவிதை ஆக்கங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற தனிவிருப்புடனும், ஈழத்து இலக்கிய ஆக்கங்கள் பல அழிந்தும், கிடைப்பதற்கு அரிதாகவும் இருப்பதனால் அவற்றைப் பேணி எமது எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க வேண்டியது அவசியம் என்ற பொது நோக்குடனும் இந்த இரண்டாம் பதிப்பு வெளிவருகின்றது.

வித்துவான் வேந்தனார் 1964ஆம் ஆண்டு வரை எழுதிய கவிதைகள் பலவற்றின் தொகுப்பாகக் 'கவிதைப் பூம்பொழில்' அமைந்துள்ளது. இத்தொகுப்பில் இடம் பெறாத பல கவிதைகள் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளிவந்தனவாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும், கையெழுத்துப் பிரதிகளாகவும் இருந்தன. இரண்டாம் பதிப்புக்கான இந்த முன்னுரையை எழுதும்பொழுது என்

நினைவில் வரும் சில கவிதைகளை இங்கு குறிப்பிடுவது பொருந்தும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கல்வி ஒலிபரப்புப் பகுதியினரின் பாலர் வெளியீடுகளில் வேந்தனாரின் பாடல்கள் பல இசையமைப்புடன் வெளிவந்தன.

*ஆசை மாமா என்தன் மாமா*
*அருமை யான மாமா*
*நேச மாக என்னை நினைத்து*
*நெஞ்சம் உருகும் மாமா*

என்று தொடங்கும் 'மாமா' பாடலும் அவற்றுள் ஒன்றாகும். இப்பாடலைச் சிறுவயதில் நான் பாடி மகிழ்ந்துள்ளேன். 'அக்கா', 'மாம்பழம்' முதலான இனிமையான குழந்தைப் பாடல்களும் இவரால் பாடப்பட்டன. 1961ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கச்சேரியின் முன்பாக நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டக் காலத்தில் வேந்தனார் 'அறப்போர்க்கு அறைகூவல்' என்ற தலைப்பிலே தொடர்ச்சியாகத் தமிழ் எழுச்சிப் பாடல்கள் பலவற்றை எழுதினார்.

*நாங்கள் முப்பதி லட்சம் தமிழரும்*
*நாய்களோ பெல்லிப் பேய்களோ*
*நீங்கள் மாத்திரம் மனிதரென்று எண்ணுதல்*
*நீதியோ தெய்வம் ஏற்குமோ*

*குந்தி நடக்கும் கிழவ ரோடு*
*கூனற் கிழவி மாரும்*
*செந்த மிழ்க்காய் சாவோம்* என்று.....

என வரும் சில பாடல் வரிகள் அன்று என் மனதிலே பதிந்தவை. 'அல்லலுக்கு ஒரு ஐம்பத்தெட்டு'- 'அறப்போர்க்கு வாரீர்' முதலான எழுச்சிப் பாடல்களும் இவரால் இயற்றப்பட்டன. மேலும் வாழ்த்துப் பாக்கள், வரவேற்புப் பாக்கள், பெரியோர் பற்றிய பாடல்கள் எனப் பலவற்றையும் இயற்றியிருந்தார்.

'கவிதைப் பூம்பொழில்' இரண்டாவது பதிப்பில் வேந்தனாரின் கவிதைகள் அனைத்தையும் சேர்த்து வெளியிட விரும்பினேன். இரண்டு ஆண்டுகள் முயற்சித்தும் பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகள் அனைத்தையும் பெற முடியவில்லை. இந்நிலையில் 'திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சி'யையும், 'உற்றதுணை' 'காதற்

கலைவாழ்வினில்' ஆகிய இரண்டு கதைப்பாடல்களையும் மட்டுமே இப்பதிப்பில் இணைக்க முடிந்தது.

வித்துவான் வேந்தனார் ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றிலே தேசிய எழுச்சிக் காலக் கவிஞராகவும், புதிய தலைமுறைக் கவிஞர் களுக்கு வழிகாட்டிய பழைய தலைமுறைக் கவிஞராகவும், குழந்தைக் கவிதைகளின் முன்னோடியாகவும், ஓசைநயமும் உணர்ச்சியும் மிக்க கவிதைகளைப் புனைவதிலே தனித்தன்மை பெற்றவராகவும் நோக்கப் பட்டுள்ளார்.

கவிஞர் என்ற முறையில் வேந்தனார் தமக்கெனத் தெளிவான ஒரு கொள்கையுடன் - தன்னுணர்வுடன் செயற்பட்டுள்ளார். இவரது 'கவிஞன்' என்ற கவிதையில் இதனைத் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். மரபு வழியான கல்விப் பரம்பரையில் வந்த வேந்தனார் இவ்வுணர்வினாலேயே எளிமையான பொருட்புதுமை கொண்ட கவிதைகளை எழுதினார்.

வேந்தனாரின் பெரும்பாலான கவிதைகள் மொழி உணர்வும் இன உணர்வும் நாட்டுப்பற்றும் உடையனவாக, தமிழர் வாழ்வில் மறுமலர்ச்சியை விரும்புவனவாக அமைந்துள்ளன. வேந்தனாரின் கவிதைகளிற் காணப்படும் இப்பொதுப் பண்புகள் 'கலைத்தேவி கழல் பரவல்', 'வீறு கொண்ட தமிழன்', 'வீரர் முரசு', 'உரிமை வாழ்வு காண்போம்' ஆகிய கவிதைகளிலும், 'அவளும் அவனும்' என்ற கவிதைக் கடிதமாக அமைந்த காவியத்திலும் முனைப்புப் பெற்றுள்ளன.

தமிழர் உரிமை பெற்று மறுமலர்ச்சியுடன் பண்டைய வீர வாழ்வு வாழ்வதற்கு ஆயுதப் போராட்டமே உகந்தது என்ற கருத்தில்

*பாரினில் தமிழர் மீண்டும்*
*படைக்கலம் எடுத்தல் வேண்டும்*

என்று பாடியவர் வேந்தனார். இக்கருத்திலேயே 'கலைத்தேவி கழல் பரவல்' என்னும் கவிதையில் கலைத் தெய்வத்தின் முன் ஆயுதங்களை வைத்து வணங்கி புத்துணர்வையும் போர்விறலையும் பெறுமாறு இளந்தமிழருக்கு வேந்தனார் உணர்வு ஊட்டுகிறார்.

*புத்தகங்கள் பலஅடுக்கிப் பூக்கள் தூவிப்*
*புதுக்கரும்பும் நறுங்கனியும் படைத்துப் போற்றி*
*எத்தனையோ நூற்றாண்டாய் ஏத்தி ஏத்தி*
*எழிலாரும் கலைமகளை இரந்து விட்டோம்*
*புத்துணர்வும் போர்விறலும் பொலிய வேண்டில்*

*புகழ்பூத்த இளந்தமிழர் புகலக் கேண்மின்*
*கத்தியுடன் ஈட்டிவாள் தீட்டி வைத்தே*
*கலைத்தேவி கழல்பரவிக் கடல்போல் ஆர்ப்போம்*

*இழந்தொழிந்த அரசுரிமை எய்தும் வீரம்*
*எமக்களிப்பாய் கலைமகளே என்று கேட்போம்*

*மற்றவர்களின் ஆட்சியின் கீழ் வாழா மானம்*
*மறத்தமிழர் குலம்பெற நாம் வணக்கஞ் செய்வோம்*

*நலமாண்ட நம்நாட்டை நாமே ஆளும்*
*நல்வாழ்வும் தருகவென நயந்து கேட்போம்*

என வரும் கவிதை வரிகள் ஊடாக வேந்தனார் தமது உணர்வுகளை, கருத்துக்களை உணர்த்தியுள்ளார்.

'அவளும் அவனும்' என்னும் காவியம் முழுக்க முழுக்க வேந்தனாரது மொழி, இன, நாட்டு உணர்வினை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இரசிகமணி கனக. செந்திநாதன் 'ஈழத்துப் பேனா மன்னர்கள்' வரிசையில் 13-11-1956இல் வேந்தனார் பற்றி எழுதிய பொழுது இக்கவிதை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அதனால் இது 1956ஆம் ஆண்டுக்கு முன்னர் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

*காதலால் நீரும் நானும்*
*கலந்திடும் புதிய வாழ்வில்*
*சாதல்தான் வருமென் றாலும்*
*தளர்ந்திடா உள்ளத் தோடு*
*தீதெலாம் அடைந்து நாளும்*
*சிதைந்திடும் தமிழர் வாழக்*
*காதலால் உழைத்தல் வேண்டும்*
*கலையின்மேல் ஆணை இட்டேன்*

என அவளும்

*காதலாற் கூடி நாங்கள்*
*களித்திடும் புதிய வாழ்வில்*
*சாதல்தான் நேர்ந்திட் டாலும்*
*தமிழர்க்காய் உழைப்போம் என்றே*
*ஓதுமுன் உரைகள் என்தன்*

*உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளம்*
*மோதிடும் விடுத லைப்போர்*
*வெறிதர விழிப்புக் கொண்டேன்*

என அவனும் கூறும் பகுதிகள் வேந்தனாரின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றன. தொடர்ந்து தமிழர்களின் தாழ்வு நிலைகள், தாழ்வுநிலைகளில் இருந்து விடுதலை பெறத் தனியாட்சியே வேண்டும், தனியாட்சி பெற எங்கள் அரசியல் தலைவர்களை நம்பமுடியாது, எங்கள் இன்னலைத் துடைக்கத் தன்னலமற்ற தலைவன் தோன்ற வேண்டும், இளைஞர் கூட்டம் தொண்டராய் எழுதல் வேண்டும் முதலான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

*தமிழர்கள் உலகில் மீண்டும்*
*தலையெடுத் துலவும் காலம்*
*தமிழர்கள் காண்ப தென்றால்*
*தனியர சாட்சி வேண்டும்*

*தக்கவர் என்று நாங்கள்*
*தழுவிய தலைவர் பல்லோர்*
*குக்கல்கள் போல ஆள்வோர்*
*கொள்கையை ஏற்றுத் தங்கள்*
*மக்களும் உறவும் வாழ*
*வாழ்ந்துதம் மானம் விற்றார்*

*தன்னல மற்ற வீரத்*
*தலைவனே தோன்றி எங்கள்*
*இன்னலைப் போக்க எண்ணி*
*இடைவிடா துழைத்தல் வேண்டும்*

*நாட்டிற்காய்ப் போரில் மாய்ந்து*
*நடுகல்லில் நின்ற வீரர்*
*பாட்டிற்கே விருந்தாய் வாழப்*
*பரம்பரை உணர்ச்சி இன்றி*
*வீட்டிற்கே உழைத்து வாழ்தல்*
*வீரமோ விழித் தெழுந்து*
*நாட்டிற்காய் தொண்டு செய்வோம்*
*நம்தமிழ் இளைஞர் வாரீர்*

*நெஞ்சினில் தாய்நாட் டன்பு*
*நிலவிடும் புதிய வாழ்வும்*
*அஞ்சிடோம் அடிமை வாழ்வை*
*அகற்றுவோம் என்ற வீறும்*
*நஞ்சினை அமுத மாக*
*நயந்துணும் சால்பும் கொண்ட*
*வெஞ்சின மறவர் கோடி*
*விரைந்தனர் தமிழர் வாழ்ந்தார்*

என வரும் பகுதிகளைப் படித்தபொழுது வேந்தனாரின் தீர்க்கதரிசனம் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

'கவிதைப் பூம்பொழில்' இரண்டாவது பதிப்பு ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரால் வரவேற்கப்படும் என நம்புகின்றேன். இப்பதிப்பினை வெளியிடு வதற்கு அடிப்படையாக வேந்தனாரின் 'கவிதைப் பூம்பொழில்', 'திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும்' ஆகிய நூல் களைத் தந்துதவிய எனது தம்பி திரு. இளஞ்சேய் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றி. மேலும் 'தினகரன்' பத்திரிகையில் வந்த கதைப்பாடல்களைப் பெற்றுக்கொள்ள உதவிசெய்த பேராசிரியர் தில்லைநாதன், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் றமீஸ் அப்துல்லா ஆகியோருக்கும் எனது நன்றிகள். நிறைவாக இம்முயற்சியில் என்னுடன் ஒத்துழைத்த எனது கணவர் திரு. சின்னையா அவர்களுக்கும், 'கவிதைப் பூம்பொழில்' இரண்டாவது பதிப்பினை வடிவமைத்து வெளியிடும் மித்ர வெளியீடு நிறுவனத்தி னருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள்.

கலையரசி சின்னையா

2, Sardinia Avenue
Glenwood
NSW 2768
Australia

*January 2010*

# பொருளடக்கம்


**தெய்வம்**

1. திருநல்லூர்க் குயிற்பத்து
2. கதிர்காம யாத்திரைப் பத்து
3. தெய்வக் காதல்
4. கலைத் தெய்வம்
5. கலைத்தேவி கழல்பரவல்

**தமிழ்**

1. செந்தமிழ்த்தாய் வழிபாடு
2. செந்தமிழே எங்கள் திரு
3. செந்தமிழ்த்தாய் வாழ்த்து
4. தமிழின்பம்

**சான்றோர்**

1. தெய்வப் புலவன்
2. கம்பன் தந்த கவிதை
3. நாவலன்
4. நாவலன் சீர்
5. ஞானத் திருநாடு
6. காவலன்
7. காவலன் சீர்
8. வாழ்க காந்தீயம்
9. சத்தியப் போர்வீரன் காந்தி
10. வீரனெங்கள் பாரதி
11. தங்கத் தமிழ்ப் புலவன்
12. உலகத்தில் ஒரு வீரன்

**குழந்தை மொழி**

1. நல்லூர்
2. அம்மாவின் அன்பு
3. பாட்டி
4. வள்ளி
5. பவளம்

6. ஆறுமுக நாலவர்
7. பொன். இராமநாதன்
8. புலவர் கோன்
9. நொண்டி
10. எங்கள் வீட்டுப் பூனை
11. புள்ளிக் கோழி
12. பறவைக் குஞ்சு
13. மல்லிகைப் பூந்தோட்டம்
14. வெண்ணிலா
15. இளமைப் பருவம்
16. மான்
17. மயில்
18. குயில்
19. கூவுதே குயில்
20. பார்க்குந் தெய்வம்
21. நாட்டில் அன்பு
22. ஊஞ்சல் ஆடுவோம்
23. பந்தடிப்போம் நாங்கள்
24. இளநீர் குடிப்போம்
25. கரும்பு தின்போம்
26. உதவி
27. செயல்
28. ஒழுக்கம்
29. கொடிய மொழிகள்
30. பச்சைக் கிளியின் பழைய நினைவுகள்
31. கூண்டிற் கிளி
32. அணில்
33. கீரிமலை
34. பண்ணைப் பாலம்
35. இனிய மொழிகள்

**நாடு**

1. இலங்காதேவி வாழ்க
2. இலங்கை எங்கள் நாடு
3. கொடி தாங்குவோம்
4. தீயணைத்திடக் கூடுங்கள்
5. சுதந்திர வெள்ளம்

6. உழவு
7. ஒன்று சேர்வோம்
8. உலகம் எங்கள் தாயகம்

## வாழ்வு

1. நாமகள் வழிபாடு
2. அன்பின் சாயல்
3. கவிஞன்
4. வீறுகொண்ட தமிழன்
5. வீரர் முரசு
6. கைதொழுவேன்
7. உரிமை வாழ்வு காண்போம்
8. எழுத்தாளன் உறங்குவானோ
9. புதுமைக் காதல்
10. காதற் கனல்
11. நன்றியுள்ளம்
12. கனவு தந்த காதல்
13. இன்று பொங்கல்
14. தீபாவளித் திருநாள்

## காவியம்

1. கற்பனைக் காதல்
2. அவனும் அவளும்

## இரண்டாம் பதிப்பில் இணைக்கப்பட்டவை

1. திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சி
2. உற்றதுணை
3. காதற் கலைவாழ்வினில்....

# தெய்வம்

# 1. திருநல்லூர்க் குயிற்பத்து

1. இன்பத் தமிழின் தீஞ்சுவைபோல்
இனிமை பரப்பும் இளங்குயிலே
அன்பர்க் கினியான் ஆறுமுகன்
அமரர் கோமான் அருளாளன்
துன்பப் பிறவி தொலைத்திடுவோன்
தொல்லோன் நல்லூர்த் திருமுருகன்
என்பும் உருக்கி எமையாள்வோன்
ஈசன் மைந்தன் வரக்கூவாய்.

2. கல்லுங் கனியக் கூவியுளங்
களிக்கும் குயிலே கற்றுணர்ந்தோர்
சொல்லும் பொருளுங் கடந்தானைத்
தூய ஞானச் சுடர்விளக்கை
அல்லும் பகலும் அடியார்கள்
அழுதும் தொழுதும் அருள்வேண்டும்
நல்லூர்க் கந்தப் பெருமானை
நயந்து நம்பால் வரக்கூவாய்.

3. கன்னற் சாற்றின் சுவைநாணக்
கானம் பொழியுங் கருங்குயிலே
அன்னை தனிலும் மிகநல்லோன்
அவுணர் குலத்தை வேரறுத்தோன்
இன்னற் பிறவி எய்தாமல்
எம்மைக் காக்கும் இளஞ்சேயோன்
தென்னை செழிக்குந் திருநல்லூர்ச்
செவ்வேட் பெருமான் வரக்கூவாய்.

4. தெள்ளத் தெளிந்த அமுதினிசைத்
தேனைச் சொரியுந் தீங்குயிலே
வள்ளிக் குகந்த மணவாளன்
மாலோன் மருகன் மறைவல்லோன்
புள்ளிக் கலாப மயில்வீரன்
புனிதன் போக்கு வரவில்லோன்
விள்ளற் கரியான் திருநல்லூர்
வெற்றி வேலன் வரக்கூவாய்.

5. பண்ணின் பயனாம் குரலெடுத்துப்
பாடுங் குயிலே பாவாணர்
கண்ணுங் கருத்துங் களிகூரக்
காட்சி கொடுக்குங் கதிர்வேலோன்
உண்ணின்(று) உயிர்கள் உடனாகி
ஒன்றாய் வேறாய் உறைந்திடுவோன்
நண்ணும் அடியார் நலம்புரப்போன்
நல்லூர்க் கந்தன் வரக்கூவாய்.

6. எங்கும் இசையின் நலங்கனிய
இன்பம் நல்கும் எழிற்குயிலே
சங்கம் இருந்து தமிழாய்ந்தோன்
தவத்தோர் பரவுந் தண்ணளியான்
கங்கை மைந்தன் களிற்றுமுகக்
கடவுள் பின்னோன் காங்கேயன்
கொங்கின் சோலைத் திருநல்லூர்க்
குமரப் பெருமான் வரக்கூவாய்.

7. கொந்தார் சோலைக் கொம்பிருந்து
கூவுங் குயிலே குலமகளிர்
செந்தீ மெழுகாய் நெஞ்சுருகித்
திருமுரு காற்றுப் படைபாடச்
சிந்தா நின்ற சேல்விழிநீர்
தீபம் வளர்க்கும் நெய்யாகி
நந்தா அன்பின் நலங்காட்டும்
நல்லூர்க் கந்தன் வரக்கூவாய்.

8. அள்ளி அருளின் விருந்தளிக்கும்
அமுதக் குயிலே அடியார்கள்
உள்ளம் உருகி ஊனுருகி
ஊற்றாய்க் கண்ணீர் வார்ந்தோடக்
கள்ளந் தவிர்ந்த மெய்யன்பால்
கருணைக் கடலே என்றேத்தும்
வள்ளற் பெருமான் திருநல்லூர்
வடிவேற் கந்தன் வரக்கூவாய்.

9. தேமாங் கனிகள் தேன்சொரியச்
சிந்தை சிறந்து கூங்குயிலே
பூமாண் கடம்ப மலர்மாலை
புரளும் மார்பன் பொன்னகரின்
கோமான் தேவ குஞ்சரியின்
கொழுநன் சேவற் கொடிவீரன்
பாமாண் புலவர் பயில்நல்லூர்ப்
பதியுறை கந்தன் வரக்கூவாய்.

10. தென்றல் தவழச் செம்மாந்து
தெய்வக் கானஞ் செயுங்குயிலே
குன்றம் எறிந்தோன் குறுமுனிக்குக்
கொழுந்தீந் தமிழின் புலங்கொடுத்தோன்
மன்றல் கமழும் மலர்க்கூந்தல்
மங்கை உமையாள் மகிழ்புதல்வன்
நன்று நயந்தோர் ஞானச்சொல்
நல்லூர்க் கந்தன் வரக்கூவாய்.

# உ. கதிர்காம யாத்திரைப் பத்து

1. அன்பின் உருவாய் அமைந்தானை
ஆறு முகனை அடியார்கள்
என்பும் உருக நின்றேத்தும்
ஈசன் மகனை இன்னமுதைச்
சென்று தொழுவோம் கதிர்காமம்
திரண்டு வாரீர் தொண்டரெலாம்
என்றும் இறவாப் பேரின்பம்
எய்தும் காலம் இதுவன்றோ.

2. உலகப் பற்றை ஒழித்துள்ளம்
உருகிக் கண்ணீர் ஊற்றெடுக்க
நிலவும் ஞானப் பேரொளியாய்
நிறைந்த செவ்வேட் பெருமானைப்
புலவர் போற்றுங் கதிர்காமம்
புகுந்து தொழுவோம் புறப்படுமின்
தலைமை சான்ற பேரின்பம்
சாருங் காலம் இதுவன்றோ.

3. அன்னை தனிலும் இனியானை
அடியார் அல்லல் அறுப்பானைப்
பொன்னும் பொருளும் புணர்ப்பானைப்
போகம் ஆர்ந்த புண்ணியனைக்
கன்னல் மொழியாள் வள்ளியுளங்
கவர்ந்த கந்தப் பெருமானை
மன்னுங் கதிரை மலையேறி
வணங்க வாரீர் வாழ்ந்திடுவோம்.

4. கண்ணார் ஒளியே கதிர்காமக்
கந்தா கருணைப் பெருங்கடலே
விண்ணோர் தலைவா வெஞ்சூரை
வென்ற வீரா என்றேத்தித்
தண்ணார் சுவைத்தீந் தமிழ்பாடிச்
சார்வோம் வாரீர் கதிர்காமம்
உண்ணா ரமுதாந் திருமுருகன்
ஒளிசேர் அடிகள் தொழுதுய்வோம்.

5. மூவர் கோனே வேல்முருகா
மூவாச் சுவைதீந் தமிழாய்ந்த
தேவ தேவா கதிர்காமச்
செல்வா காவாய் என்றேத்தி
ஆவல் கனியக் கதிர்காமம்
அடைவோம் வாரீர் அன்பரெல்லாம்
மேவும் மேலாம் பேரின்ப
வீட்டின் பயனார் விருந்துண்போம்.

6. கொல்லும் புலிகள் யானைகளும்
கொடிய கள்வர் மறவர்களும்
அல்லல் புரியா வகையென்றும்
அடியார் தம்மைக் காத்தருள்வோன்
வில்லின் வீரன் வேல்முருகன்
விழைந்து மேவும் கதிர்காமம்
செல்லுந் தொண்டர் நாமெல்லாம்
திருவார் இன்பம் சேர்ந்துய்வோம்.

7. வானோர் சிறையை மீட்டருளும்
வள்ளல் மாலோன் திருமருகன்
ஊனோ டுள்ளம் உருகியழும்
உண்மை அடியார் துயர்ஒழிப்போன்

கானோ டுயர்ந்த மலைகள்நிறை
கதிர்கா மத்தைக் கண்டுதொழத்
தேனோ டினிய தினைகொண்டு
திரண்டு வாரீர் சென்றிடுவோம்.

8. தமிழுக் குருகும் பெருமானைத்
தண்ணார் கடப்பந் தாரானை
அமிழ்தின் குரலால் அடியார்கள்
அழைக்கும் ஆறு முகத்தானைக்
கமழுந் திருநீர் மாணிக்கக்
கங்கை ஆடிக் கைதொழுவோம்
இமிழும் புகழார் கதிர்காமம்.
எய்த வாரீர் இப்பொழுதே.

9. குன்றா அன்பின் தொண்டருளக்
கோயில் கொண்ட குமரோனை
ஒன்றாய் வேறாய் உடனாகி
உயிரோ டுறையும் முருகோனை
நன்றாய் ஞானப் பெருஞ்செல்வர்
நண்ணும் நலஞ்சேர் கதிர்காமம்
சென்றார் இன்பத் திருவுறுவோம்
திரண்டு வாரீர் தொண்டரெலாம்.

10. மங்கை உமையாள் உளம்மகிழ்ந்து
வாரித் தூக்கும் மாமணியைக்
கங்கை பெருகும் கதிர்காமக்
கந்த வேளைக் கண்டுதொழப்
பொங்கும் ஆர்வம் அலைமோதப்
போவோம் வாரீர் தொண்டரெலாம்
எங்கும் அவனாய் இலங்கியொளிர்
எழிலைப் போற்றி இன்புறுவோம்.

# 3. தெய்வக் காதல்

1. உங்கள் உயிர்நான் என்றென்றே
ஓயா துரைக்கும் என்தலைவி
திங்கள் சூடும் சிவன்மைந்தா
திருநல் லூரா திருமுருகா
எங்கும் உன்னைக் காண்கின்றேன்
என்னுள் நீயே இருக்கின்றாய்
மங்கை வள்ளி போலுன்னை
மருவி மகிழ்வேன் என்கின்றாள்.

2. நல்லூர் வரையும் என்னுடனே
நண்பாய் வந்த என்தலைவி
வில்லோர் முருகன் மயில்மீதில்
விளங்குங் கோலங் கண்டவுடன்
எல்லா மானாய் வேல்முருகா
ஈசன் மைந்தா என்தலைவா
நல்காய் உன்தன் திருவருளை
நானுன் அடிமை என்கின்றாள்.

3. கொந்தார் கூந்தல் புறந்தாழக்
கொஞ்சும் காதல் மொழிபேசி
சிந்தா மணிபோல் என்னுடனே
சேர்ந்து வந்த என்தலைவி
நந்தா விளக்கார் மஞ்சமிசை
நல்லூர்க் கந்தன் வரக்கண்டு
நெஞ்சார் காதல் நிழலாட
நீயென் தலைவன் என்கின்றாள்.

4. கத்தரிப் பூநிறப் பட்டாடை
கட்டுதல் வடிவு எனக்கென்று
முத்தினை வென்ற புன்முறுவல்
முகிழ்த்துடன் வந்த என்தலைவி
பத்தர்கள் கூடி நல்லூரா
பன்னிரு கையா என்றவுடன்
கொத்தலர் கூந்தல் குலைந்துவிழக்
கும்பிட் டாவி குழைகின்றாள்.

5. ஆர்த்தலை மோதுங் காதலுடன்
ஆவி குளிர்ப்பச் சேல்விழியால்
பார்த்தெனை உருக்கும் என்தலைவி
பல்லா யிரம்பேர் பார்த்துநிற்கக்
கார்த்திகை விழாவில் நல்லூரான்
கவினைக் கண்டு களித்தவளாய்
ஈர்த்தெனை ஆள்வாய் திருமுருகா
இனியான் பிரியேன் என்கின்றாள்.

# ૫. கலைத் தெய்வம்

1. தென்றலின் இன்பப் பேறாய்த்
தீஞ்சுவைக் கனியின் சாறாய்க்
குன்றினிற் சுரந்து பாயும்
குளிர்புனல் அருவி ஊற்றாய்
இன்றமிழ்ப் பயனாய் யாழின்
எழுதரும் இசையாய்த் தோன்றி
நின்றெமைப் புரக்குந் தெய்வம்
நிறைகலைத் தெய்வ மொன்றே.

2. வள்ளுவர் உளத்தில் நின்று
வையகம் வாழும் வண்ணம்
தெள்ளிய குறளைத் தந்து
செந்தமிழ் வளர்த்த தெய்வம்
உள்ளொளி பெருக்கிக் கற்பின்
உயர்ச்சியால் அறிஞர் நெஞ்சை
அள்ளிடும் சிலம்பைத் தந்தே
அறநெறி வளர்த்த தெய்வம்.

3. கல்லினை உளியால் வெட்டிக்
கவின்வளர் உருவம் ஆக்கி
நல்லுயிர்ச் சாயல் வீச
நல்கிடும் கலைஞன் கையும்
வில்லினை வளைத்துப் பாணம்
விடுத்திடும் வீரன் கையும்
மெல்லிதழ்க் கமலப் போதும்
வீற்றிருந் துவக்குந் தெய்வம்.

**வித்துவான் க. வேந்தனார்**

4. கொஞ்சிடுங் குழந்தை கூறும்
   கொழுஞ்சுவை மழலை இன்பம்
விஞ்சிடும் பொருளை இல்லார்
   விருந்துணக் கொடுக்கும் இன்பம்
நெஞ்சினில் வேலைத் தாங்கி
   நின்றுயிர் விடுக்கும் இன்பம்
எஞ்சலில் தனது பண்பாய்
   இலங்கிடும் கலைமாத் தெய்வம்.

5. கோல மயிலின் கூத்தாகிக்
   கூவுங் குயிலின் குரலாகி
நீல வானின் வில்லாகி
   நிறைநாண் மதியின் ஒளியாகிக்
கால மழையின் கருவாகிக்
   கவிஞர் உளத்தில் விளையாடி
ஞாலம் புதுக்கும் கற்பகமே
   நாவின் கிழத்தி அருள்புரிவாய்.

# ௫. கலைத்தேவி கழல்பரவல்

1. புத்தகங்கள் பலஅடுக்கிப் பூக்கள் தூவிப்
புதுக்கரும்பும் நறுங்கனியும் படைத்துப் போற்றி
எத்தனையோ நூற்றாண்டாய் ஏத்தி ஏத்தி
எழிலாருங் கலைமகளை இரந்து விட்டோம்
புத்துணர்வும் போர்விறலும் பொலிய வேண்டில்
புலம்பூத்த இளந்தமிழர் புகலக் கேண்மின்
கத்தியுடன் ஈட்டிவாள் தீட்டி வைத்தே
கலைத்தேவி கழல்பரவிக் கடல்போல் ஆர்ப்போம்.

2. குழந்தைபோல் எழில்நிரம்பிக் குலுங்கிப் பூத்த
கொடிமுல்லைக் குறுதுணையாய்க் கொடித்தேர் ஈந்த
இளந்தமிழன் கலையுணர்வின் ஏற்றத் தாலே
இறுமாந்த தமிழகத்தின் இறைவன் அன்றோ;
வளங்கனிந்த தமிழ்நாட்டை வந்தோர் ஆள
மலர்தூவிக் கலைமகளை வணங்கி என்னாம்
இழந்தொழிந்த அரசுரிமை எய்தும் வீரம்
எமக்களிப்பாய் கலைமகளே என்று கேட்போம்.

3. வெற்றியுடன் கொடைமுரசை முழக்கும் வீரர்
மூவேந்தர் தமிழகத்தை ஆண்ட முன்னாள்
கொற்றவையின் கோலமுடன் கலைத்தெய் வத்தைக்
கும்பிட்டுக் கூத்தாடிக் கொற்றங் கொண்டார்
கற்றவர்கள் வீரமின்றிக் கைகள் கூப்பிக்
கலைமகளைத் தொழுங்காட்சி கண்டோம் இந்நாள்;
மற்றவர்கள் ஆட்சியின்கீழ் வாழா மானம்
மறத்தமிழர் குலம்பெறநாம் வணக்கஞ் செய்வோம்.

வித்துவான் க. வேந்தனார்

4. போர்க்கலையை அறக்கோலம் செய்து போற்றிப்
பொருட்பாலில் வகுத்துரைத்த புலமை ஆளர்
கார்க்கடலைப் போலார்த்துக் கங்கை கொண்டு
கடாரத்தை வென்றாண்ட கழற்கால் வீரர்
போர்க்கெழுநாள் கொற்றவையைப் போற்றிச் செய்யும்
புதியவிழா இலக்கியத்தின் பொருளாய் வாழ
ஆர்க்கெனினும் அடிமைகளாய் வாழும் நாங்கள்
அருங்கலையின் விழாவெடுத்தல் அறமோ சொல்வீர்.

5. உலகாண்ட தமிழரினம் ஓம்பித் தந்த
உயிர்க்கலையை அடிமைகளாய் உலையும் நாங்கள்
பலவாண்டாய்ப் பாராட்டி வளர்த்திட் டாலும்
பாரிலுள்ளோர் அதன்பெருமை பகர மாட்டார்
புலமாண்ட கலைமகளைப் போற்றும் வீரப்
புதல்வர்களும் புதல்வியரும் புலமை யோடு
நலமாண்ட நம்நாட்டை நாமே ஆளும்
நல்வாழ்வும் தருகவென நயந்து கேட்பீர்.

தமிழ்

# 1. செந்தமிழ்த்தாய் வழிபாடு

**கட்டளைக் கலித்துறை**

1. செந்தமிழ்த் தாயைத் திருவளர்
செல்வியைத் தென்பொதியக்
கொந்தலர் சோலையி லேழிசை
கூவுங் குலக்குயிலை
நந்தலில் எல்லை நறைபொழி
கொண்டலை நன்றெனுளம்
வந்து புகுந்திட மாமறை
யாட்டியை வாழ்த்துவனே.

2. தொன்மை மலர்ந்தா ரினிமை
பழுத்துச் சொலும்பொருளோர்
தன்மை கனிந்தோங் கிளமை
செறிந்து தவழ்திருவே
பொன்னையொப் பாய்புக லென்றுன்
கழலிணைப் போதடைந்த
என்னையாண் டுன்மக் களுளொ
ருவனா யெடுத்தருளே.

3. சொல்லினுங் கேட்கினுஞ் சிந்தை
நிறைக்கினுந் தோன்றுமின்ப
நல்லியல் நோக்கித் தமிழென்
றறைந்தனர் நல்லறிஞர்
மெல்லிய லேயவ் விழுப்பொருள்
ஆயாது வேறுசொல்லும்
புல்லியர் தம்மையான் புல்லா
வகைநீ புரிந்தருளே.

4. பொருளா ரிலக்கணச் செவ்வியும்
நாற்பா புகல்வகையும்
திருவார் திணைநெறிப் பண்பும்
பிறவுந் திகழ்ந்துநனி
அருளார் வினைகள் பலசெய்
தரும்புக ழாருமுனை
மருளார் உளத்தர் தனித்தியங்
காயெனும் மாற்றமென்னே?

5. என்னே யிவர்தம் அறிவின்
தகைமை யிரும்புகழார்
பொன்னே யுனதின் பொருணலந்
தோயும் புலமையிலார்
கொன்னே யுனைக்குறை கூறினும்
யானுளங் கொள்ளுவனோ
தன்னேர் பிறிதி லுனதருள்
வைப்பெனைத் தாங்கிடுமே!

6. திங்கட் குழவி தவழுந்
திருமுடிச் செல்வனுஞ்சீர்
தங்கும் புலவனா யுன்னல
முண்ட தகையையெனிற்
பொங்கும் பொருளார்ந் தினிமை
கனிந்த பொலங்கொடியே
இங்குன் புகழை யெடுத்தார்
முழுது மியம்புவரே.

7. "மாணிக்க வாசகர்" வண்மறைக்
காவில் மணிக்குயிலாய்
ஆணிப்பொன் னம்பலத் தண்ணலைக்
கூவும் அருட்குயிலே

காணி னுளக்கண் பொலியும்
பொருளே கடலமுதே
பேணி யுனதடிப் போதிணை
யான்புகழ் பேறருளே.

8. அருளே யினிமை கனிந்த
அமுதே யரும்புகழார்
திருவே சிவம்பொலி சேக்கிழார்
உள்ளந் திகழொளியே
பொருளே புலவ ருளமார்
புதுநலப் பூங்கொடியே
தெருளே வளருன் திருவடி
போற்றிடுஞ் சீரருளே.

9. தீயிற் கிடந்துநீ ரிற்சென்று
செப்பருந் திண்முதலை
வாயிற்சேர் பிள்ளையைத் தந்து
மறைக்காட்டு வண்மைவளர்
கோயிற் கதவந் திறந்து
புகழார்ந்த கோமளமே
தாயிற் பெரிதும் அருள்சுரந்
தென்னைநீ தந்தருளே.

10. பொன்னுற்ற நீண்முடி மன்னர்
புரந்த பொலங்கொடியே
பன்னுற்ற செம்பொருட் பாடல்
மலிந்து பயன்தரலால்
மன்னுற்ற வுன்சீர் வழுத்திப்
பணியா வளர்வினையேன்
உன்னுற்ற தொண்டர் உறவுபெற்
றுய்ய உவந்தருளே.

11. குன்றாகிய புகழ்க் கொள்கல
மேயுன் கொடைபுகழ்ந்து
சென்றா ரளித்த செழும்பொருள்
வைப்பைச் சிறியவனும்
நன்றாய் முகந்து நறைநனி
யுண்டு நலமுறவுன்
பொன்றாள் வணங்கிப் புகழ்ந்தேன்
அருளப் பொருளெனக்கே.

12. தேவர் மணிமுடி சூடித்
திருநின்றார் சிந்தைகொளும்
மூவ ரலங்கல் புனைந்து
திருக்கோவை முத்தணிந்து
காவ லிளங்கோ சிலம்பொலி
செய்தாடுங் கண்மணியே
ஆவ துனதரு ளல்லா
லடியேற்கிங் கார்துணையே.

13. தொல்காப் பியனெனும் உன்னருந்
தோன்றல் துறைபலவும்
பல்காற் பயின்றுன் பழைமை
பழுத்த பரும்புகழை
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்
பியந்தனில் ஓதினனால்
நல்கா யதன்பயன் நான்நனி
துய்க்க நறுநுதலே.

14. சிந்தா மணியிருக் கத்திருக்
கோவையந் தேனிருக்க
நந்தா வொளிசே ரகம்புற
நானூறு நன்கிருக்க

எந்தாய் உனதியல் தேர்தற்
கொருகுறை யிங்குளதோ
பிந்தா வுனதின் பொருணலந்
தந்தருள் பெய்வளையே.

15. அறியா மையிலுன் னடியிணை
போற்றா தருவினையேன்
சிறியார் செயல்விழைந் தேதிரிந்
தேனதைச் சிந்தைதனிற்
குறியா துனதளி யான்பெறத்
தந்தருள் கோதிவரும்
நெறியா ருளத்தர் நனியாய்
பொருள்செறி நேரிழையே.

16. காணற் கரியவுன் செவ்வியும்
இன்பமுங் கண்டவன்பர்
பேணத் தகுமுன் புகழ்சிறி
யேனும் பெறுவகைநீ
பூணத் தருவது பொற்பல்ல
வென்று புறக்கணித்தால்
மாணப் பொலிந்த அருளே
யெனையார் வளர்ப்பவரே?

17. கல்லைக் கலமாய்க் கடலைக்
கடக்கக் கருதறிவின்
சொல்லிற் கிறைவர் சிவனைத்
தொழவரு தூமணியே
எல்லைப் புரையும் புகழுடை
யின்பத் திளங்கொடியே
நல்லை யெனைநீ யுனதடிக்
காளாம் நலமருளே.

18. வண்ணீர் தருவையை சூழ்பாண்டி
நாட்டில் வளருமுன்சீர்
கண்ணீர் தரநின் றெடுத்துப்
புகழாக் கடையவனைத்
தண்ணீர் தருமுன் பொருட்டீங்
கடலினில் தாழவருள்
பண்ணீர் தருவையம் போற்றும்
பயன்கனி பைங்கொடியே.

19. அருளார் முருகன் பெரிதாய்
அகப்பொருள் ஆர்ந்தபெருந்
திருவே யுனதி னரும்புகழ்
பாடித்தஞ் சிந்தைநனி
யுருகார் பணியா ருவமையி
லுன்னடி யுற்றுநலம்
பருகா ரிருந்தெ னிறந்தென்
பரும்பொறை பாரினிற்கே.

20. வாயார வுன்புகழ் வாழ்த்துகின்
றேனருள் வண்மைதனிற்
சாயாத செந்தமிழ்த் தாயே
உனதருந் தாளிணைக்கே
ஓயாத வன்பென துள்ளத்தி
னூறு மொருவரம்நீ
தாயான தன்மையிற் றந்தருள்
வாயித் தமியனுக்கே.

# உ. செந்தமிழே எங்கள் திரு

1. சீர்யாத்த தொடைப்பனுவற் செந்நாவின்
செல்வரொடு சேர்ந்து முன்னாள்
பார்காத்த பாண்டியர்கள் படைத்தருளும்
முதற்சங்கப் பலகை ஏறிக்
கார்காத்த நறுங்கொன்றைக் கண்ணுதலோன்
ஆய்ந்தபுகழ் கவினும் போது
யார்காப்பார் செந்தமிழை என்றஞ்சோம்
அவனருளால் அமைந்து வாழ்வோம்.

2. மலையாகிக் கடலாகி வயலாகிக்
காடாகி வயங்கும் பாரைப்
புலியாகிக் கயலாகிச் சிலையாகிப்
புரந்தருளும் புதுமை வீறி
உலையாத பொருள்மரபும் மொழிமரபும்
உற்றுயர்ந்த ஒளியால் ஓங்கும்
கலையானப் பெருமாட்டி கனிச்சுவைத்தீந்
தமிழ்த்தாயைக் கருத்துள் வைப்பாம்.

3. நுட்பமெனும் அரும்பவிழ்ந்து நுழைபுலனாம்
போதாகி நூலோர் போற்றும்
திட்பமெனும் மணங்கமழ்ந்து தெளிவென்னும்
தேன்பிலிற்றித் துளும்பித் தோய்ந்து
செப்பமுறும் அகவிதழைத் திறந்தழைத்துப்
புலவர்களாம் சுரும்பர் உண்ண
எப்பொழுதும் விருந்தளிக்கும் சங்கநூற்
பூம்பொழிலை இறைஞ்சி வாழ்வாம்.

4. சிந்தைதனில் தேனூறச் செம்மாந்து
தமிழ்மரபின் சிறப்பை எல்லாம்
இந்தவுல கேத்திடவே எடுத்துரைக்கும
புலவீர்காள் இன்று நானும்
செந்தமிழே எங்கள்திரு என்றெடுத்தோர்
தீங்கவிதை செப்பு தற்குத்
தந்தருளும் ஆணையெனத் தமிழன்பால்
உமைவணங்கும் தவப்பே றுற்றேன்.

5. செந்தமிழே எங்கள்திரு என்றசெழுந்
தொடரெந்தன் சிந்தை யுள்ளே
கொந்தலர்தீந் தேனினுடன் கொழும்பாகும்
கரும்பூற்றும் குழைத்து ணல்போல்
அந்தமிலாப் பேரின்ப மளித்தாவி
தளிர்ப்பெய்த அருள லாலே
வந்தலரும் புலமைஒளி வழிகாட்டக்
கவிதைகளை வழங்கு கின்றேன்.

6. அறனாகிப் பொருளாகி இன்பாகி
அமைந்தொளிரும் மக்கள் வாழ்வைத்
திறனாய்வுச் செம்புலமாம் முச்சங்கப்
பண்ணைதனில் செழிக்க வித்திப்
புறமாயும் அகமாயும் வரம்பமைத்துப்
புரந்தருளும் தமிழ்ச் செஞ்சாலி
உறநாவில் செந்தமிழாய் விளைந்துயிர்க்கும்
செம்பொருளாய் ஒளிரக் கண்டோம்.

7. எழுத்தாய்ந்து சொல்லாய்ந்து பொருளாய்ந்த
இலக்கணமாய் இலங்குந் தெய்வ
விழுப்பார்தொல் காப்பியத்தின் விளைபுலத்தைப்
பாயிரத்தில் விளம்பும் மேலோன்
செழிப்பார்செந் தமிழியற்கை சிவணியநல்
நிலமென்று செப்பு வானேல்
மொழித்தாயாஞ் செந்தமிழே எங்கள்திரு
எனமொழிதல் வியப்போ சொல்வீர்.

8. உள்ளுவன உயர்வுள்ளும் உள்ளொளியாய்
இலக்கியத்தை உதவும் சான்றோர்
தெள்ளியவாய் இனியனவாய்த் திருநெறிய
செந்தமிழால் தீட்டிக் கற்றோர்
உள்ளமெனும் திரைப்பரப்பில் உயர்நோக்கம்
நிழலாட உலையா இன்பத்
தெள்ளமுதைச் சுவைத்தினிய திருவருளில்
படிந்தொளிருந் திறமை ஈவார்.

9. அன்னைதரும் முலைப்பாலும் தூய்தாக
அமையாதேல் அருந்தும் பிள்ளைக்
கின்னல்தரும் என்றுணர்வோம் இலக்கியத்தை
படைத்திடுங்கால் இனிய தூய
கன்னல்நறுஞ் சுவைமொழியாய்த் தமிழ்மரபு
கடக்காமல் கவின யாத்துத்
தொன்மைநிலைச் செந்தமிழே எங்கள்திரு
எனுஞ்சிறப்பைத் துலங்க வைப்போம்.

# 3. செந்தமிழ்த்தாய் வாழ்த்து

**முன்னிலை**

1 செந்தமிழ்ச் செல்வியாந் தெய்வமடி யிவள்
தேவர்கள் போற்றிடும் தெய்வமடி
கொந்தலர் சோலையில் ஏழிசை கூவிடுங்
கோமளப் பாவையிக் கொம்பரடி.

2 தென்றல் தவழ்ந்திடும் தென்பொதி கைமலை
தேவியிவள் வந்து தோன்றுமிடம்
கொன்றை யணிந்தவன் கோதில்சொற் பாவலர்
கூடி வளர்த்திடுங் கோதையடி.

3 சிந்தா மணிதிருக் கோவை சிலம்புடன்
செம்மை திகழ்மணி மேகலையே
நந்தா வளையுயர் குண்டல மாவிவை
நங்கை யணிந்திடும் நல்லணிகள்.

4 தெள்ளுந் திருக்குறள் முடிபுனைந்து நல்ல
சேக்கிழா ரீந்தசெங் கோல்பிடித்தே
அள்ளும் அகம்புற ஆக்கப் பெருக்குடன்
அன்னை யிவளர சாண்டிருந்தாள்.

5 ஓங்கு மிமயத்தில் விற்பொறித்தா ளிந்த
உலகம் முழுதும்பே ரொளிவிரித்தாள்
தாங்கும் அறம்பல போற்றிவைத் தாளெங்கள்
தாயிவள் மாண்பினைச் சாற்றுவமே.

6 ஆங்கில வாணரின் ஆய்வுக் கலையெலாம்
அன்னை யுளங்கொள ஆக்கிடுவோம்
ஓங்குஞ் சுதந்திர உண்மை யுணர்வினால்
உலகினை யாளவுங் கண்டிடுவோம்.

7 வாழிய செந்தமிழ் வாழியவே கலை
வண்மை கனிந்தென்றும் வாழியவே
ஊழி பலபல சென்றும் உலையாத
உண்மை ஒளியுடன் வாழியவே.

**வித்துவான் க. வேந்தனார்**

# ५. தமிழின்பம்

1 கண்ணன் ஊதுங் குழலினுங்
கனியில் ஊறுஞ் சுவையினும்
பண்ணில் ஊறும் பயனினும்
பாடுங் குயிலின் குரலினும்
உண்ணுந் தேவர் அமிழ்தினும்
ஊருந் தென்றல் வளியினும்
நண்ணும் இனிமைப் பண்பெலாம்
நல்ல தமிழின் இன்பமே.

2 சேர னெங்கோ சிலம்பினும்
சேக்கி ழாரின் தெளிவினும்
ஆரு மின்பக் கலியினும்
அன்பின் கோவை மொழியினும்
தேருஞ் சிந்தா மணியினும்
திருந்து நால்வர் அளியினும்
சேரும் இனிமைப் பண்பெலாந்
தெய்வத் தமிழின் இன்பமே.

3 தாயின் அன்புக் குரலினுந்
தண்ணி லாவின் ஒளியினும்
சேயின் மழலை மொழியினும்
தெய்வக் காதல் வழியினும்
ஆயும் புலமைத் தெளிவினும்
அள்ளும் யாழின் இசையினும்
தோயும் இனிமைப் பண்பெலாந்
தொன்மைத் தமிழின் இன்பமே.

# சான்றோர்

# 1. தெய்வப் புலவன்

1 தெள்ளுதமிழின் செம்மை உலகில்
சிறந்து நின்று வீறவே
அள்ளுமமிழ்தின் அறமும் பொருளும்
இன்ப முடனே ஆய்ந்தவன்
வள்ளுவனும் வாழ்க வாழ்க
வாழ்க வென்று வாழ்த்துவோம்
வையம்போற்றும் தெய்வப் புலவன்
வாழ்க வென்று வாழ்த்துவோம்.

2 முன்னைப்பழை மைக்காலந் தொட்டே
முதன்மை வாய்ந்த தமிழர்கள்
இன்னலின்றி வாழ்ந்த வாழ்வின்
ஏற்ற மெல்லாம் இரண்டடிச்
சின்னஞ்சிறிய பாக்க ளாலே
தெளித்துத் தேனாய்த் தந்தவன்
தெய்வப்புல வன்வள்ளு வன்சீர்
தேச மெல்லாம் பேசுவோம்.

3 பலபலவாய் உலகம் ஒன்று
பட்டி டாத பழையநாள்
அலகிலின்ப உலக நூலை
ஆக்கி யருளும் வள்ளுவன்
புலமைநெஞ்சில் புகுந்த தமிழின்
புதுமை போற்றிப் பாடுவோம்
பொலியுங்குறளின் உலகப் பொதுமைப்
பொருளை நோக்கி ஆடுவோம்.

4 உலகமொன்று பட்ட இந்நாள்
உலக நூலாய் உலவிடும்
தலைமைசான்ற குறளைத் தமிழில்
தந்த தலைவன் வள்ளுவன்
புலமையாலே உலகில் தமிழர்
புகழும் அறிவும் பூத்தன
புதியபுதிய மொழிகள் குறளின்
பொருளைப் போற்றிக் காத்தன.

5 ஆலமுண்டு தேவர் வாழ
அமுதை ஈந்தஅண் ணல்போல்
காலங்கடந்து வாழுங் குறளைக்
கன்னித் தமிழுக் கீந்தவன்
ஞாலம் பரவும் வள்ளுவப்பேர்
நம்பி என்றே பாடுவோம்
நல்லதமிழர் நாங்கள் என்றே
நயந்து கூத்துப் போடுவோம்.

# ௨. கம்பன் தந்த கவிதை

1 கம்பன் தந்த கவிதை
காலங் கடந்த கவிதை
செம்பொன் மேரு போலச்
சிறந்து வாழும் கவிதை.

2 உள்ளங் கவரும் கவிதை
உண்மை நிறைந்த கவிதை
தெள்ளுந் தமிழின் மூவாச்
செம்மை கனிந்த கவிதை.

3 கடலும் மலையும் தெய்வக்
காட்சி அளிக்கும் கவிதை
உடலும் பொருளும் உயிரும்
உலகுக் குதவும் கவிதை.

4 உலகப் பொதுமை எண்ணம்
ஊறிச் சுரக்கும் கவிதை
நிலவின் ஒளியைப் போல
நிறையும் இன்பக் கவிதை.

5 நவிலும் தோறும் புதிய
நயங்கள் தோன்றும் கவிதை
கவியின் தன்மை யெல்லாம்
காணக் கிடைத்த கவிதை.

6 தமிழில் புதிய வீறும்
தருக்கும் தந்த கவிதை
அமிழ்தில் அறத்தைக் கொட்டி
ஆண்மை வளர்த்த கவிதை.

7 அறத்தை மறந்த ஆண்மை
அழியக் கண்ட கவிதை
பிறப்பை மாற்றும் தெய்வம்
பெண்மை என்ற கவிதை.

8 கங்கை வேடன் அன்பைக்
காட்டி மலரும் கவிதை
மங்கை மாரின் காதல்
வாழ வந்த கவிதை.

9 கற்பனை கடந்த இன்பங்
காணத் தூண்டும் கவிதை
அற்புத உலகம் கோடி
ஆக்கும் அமர கவிதை.

10 கற்பின் தெய்வச் சாயல்
கவினும் கம்பன் கவிதை
பொற்பும் பொறையும் சால்பும்
பொலியும் புலமைக் கவிதை.

# 3. நாவலன்

**வெண்பா**

1 செந்தமிழும் இன்பச் சிவநெறியும் செம்மைபெற
வந்தருளும் நாவலனை வாழ்த்துவோம் - சிந்தைதனில்
நற்புலமை வீறும் நடுநிலைமைப் பண்பாடும்
உற்றிடவே நாளும் உவந்து.

2 அஞ்சாத நெஞ்சன் அருள்வீரன் ஆகமநூல்
எஞ்சாது கற்ற எழிலாளன் - மஞ்சாரும்
மேருமலை போல்நின்று வேதநெறி காத்துயர்ந்தோன்
தேருகலை நாவலனே செப்பு.

3 ஊசிமருந் தேற்றி உயிர்க்குணர்ச்சி ஊட்டுதல்போல்
பேசிச் சிவநெறியின் பேரொளியை - மாசகல
மக்க ளுளத்தேற்றி வாழ்வளித்த மாண்பாளன்
தக்கபுகழ் நாவலனே சாற்று.

4 தெய்வமிவண் நாங்களெனச் செப்பியிறு மாப்படையும்
பொய்யருரை ஏகான்மப் புன்னெறியை - வெய்யதென
நாட்டியுயர் சித்தாந்த நன்னெறியைப் போற்றிவழி
காட்டியவன் நாவலனே காண்.

5 என்றும் இளமையுடன் எங்கள் தமிழன்னை
நின்று நிலவும் நிலைக்களனாய் - ஒன்றிவளர்
தெள்ளும் உரைநடையைச் செய்தளித்த நாவலன்சீர்
அள்ளும் தமிழகத்தை ஆர்ந்து.

6 எழுத்தியல்பும் சொல்லியல்பும் ஏற்றமுடன் தேர்ந்து
வழுக்களைந்து நூற்பொருளை வாரி - விழிப்புடனே
கற்றவர் உள்ளங் களிக்க வழங்கிமகிழ்
கொற்றவன் நாவலனே கூறு.

7 சித்தாந்த பானு சிவஞான யோகிகள்போல்
சித்தாந்தக் கொள்கைச் சிவநெறியை - இத்தரையில்
செந்தமிழர் தெய்வத் திருநெறியாய்க் கண்டுரைத்த
தந்தையுயர் நாவலனே சாற்று.

8 அச்சகத்தில் நூற்பதிப்பும் ஆராய்ச்சிக் கண்டனமும்
மெச்சும் புகழார் விரிவுரையும் - எச்சமின்றி
மாற்றலரும் உள்மதிக்கும் வண்ணம் தனிமுறையில்
ஆற்றியவன் நாவலனே ஆய்ந்து.

9 அருட்பனுவல் ஆய்வும் அரசர்க்கும் அஞ்சி
உருக்குலையாத் தன்மதிப்பும் உற்ற - திருத்தோன்றல்
ஆறுமுக நாவலனார் ஆக்குந் தமிழ்மரபைத்
தேறுதலே இன்பந் தெளிந்து.

10 உள்ளத் தெளிவும் ஒழுக்கமுங் கொண்டெழுந்த
வள்ளலொரு நாவலனார் வாழ்வினிலே - உள்ளொளியாய்
நின்று சிறந்து நிழலாடும் ஈசனருள்
என்றும் எமைத்தாங்கும் ஏற்று.

**வித்துவான் க. வேந்தனார்**

# ५. நாவலன்சீர்

1 கற்பகக் காவின் நீழல்
கண்களா யிரத்தோன் போலப்
பற்பல இன்பந் துய்த்தே
பாழ்பட்டார் பயன்ஒன் றில்லார்
சுற்றமும் பொருளும் நீத்துத்
தொண்டனாய்ச் சைவங் காத்த
அற்புதன் நாவ லன்சீர்
ஆயிரம் ஊழி வாழ்க.

2 ஆகமம் அறிந்த நெஞ்சும்
அருந்தமிழ் சிறந்த நாவும்
போகமும் பொருளும் ஈசன்
பூங்கழல் என்ற வீறும்
மாகமும் மண்ணும் ஆண்ட
மன்னன்போற் சைவங் காக்கும்
வேகமும் விறலும் கொண்டோன்
வீரன்நா வலனே என்போம்.

3 ஐந்தெழுத் தோதி யோதி
அடைந்திடும் அருளின் பேறும்
சிந்தையும் சொல்லும் தூய்தாய்ச்
செயல்புரி தெய்வச் சால்பும்
நிந்தனை செய்வோர் அஞ்ச
நிமிர்ந்தொளிர் ஞானத் தேசும்
செந்தமிழ்த் திறமும் சேர்ந்தோன்
செல்வன்நா வலனே என்போம்.

4 நாவன்மைப் பெருக்கி னாலும்
நற்றமிழ் நடையி னாலும்
பாவன்மை சான்ற தெய்வப்
பனுவலாய் புலமை யாலும்
கோவென்ன எழுச்சி கொண்டு
கொழுந்தமிழ்ச் சைவங் காத்த
மாவன்மை நாவ லன்சீர்
வழிவழி வாழ்த்தி வாழ்வோம்.

5 தனியொரு மகனாய் நின்றே
சைவத்தின் தளர்ச்சி போக்கும்
முனிவன் நாவல னைப்போல
மூண்டெழும் பத்தி வீற
இனியெவர் சைவங் காப்பார்
ஈழத்தில் ஈசா என்றே
கனிவுடன் கண்ணீர் வாரக்
கைதொழு திறைஞ்சி நிற்போம்.

**வித்துவான் க. வேந்தனார்**

# ரு. ஞானத் திருநாடு

**கண்ணிகள்**

1 பல்லூழி சைவப் பயன்கனிய நாவலனை
நல்கியருள் நல்லூரே ஞானத் திருநாடு.

2 தண்ணார் தமிழ்மொழிக்கும் சைவத் திருநெறிக்கும்
கண்ணான நாவலனைக் கைகூப்பிப் போற்றுதுமே.

3 ஆதிமறை நான்கும் ஆகமமும் ஆர்வமுடன்
ஓதியுளம் தெளிந்த உரனாளன் நாவலனே.

4 சிந்தையுடன் சொல்லும் செயலும் மிகத்தூயோன்
தந்தையினும் நல்லோன் தமிழ்முனிவன் நாவலனே.

5 எழுத்தினொடு சொல்மரபும் இனிய பொருள்மரபும்
வழுக்களைந்து கற்றுணர்ந்த வல்லாளன் நாவலனே.

6 அல்லல் பலவரினும் அஞ்சாமல் ஆர்வமுடன்
தில்லைச் சிவனருளைச் சிந்திப்போன் நாவலனே.

7 குறியீட் டிலக்கணத்தைக் கொண்டுவந்து செந்தமிழ்க்கோர்
நெறியீட்டி வைத்தபுது நினைவாளன் நாவலனே.

8 காலங் கடந்தென்றும் கனிச்சாற்றுத் தமிழ்வாழக்
கோல வசனநடை கொடுத்தவனும் நாவலனே.

9 கண்டனங்கள் எழுதிடவும் கடலலைபோற் பேசிடவும்
தண்டமிழுந் தக்கதெனத் தந்தவனும் நாவலனே.

10 ஏடகத்து நூல்கள்பல எடுத்தாய்ந்தோர் பிழையின்றிப்
பாடபே தமுமின்றிப் பதித்தவனும் நாவலனே.

11 அன்னை மொழியினுடன் ஆங்கிலமும் ஆரியமும்
பின்னம் அறக்கற்ற பேரறிஞன் நாவலனே.

12 பொய்ம்மைப் புறச்சமயப் புயலால்எற் றுண்ணாமல்
சைவப் பெருவாழ்வு தந்தவனும் நாவலனே.

13 மூவர் தமிழ்பாடி முத்திபெறும் நாவலனை
ஆவல் நனிபெருக அலர்தூவி வாழ்த்திடுவோம்.

# 6. காவலன்

### வெண்பா

1 தண்ணளியால் சால்பால் தலைவணங்காத் தன்மதிப்பால்
எண்ணியதை ஆற்றும் எழுச்சியால் - மண்ணரசாள்
கோவேந்தன் என்றறிஞர் கொள்ராம நாதனையோர்
நாவேந்தன் என்றே நவில்.

2 பேச்சாளன் நுண்மதியன் பேராது நின்றெமக்காய்
மூச்சாலும் நன்மை முயன்றளித்தோன் - ஆச்சென்றே
கூறிச் செயலாற்றும் கோராம நாதனொளி
வீறும் உலகியலை வென்று.

3 கண்ணுதலான் கோவிலொடு கல்விக் கழகங்கள்
எண்ணும் பொதுநலத்தால் இங்கியற்றும் - புண்ணியவான்
கொற்றக் குரிசில் குலராம நாதனென்றே
கற்றோர் புகழ்வார் கனிந்து.

4 நாவலனார் மேற்கொண்ட நற்பணிகள் யாவையுமோர்
காவலனாய் நின்றிங்கு காத்திடல்போல் - மேவலரும்
போற்றப் புகழ்ராம நாதன் புரிதொண்டை
ஏற்றுச் செயல்புரிவோம் இன்று.

5 ஆட்சிமுறை தெளிந்தோன் ஆங்கிலத்தை ஆய்ந்துணர்ந்தோன்
மாட்சி தமிழுருற வாழ்ந்துழைத்தோன் - காட்சிசால்
மன்ராம நாதன் வழியொழுகி நாமெல்லாம்
ஒன்றாக வாழ்வோம் உவந்து.

6 சட்டநூல் ஆய்வும் தருக்கநூல் நுண்புலனும்
திட்பமுறப் பெற்ற திறலோரும் - உட்குறநல்
ஆங்கிலத்தாற் பேசும் அரிராம நாதனென்றே
ஓங்குமிசை ஆளும் உலகு.

7 ஆகமநூற் கேள்வியுடன் ஆன்ற தமிழறிவும்
போகமதார் வாழ்வின் புதுநலமும்- யோகமுடன்
ஒன்ற உலகியலார் ஒண்ராம நாதனையோர்
குன்றவில்லி அன்பனென்றே கூறு.

8 சிங்க நடையும் திறனாய்வுச் சிந்தனையும்
பொங்கும் புலமை பொலியுருவும்- தங்கிவளர்
பொற்பாளன் பொன்ராம நாதன் புதுவுலகக்
கற்பாளன் என்றே கழறு.

9 தண்ணார் சிவநெறியும் தண்டமிழும் தன்னிரண்டு
கண்ணா மெனக்கொண்ட காரணத்தால்- விண்ணாளும்
வேந்தன்போல் மேன்மை மிகுராம நாதனெமை
ஏந்தன்பால் காத்தான் இனிது.

10 நெஞ்சத் துணிவும் நிலைதிரியாப் பண்பாடும்
அஞ்சிப் பகைசாயும் ஆண்மையும்- விஞ்சிடவாழ்
பொன்ராம நாதப் புரவலனார் தந்தவிறல்
நின்றாளும் ஆவி நிறைந்து.

# 7. காவலன் சீர்

1 ஆற்றலும் அறிவும் தேசும் அரசறி பெரிய வாழ்வும்
தோற்றமும் தொண்டு செய்யத் துடித்திடும் தூய நெஞ்சும்
மாற்றலர் வணங்கும் பேச்சு வன்மையும் புகழும் மாண்பும்
ஏற்றவன் ராம நாதன் ஈழத்தின் தெய்வம் என்போம்.

2 வான்தருங் கங்கைபோல வரும்பெரு மரபில் வந்தோன்
தேன்தரும் தமிழும் மேலாம் சிவநெறித் திருவும் வீறத்
தான்தரும் செல்வம் எல்லாம் தவநெறிப் படுத்த சான்றோன்
ஏந்தலெம் ராம நாதன் எழுச்சிபல ஊழி வாழ்க.

3 ஈழத்தின் மக்கள் என்றும் இனமதப் பூசல் இன்றி
வாழத்தன் வாழ்வில் நல்ல வழிகளை வகுத்த வண்ணம்
ஆழத்தென் கடலுள் மூழ்கி அலைந்துமுத் தெடுத்தல் போல
ஈழத்தின் இசைநின் றோங்க உழைத்தவன் ராம நாதன்.

4 சரியைநற் கிரியை யோடு சாற்றிடும் யோகம் ஞானம்
குருவருள் நெறியாற் கூடும் கோமகன் குலத்தின் பண்பால்
அரியன ஆய்ந்து செய்வோன் அண்ணலெம் ராம நாதன்
தருமநற் பயனால் மீண்டும் தழைத்தது தமிழன் சால்பு.

5 எல்லையில் லாத அன்பால் ஈசனை ஏத்தி ஏத்தி
நல்லன புரிந்த ராம நாதனின் தவத்தால் இன்று
பல்கலைக் கழகந் தோன்றி அவன்புகழ் பரப்பக் காண்போம்
வல்லவன் ராம நாதன் வழிமுறை மலர்ந்து வாழ்க.

# ៩. வாழ்க காந்தீயம்

1 வீரவிவே கானந்தன் வேதாந்த
முழக்கொலியும் வெற்றி கொண்ட
பாரதத்தில் ஊற்றெழுந்த தாகூர்கீ
தாஞ்சலியும் பகவான் புத்தன்
ஆரமுதின் அன்பொலியும் அருள்யேசு
மலைப்பொழிவும் நபியின் ஆய்வும்
ஓரகத்தே உறுநெறியென் றுணர்த்தியருள்
காந்தீயம் ஊழி வாழி.

2 இந்திரனைப் போற்செல்வம் எய்தியிங்கு
சிலர்வாழ எண்ணில் மக்கள்
கந்தையினைச் சுற்றிமிகக் கவலையுடன்
கஞ்சியின்றிக் கதறும் வாழ்க்கை
இந்தவுல கத்திலினி இல்லையெனக்
காந்தியெங்கோ னெடுத்து ரைத்த
அந்தமொழி செவிமடுத்தோம் காந்தீயம்
அனைத்துலகும் ஆர்ந்து வாழி.

3 வெற்றிகொண்ட முரசொலித்து விடுதலைப்போர்க்
கறைகூவும் வீர மின்னல்
பற்றிவளர் கொடுந்தீப்போல் உலகமெலாம்
பரவியெழும் பான்மை யாலே
கொற்றவரின் முடிவீழ்த்திப் பொதுமக்கள்
குடியாட்சி கொள்ளும் போதும்
மற்றெவரும் காணாத காந்தீயம்
பாரதத்தை வளர்த்த தன்றே.

வித்துவான் க. வேந்தனார்

4 விழித்தெழுந்த மக்களுக்கும் விடுதலைக்காம்
அருட்புரட்சி விரித்துக் காட்டி
அழித்தொழிமின் கொடுஞ்சாதிப் பகுப்பையென
ஆண்மையுடன் அறிவும் ஊட்டிச்
சுழித்தெறியும் அடிமைப்பேய் தொலைந்தோடப்
பாரதத்தாய் தொன்மை போலக்
கொழித்தலரச் சுதந்திரத்தைக் கொடுத்தருளுங்
காந்தீயக் கொள்கை வாழி.

# 9. சத்தியப் போர்வீரன் காந்தி

1 சத்தி யப்போர் வீர னெங்கள்
சாந்த மூர்த்தி காந்தியே
எத்தி சைக்கும் அகிம்சை யென்ற
இன்ன மிழ்தந் தந்தவன்.

2 படுகொ லைக்கே அன்பு வாழ்வைப்
பலிகொ டுத்த காந்தியின்
விடுத லைப்போர் வெற்றி நாதம்
விளங்கு திந்த உலகெலாம்.

3 இழிவு கொண்ட மனிதன் உலகில்
இல்லை யென்ற காந்தியை
அழிவு கொண்ட கொடுமை எங்கள்
ஆண்மை வீழச் செய்யுமோ.

4 பார தத்தாய் சுதந்தி ரத்தின்
பயனு றச்செய் காந்தியும்
கோர முற்ற கொலையி லுண்மைக்
கொள்கை நாட்டிப் போயினார்.

5 ஐந்து பூதக் கூட்டில் நின்றே
ஆற்றல் என்னும் கதிரினால்
எந்தை காந்தி தந்த கொள்கை
எறிக்கு திந்த உலகெலாம்.

6 அன்புந் தொண்டும் உலகை என்றும்
ஆளக் காணும் நோன்பினால்
என்பும் பிறர்க்குப் பயனாய் நின்றான்
எங்கள் காந்தி முனிவனே.

7 கண்ணாற் காண அணுவின் ஆற்றல்
காட்டும் அழிவுச் செயலினும்
உண்ணா நோன்பிற் காந்தி ஆற்றற்
குலகம் அச்சங் கொள்ளுதே.

8 சாதி சமயப் பாகு பாட்டைச்
சாம்ப ராகத் தூற்றுவோம்
ஆவி கொடுத்தும் காந்தி கொண்ட
அன்பு நெறியைப் போற்றுவோம்.

9 கத்தி யின்றிக் காந்தி கண்ட
சக்தி யப்போர் ஆற்றலை
இத்த ரைக்கண் வாழ்வோர் போற்றும்
இன்ப நாளே விடுதலை.

10 நெஞ்சு டைந்து புலம்பு கின்ற
நிலைமை காந்திக் கில்லையால்
அஞ்சி டாது காந்தி யைப்போல்
அன்புப் போரை ஆற்றுவோம்.

# 10. வீரனெங்கள் பாரதி

1 தாய்முலையைத் தழுவுகின்ற குழந்தை தானும்
தலைநிமிர்ந்து சுதந்திரத்தின் உணர்ச்சி கொள்ளப்
பாநிலையில் உயிரூட்டி உணர்ச்சி ஊட்டிப்
பயன்பெருக்கும் பாரதியைப் பாடி வாழ்வாம்.

2 எழுத்தறியாப் பொதுமகனும் இன்றே எங்கள்
எழில்கனிந்த தாய்நாட்டை ஆள்வோம் என்று
விழித்தெழுந்து விடுதலைப்போர் வெறிகொண் டாட
விறலளித்த பாரதியை வேண்டல் செய்வாம்.

3 பாட்டென்றாற் பண்டிதர்க்கே உரிமை யென்று
பகருகின்றோர் வாயடங்கப் படிப்பொன் றில்லார்
கேட்டுள்ளம் விறுவிறுக்கப் பாட்டுப் பாடிக்
கிளர்ச்சிசெய்த பாரதியின் எழுச்சி கண்டோம்.

4 அந்தாதி கோவைகளைப் பார்த்துப் பார்த்தே
அவைபோலப் பாடுகின்ற புலவர் நாண
நந்தாத விடுதலைப்போர்ப் பாக்கள் பாடி
நாட்டினரை அறைகூவும் ஆர்ப்புக் கேட்டோம்.

5 மக்கள்படுங் கொடுமைகளை அடிமை ஆகி
மானமற்றுப் பிறநாட்டில் தமிழர் எல்லாம்
குக்கல்களைப் போல்வாழுங் கூலி வாழ்வைக்
குழைந்துரைத்துப் பாரதியார் குமுறு கின்றார்.

6 பாட்டாலே வீரர்களைப் படைத்துத் தந்த
பாரதியார் தமிழ்நாட்டில் தோன்றா ராகில்
கேட்டோர்கள் நகைத்திகழும் இனமாய் நாங்கள்
கெட்டழிவோம் இன்றுணர்ச்சி பெற்றெ ழுந்தோம்.

**வித்துவான் க. வேந்தனார்**

7 மண்வெட்டிக் கூலிகளோ நீங்கள் முன்னாள்
வாள்வலியால் உலகாண்ட மக்க ளன்றோ
விண்ணெட்டும் இமயமிசைக் கொடிகள் நாட்டி
விற்பொறித்த வீரர்களே விழிமின் என்றார்.

8 இத்தாலி நாட்டிளைஞன் மாசி னிபோல்
எழுச்சிதருங் குரலாலே எம்மைக் கூவிச்
செத்தாலும் இனியடிமை வாழ்வு வேண்டோம்
சேர்ந்திடுமின் விடுதலைப்போர் செய்வோம் என்றார்.

9 மறங்கொண்ட பெரும்சேர்மன் படையைத் தாக்கி
மானத்தால் வீழ்வுற்ற பெல்சி யம்போல்
அறங்கொண்ட பேராண்மை தாங்கி இன்றே
அஞ்சாமை கொண்டெ ழுமின் ஆள்வோம் என்றார்.

10 குந்திநடை கொள்ளுகின்ற கிழவன் தானும்
கூன்நிமிர்ந்து வாள்தூக்கிக் குமரன் போல
விஞ்சுவிறல் கொண்டெழும்பப் பாட்டுப் பாடும்
வீரனெங்கள் பாரதியின் விறலைக் காப்போம்.

11 நாட்டினிலே அரசியலின் நிலைமை யெண்ணார்
நாடடிமைப் பட்டுலையும் நலிவு தேரார்
ஏட்டினிலே வேறொருவன் எழுதி வைத்த
ஏதேதோ பழங்கதைகள் புரட்டிப் பார்த்துக்
கூட்டினிலே அடைபட்ட விலங்கே போலக்
கொள்கையிலார் தமிழ்ப்புலவர் என்று வாழப்
பாட்டினிலே மறுமலர்ச்சித் தமிழர் வாழ்வைப்
படைத்தளித்த பாரதியைப் பணிதல் செய்வாம்.

# 11. தங்கத் தமிழ்ப் புலவன்

1 தங்கத் தமிழ்ப் புலவன் சோம சுந்தரம் - அவன்
தந்த தமிழ்க் கவிதை எங்கள் மந்திரம்
பொங்கும் புலமை வளம் எங்கும் கனியுமே - அதில்
போற்றும் அருளமுதின் ஊற்றம் பொலியுமே.

2 கரும்பின் சுவையையவன் கவிதை காட்டுதே - கொடுங்
கருங்கல் மனத்தைக்கனிச் சாறாய் மாற்றுதே
இரும்பை இளக்கிநறுந் தேனாய் இயற்றுதே - சங்கம்
இருந்த தமிழ் நலத்தை எங்கும் கொழிக்குதே.

3 பழகு தமிழுமவன் பாட்டில் பயில்வதால் - பசுப்
பாலின் சுவைஎமக்குக் காட்டு கின்றதே
அழகு மயிலுங்குதித் தாடுகின்றதே - குயில்
ஆழிசூழ் இலங்கைவளம் பாடு கின்றதே.

4 கத்தரி வெருளிக்கவன் கட்டுங் கவிதைபோல் - ஒரு
கற்பனைக் களஞ்சியத்தைக் கண்ட தில்லையால்
அற்புதப் புனைவிதைப்போல் ஆக்கம் முன்னொன்றும் - தமிழ்
அகத்தினில் இல்லையென்றே அறிஞர் சொல்லுவார்.

5 ஆடிப் பிறப்புக்கவிக் கீடும் வேறுண்டோ - அதில்
அவிக்கும் கொழுக்கட்டை அமுதின் சுவையன்றோ
"கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்" - என்று
கூவுங் குரலெங்கள் ஆவிக் கமுதன்றோ.

**வித்துவான் க. வேந்தனார்**

6 ஆடு கதறுங்குரல் அன்பைச் சுரக்குதே - புத்தர்
அருளுங் கருணையைப்போல் அகத்தை உருக்குதே
தாடி அறுந்தவேடன் பாடல் பெறுகிறான் - அவன்
தன்வினை தன்னைச்சுடும் என்றும் அறிகிறான்.

7 பாலினை விற்குமந்தப் பவளக் கொடியின்கதை - இளம்
பாலகர் உண்டுவக்கும் பாகின் கட்டியன்றோ
காலங் கடந்தந்தக் கவிதை வாழுமே - ஒரு
காவியச் சோலையெனக் கருத்தை ஆளுமே.

8 இலவு காத்தகிளி என்றும் வாழவே - ஓர்
இலக்கியம் புனைந்தெமக்கும் இன்பம் அளிக்கிறான்
நிலவைப் பாடியெங்கள் நெஞ்சை நெகிழ்க்கிறான் - பூ
நிறைந்த சோலையெழில் நினைந்து வியக்கிறான்.

9 பஞ்சக்கூ ழருமையவன் பாடுங்குரலிலே - இல்லார்
பசியின் துயர்க்கிரங்கிப் பதைத்தல் காண்கிறோம்
கொஞ்சுங் குதலைமக்கள் கூழைக் குடித்திடத் - தாய்
கொடுத்து மகிழுமன்புக் குழைவைக் காண்கிறோம்.

10 செந்தமிழ்த் தாய்சிறப்பைச் செப்பி அழைத்திடும் - அவன்
தேன்சுவைக் குரலெமக்கோர் தெளிவை ஊட்டுதே
சிந்தையில் என்றுமில்லாத் திறலைச் சேர்க்குதே - தமிழ்த்
தெய்வம் வாழ்கவென்று செயல்கள் ஆற்றுவோம்.

# 12. உலகத்தில் ஒரு வீரன்

1 அலைமேலே அலைமோதும் ஆழ்கடலை நீந்தி
அனைத்துலகும் வரவேற்கும் ஆண்மைநிலை பெற்றோன்
மலைபோலக் கலங்காத மனவலிமை உற்றோன்
மாவீரன் நவரத்ன சாமிபுகழ் வாழ்க.

2 பாக்குநீ ரிணையென்னும் பருங்கடலை நீந்திப்
பாரெல்லாம் ஈழத்தின் புகழ்படரச் செய்தோன்
ஊக்கமுடன் உலையாத உளத்திண்மை உடையோன்
உலகத்தில் ஒருவீரன் நவரத்னம் என்போம்.

3 மலைமலையாய் எழுந்தலைகள் மார்பின்மேல் மோத
மறித்தோடும் நீர்ச்சுழிகள் வழிமாற்றி ஏக
அலைமேலே அலையாய்ப்போய் ஆழ்கடலைக் கடந்தோன்
ஆற்றல்மிகு நவரத்ன அண்ணலெனச் சொல்வோம்.

4 இந்தமுறை இக்கடலை நீந்திடுவீர் ஐயா
இயலாதேல் நான்நீந்திக் கடந்திடுவேன் என்று
மைந்தனுரை வீரமொழி கேட்டுவளர் தோளான்
வாகைபெறும் நவரத்ன மன்னனவன் வாழ்க.

5 வளர்த்தெடுத்த புதல்வருளம் மலர்ந்துவகை வீற
மக்கள்பல் லாயிரவர் வாழ்த்துரைகள் கூற
உளத்தெழுந்த ஆர்வமுடன் ஒலிகடலைக் கடந்தோன்
உரனாளன் நவரத்னம் ஒளிஆளன் என்போம்.

6 இன்றளவும் உலகத்தில் இருங்கடலை நீந்தி
இசைபடைத்தோர் செயலெல்லாம் இணையில்லா வண்ணம்
வென்றளிக்கும் பெருந்திறமை விருந்தாளன் எங்கள்
வீரமிகும் நவரத்ன சாமியென விள்வோம்.

**வித்துவான் க. வேந்தனார்**

7 மன்னிமய மலைமேலே கொடிநாட்டி இந்த
வையமெலாம் இசைபோக்கி வாழ்தமிழர் வீரம்
இன்னுமுள தென்பதற்கோர் இலக்கியமாய் நின்றோன்
இரைகடலை நீந்தும்நவ ரத்னமென் றிசைப்போம்.

8 காட்சியிலே உலகமெல்லாம் கண்டுகளி கொள்ளக்
கையாலே அலைகடலைக் கடந்துகரை கண்டோன்
மாட்சிவளர் மறத்தமிழன் நவரத்ன சாமி
வாழ்கபல ஊழியென வாழ்த்திமலர் சொரிவோம்.

9 முப்பதுகல் தொலைகொண்ட முழங்குகடல் நீந்தி
முழுதுலகும் பாராட்ட முதன்மைபெறும் வீரன்
செப்பரிய திறலாளன் நவரத்ன சாமி
செயல்பாடிச் செம்மாந்து திசையனைத்தும் செல்வோம்.

10 கொற்றமுடன் கடல்கடந்து குலவுபுகழ் கொண்டோன்
கோனெங்கள் நவரத்ன சாமிவிறல் கூறி
வெற்றிமுர சறைந்தெங்கும் வீரப்பாட் டிசைப்போம்
வீரமெனும் தெய்வமுடன் வாழ்கதமிழ் என்போம்.

# குழந்தை மொழி

# 1. நல்லூர்

1 நல்லூர்க் கந்த சாமி கோயில்
நாங்கள் வணங்கும் கோயில்
கல்லுங் கனியக் கசிந்து கதறிக்
கருணை வேண்டுங் கோயில்.

2 அல்லும் பகலும் அடியார் கூட்டம்
அழுதும் தொழுதும் பரவி
நல்லூர்க் கந்தா கந்தா என்று
நயந்து வணங்கும் கோயில்.

3 அழகும் அன்பும் அருளும் தெளிவும்
அமைந்து நிறைந்த கோயில்
முழவும் குழலும் யாழும் பாட்டும்
முழங்கும் நல்லூர்க் கோயில்.

4 ஞான வளமும் நலமும் தவமும்
நண்ணும் நல்லூர்க் கோயில்
வான உலகாய் யாழ்ப்பா ணத்தை
மலர்த்தும் நல்லூர்க் கோயில்.

5 எல்லை இல்லா அன்பர் கூடி
இனிய விழாவைக் காணும்
நல்லூர்க் கந்த சாமி கோயில்
ஞாலம் போற்றும் கோயில்.

# உ. அம்மாவின் அன்பு

1 காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா.

2 புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா.

3 அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா.

4 பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளிற் போடும் அம்மா.

5 பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா.

# 3. பாட்டி

1 அன்பு நிறைந்த பாட்டி என்னை
அணைத்துத் தூக்கும் பாட்டி
இன்ப மான கதைகள் எல்லாம்
எனக்குச் சொல்லும் பாட்டி.

2 வாழைப் பழமும் இனிப்பும் எனக்கு
வாங்கித் தந்த பாட்டி
தோளிற் கிடத்தி முதுகைத் தடவித்
தூங்க வைக்கும் பாட்டி.

3 பள்ளிக் கூடப் பாடம் வீட்டில்
படிக்கச் சொல்லும் பாட்டி
துள்ளிக் குதித்து மண்ணில் வீழ்ந்தால்
துடைத்துக் கழுவும் பாட்டி.

4 கோவிலுக்குப் போகும் போது
கூட்டிச் செல்லும் பாட்டி
கும்பிடுநீ கும்பி டென்று
குனிந்து சொல்லும் பாட்டி.

5 அப்பா அம்மா அடிக்க வந்தால்
அலறித் தடுக்கும் பாட்டி
தப்பாய் நானும் பிழைகள் செய்தால்
தானே புலம்பும் பாட்டி.

6 அவ்வைப் பாட்டி பாடித் தந்த
ஆத்தி சூடிப் பாட்டை
செவ்வை யாகப் பாடச் சொல்லிச்
சிந்தை மகிழும் பாட்டி.

# 4. வள்ளி

1 வள்ளி பாட்டுப் பாடுவாள்
மலரைச் சூடி ஆடுவாள்
பள்ளிக் கூடம் ஏகுவாள்
பாடம் எல்லாம் கூறுவாள்.

2 பொய்யும் புளுகும் சொல்லிடாள்
பொருளை கொட்டிச் சிந்திடாள்
தெய்வம் என்றும் போற்றுவாள்
செய்த நன்றி சாற்றுவாள்.

3 தம்பி அழுதால் தூக்குவாள்
தண்ணீர் அள்ளி ஊற்றுவாள்
செம்பு பேணி விளக்குவாள்
தேங்காய் எடுத்துப் போடுவாள்.

4 கோலம் போட்டு வீட்டிலே
குத்து விளக்கை ஏற்றுவாள்
சாலம் சாட்டுச் சொல்லிடாள்
தாய்க்கும் உதவி செய்குவாள்.

5 கடலை தின்று மகிழுவாள்
காப்புச் சீப்பு வேண்டுவாள்
புடவை வாங்கிச் சட்டைகள்
புதிய தைத்துப் போடுவாள்.

6 ஆடிப் பிறப்புப் பாட்டென்பாள்
ஆகா அதனைப் பாடென்பாள்
கூடிக் கூடிக் கொழுக்கட்டை
கொடுத்துத் தின்னும் நாளென்பாள்.

**வித்துவான் க. வேந்தனார்**

# ந. பவளம்

1 பவளம் என்தன் கூட்டாளி
பள்ளிக் கூடக் கூட்டாளி
அவளும் நானும் எப்போதும்
அன்பாய்க் கூடிச் செல்லுவோம்.

2 சட்டை போட்டுக் கொள்ளுவோம்
தலையும் பின்னிக் கொள்ளுவோம்
பொட்ட ணிந்து கொள்ளுவோம்
பூவுஞ் சூடிக் கொள்ளுவோம்.

3 பந்து வீசி ஆடுவோம்
பத்து வட்டம் ஓடுவோம்
வந்து வீடு சேருவோம்
மாம ரத்தில் ஏறுவோம்.

4 கையால் காய்கள் தேடுவோம்
கடித்து வாயில் போடுவோம்
ஐயா வந்தால் ஆடுவோம்
அம்மா வந்தால் ஓடுவோம்.

5 கதையும் பாட்டுஞ் சொல்லுவோம்
கணக்குக் கூட்டிச் சொல்லுவோம்
புதிய மணலை அள்ளுவோம்
போட்டுச் சுளகில் தெள்ளுவோம்.

6 மாமா தந்த பாவையை
வாரித் தூக்கிக் கொஞ்சுவோம்
பூவால் தொடுத்த மாலைகள்
போட்டுத் தூக்கிக் கொஞ்சுவோம்.

# 6. ஆறுமுக நாவலர்

1 ஆறுமுக நாவலர்
அருந்தமிழின் காவலர்
வீறுகொண்டு சைவத்தின்
மேன்மைதந்த கோனவர்.

2 நல்லூரிலே பிறந்தவர்
நல்லறிவு நிறைந்தவர்
எல்லோருக்கும் இனியவர்
ஈசனையே பணிபவர்.

3 திருக்குறளை மிகமிகத்
திருத்தமாகப் பதித்தவர்
இருக்குமுதல் வேதங்கள்
இயம்பும்நெறியை மதித்தவர்.

4 கந்தபுராணங் கற்றவர்
கருணையுள்ளம் பெற்றவர்
சிந்தைசெயலில் தூயவர்
சித்தாந்தமே ஆய்பவர்.

5 பேச்சில்மிகவும் வல்லவர்
பிறர்மதத்தை வெல்பவர்
மூச்சும்தமிழ்க்காய் விட்டவர்
மும்மலத்தைச் சுட்டவர்.

6 தென்னாட்டிலும் ஈழத்தின்
சிறப்பைநாட்டி வைத்தவர்
பொன்னாட்டினும் புரவலன்
போற்றுமெங்கள் நாவலன்.

**வித்துவான் க. வேந்தனார்**

# 7. பொன். இராமநாதன்

1 பொன்ராம நாதன் ஈழம்
போற்றும் வீரத் தலைவன்
தன்காலத் தமிழர்க் கன்புத்
தாயைப் போன்ற தலைவன்.

2 கரும்பிலினிய தமிழைக் கற்றுக்
கருணை நிறைந்த தலைவன்
இரும்பு மனமும் இளகும் வண்ணம்
இனிய சொல்லும் தலைவன்.

3 தெய்வமெம்மைக் காக்கும் என்று
சிந்தை மகிழுந் தலைவன்
சைவநெறியின் மரபை உலகில்
தழைக்கச் செய்த தலைவன்.

4 இலங்கும்பர மேசு வரா
இராமநாதன் என்றே
துலங்கும்கல் லூரி இரண்டைத்
தோற்று வித்த தலைவன்.

5 மன்னுபுகழ்க் கொழும்பில் சைவ
வாழ்வு நின்று மலரப்
பொன்னம் பலவாணர் கோவில்
புனைந்து போற்றும் தலைவன்.

# ௮. புலவர் கோன்

1 கூவுங் குயிலே உனக்கும் ஒன்று
கூறு கின்றேன் கேளாய்
நாவில் இனிக்கும் தேனைப் போல
நயந்து நயந்து கூவாய்.

2 ஆடிப் பிறப்புப் பாட்டுப் பாடி
அமிழ்தின் சுவையைத் தந்தோன்
தாடிக் கிழவன் தங்கத் தாத்தா
தமிழைப் பாடிக் கூவாய்.

3 ஆடு கதறும் அன்புக் குரலை
ஆவி உருகிக் கூவாய்
தாடி அறுந்த வேடன் கதையைச்
சாற்றிச் சாற்றிக் கூவாய்.

4 புத்தமு தென்றே புகலுந் தமிழின்
புதிய புனைவாய்ப் பொலியும்
கத்தரி வெருளிப் பாட்டை நீயுங்
கனிந்த குரலால் கூவாய்.

5 மாவின் கனியைத் தின்னும் சிறுவர்
மனத்தில் தெய்வம் மணக்கும்
பாவின் சுவையைக் குயிலே நீயும்
பாடிப் பாடிக் கூவாய்.

6 மனம்நி றைந்த செல்வன் வாழ்வின்
மாண்பைப் பாடிப் பாடி
இனம்நி றைந்த குயிலே நீயும்
இனிய குரலால் கூவாய்.

**வித்துவான் க. வேந்தனார்**

7 பஞ்சக் கூழ்புழுக் கொடிய லோடு
பனையின் பயனும் பாடி
நெஞ்சந் தளிர்க்கும் தங்கத் தாத்தா
நினைவைக் கூறிக் கூவாய்.

8 இலவு காத்த கிளியி னோடு
இலங்கை வளமும் பாடும்
புலவன் தங்கத் தாத்தா பூண்ட
புகழைப் போற்றிக் கூவாய்.

9 பாலை விற்கும் பாவை அந்தப்
பவளக் கொடியின் கதையைக்
காலங் கடந்து வாழச் செய்த
கவிஞன் என்று கூவாய்.

10 செந்த மிழ்த்தாய் சீரை எமக்குச்
செப்பும் புலவர் கோனைக்
கொந்தார் சோலைக் குயிலே நீயும்
கூவிக் கூவி மகிழ்வாய்.

# 9. நொண்டி

1 காலில் லாத நொண்டி மிகவும்
களைத்துப் போனான் அம்மா
கோலை ஊன்றி நடந்து முதுகு
கூனிப் போனான் அம்மா.

2 பாவம் அந்த நொண்டி எங்கள்
பள்ளிக் கூடத் தெருவால்
போகும் போது கண்டேன் ஐயோ
புண்கள் காலில் அம்மா.

3 இனிப்புக் கடலை வாங்கக் காசு
இனிமேல் கேட்க மாட்டேன்
தனித்த நொண்டி தவிப்பைப் போக்கத்
தாரும் அம்மா காசு.

4 கந்தை சுற்றும் நொண்டிக் காலைக்
காட்டிப் பிச்சை கேட்கிறான்
ஐந்து சதம்நீ தந்தி டம்மா
அவனைத் தேடிப் போடுவேன்.

# 10. எங்கள் வீட்டுப் பூனை

1 சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை.

2 வட்ட மான கண்கள்
வண்ண மான செவிகள்
கட்டை யான கால்கள்
காட்டும் நல்ல பூனை.

3 பாலைக் குடிக்கப் பார்க்கும்
பதுங்கி இருக்கும் பரணில்
வாலைப் பற்றி இழுத்தால்
வளைந்து கையைக் கடிக்கும்.

4 நாயைப் பார்த்துச் சீறும்
நகத்தால் மரத்தைக் கீறும்
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்.

5 எலியைக் கிளியைப் பிடிக்கும்
ஏறி மரத்தில் நடிக்கும்
புலியைப் போல இருக்கும்
புள்ளிக் கோட்டுப் பூனை.

6 உண்ணுஞ் சோறும் பாலும்
ஊட்டி வளர்த்த பூனை
கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை.

## 11. புள்ளிக் கோழி

1 புள்ளிக் கோழி எங்கள் கோழி
பொரித்த குஞ்சு பத்து
வெள்ளைக் குஞ்சு மூன்று நல்ல
வெடிவால் குஞ்சு ஏழு.

2 கொக்கொக் கொக்கோ என்று குஞ்சைக்
கூட்டிக் கொண்டு திரியும்
பக்கத் திலே காகம் வந்தால்
பறந்து பறந்து கலைக்கும்.

3 தப்பிக் குஞ்சு சத்தம் போட்டால்
தலையைத் தூக்கிப் பார்க்கும்
குப்பை கிளறிப் பூச்சி புழுக்கள்
கொத்தித் தின்னக் கொடுக்கும்.

4 காற்றுக் கிலைகள் ஆடி னாலும்
காதைக் கொடுத்துக் கேட்கும்
சோற்றைப் போட்டால் குஞ்சைக் கூவிச்
சொண்டால் கிளறிக் காட்டும்.

5 வட்ட மிட்டுப் பருந்து வந்து
வானத் திலே பறந்தால்
செட்டைக் குள்ளே குஞ்சை வைத்துத்
தெய்வம் போலக் காக்கும்.

வித்துவான் க. வேந்தனார்

# 12. பறவைக் குஞ்சு

1 பறவைக் குஞ்சைப் பாரண்ணா
பறவைக் குஞ்சைப் பாரண்ணா
பறக்கும் இறகு முளைத்திடாத
பறவைக் குஞ்சைப் பாரண்ணா.

2 கூடு காற்றில் ஆடிஇந்தக்
குஞ்சு விழுந்து விட்டதோ
தேடித் தாயும் தூக்கமுன்னம்
செத்துப் போகும் துடிக்குதே.

3 கட்டெ றும்பும் ஊருதே
காகம் கொத்தப் பார்க்குதே
வட்டம் போட்டுப் பருந்துமிந்த
மரத்தை நோக்கி வருகுதே.

4 மரத்தில் ஏறிக் கூட்டிலே
வைத்து விடுங்கள் குஞ்சையும்
இரக்க மாகஇ ருக்குதையோ
இளைத்துக் கிடந்து துடிக்குதே.

# 13. மல்லிகைப் பூந்தோட்டம்

1 மல்லிகைப் பூந்தோட்டம் நல்ல
மல்லிகைப் பூந்தோட்டம்
வாசமுள்ள மலர்கள் பூக்கும்
மல்லிகைப் பூந்தோட்டம்.

2 வண்டிருந்து பாடு கின்ற
மல்லிகைப் பூந்தோட்டம்
வண்ணமயில் ஆடுகின்ற
மல்லிகைப் பூந்தோட்டம்.

3 குயிலிருந்து கூவு கின்ற
மல்லிகைப் பூந்தோட்டம்
கொடிகளிலே கிளிகள் ஆடும்
மல்லிகைப் பூந்தோட்டம்.

4 கூந்தலுக்கு மாலை கட்டக்
கொய்திடுவோம் பூக்கள்
கொடிகளையே பிடித்தி ழுத்துக்
கொய்திடுவோம் பூக்கள்.

5 கொய்தமலர் மாலை யெல்லாம்
கூந்தலிலே அணிவோம்
குதித்தோடி எங்கள் பள்ளிக்
கூடத்திலே குவிவோம்.

# 14. வெண்ணிலா

1 பாலைப் போல வெண்ணிலா
பார்க்க நல்ல வெண்ணிலா
கோல வானில் நின்றொளியைக்
கொட்டு கின்ற வெண்ணிலா.

2 வெள்ளிக் கூட்டம் சுற்றி நிற்க
விளங்கு கின்ற வெண்ணிலா
அள்ளி அள்ளிச் சோற்றையூட்டி
அம்மா காட்டும் வெண்ணிலா.

3 கரிய முகிலுள் ஓடி ஒளித்துக்
கள்ளம் பழகும் வெண்ணிலா
தெரிய வில்லை என்று தம்பி
தேடிச் சிணுங்கும் வெண்ணிலா.

4 கலா தம்பி காந்தி யோடு
கையைக் கோர்த்துக் கொண்டு
நிலா நிலா என்று கூவி
நின்று துள்ளும் வெண்ணிலா.

# ௫. இளமைப் பருவம்

1 இளமைப் பருவம் இனிய பருவம்
எழுச்சி நல்கும் பருவம்
விளையும் அன்பும் தொண்டும் வாழ்வில்
விருந்து செய்யும் பருவம்.

2 மலையைத் தூக்கித் தலையில் வைக்க
மார்பு தட்டும் பருவம்
கலைகள் கற்றுப் புலமை யாலே
கருத்து மலரும் பருவம்.

3 நாட்டை மொழியை அடிமை ஆக்க
நாங்கள் இங்கு வாழோம்
ஈட்டி முனையில் உயிரைக் கொடுப்போம்
என்றெ ழும்பும் பருவம்.

4 இன்னல் கோடி வாழ்வில் வந்து
எதிர்த்து நின்ற போதும்
தன்ன லத்தைப் பேணி டாத
சால்பு கொண்ட பருவம்.

5 சென்ற கால நிகழுங் காலச்
செயல்கள் யாவும் தேர்ந்தே
என்றும் வாழும் எதிர்கா லத்தை
இயற்றும் இளமைப் பருவம்.

# 16. மான்

1 அழகு நிறைந்த மான்கள்
அருமை யான மான்கள்
மழலைக் குழந்தை போல
மனத்தைக் கவரும் மான்கள்.

2 புள்ளிப் புள்ளி மான்கள்
புதுமை யான மான்கள்
துள்ளித் துள்ளி ஓடும்
சோடி யாக வாழும்.

3 பரந்த காட்டில் உள்ள
பச்சைப் புல்லை மேயும்
சுரந்து பாயும் நீரைச்
சுவைத்துக் குடித்து வாழும்.

4 கலையும் பிணையு மாகக்
கலந்து வாழும் அன்பின்
நிலையை உணர்ந்து நாங்கள்
நெஞ்சம் மகிழ வேண்டும்.

5 வேட்டைக் காரர் வந்தால்
வெருட்சி கொண்ட மான்கள்
ஓட்ட மாக ஓடி
ஒளித்துக் கொள்ளும் அந்தோ.

6 குட்டி யோடு மான்கள்
கூடித் திரியும் போது
சுட்டு வீழ்த்த லாமோ
துன்பஞ் செய்ய லாமோ.

7 கொல்லும் புலியைப் போலக்
கொடிய மனிதர் என்று
நல்ல மானின் கூட்டம்
நம்மை நினைக்க லாமோ.

8 அன்புத் தெய்வந் தந்த
அழகுச் செல்வம் மான்கள்
துன்பப் படுத்தி டாமல்
தோழ ராகக் கொள்வோம்.

# 17. மயில்

1 மழை முகிலுங் கூடுது
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்று
ஆனந்த மாய் ஆடுது.

2 நீலத்தோகை பொன் சொரிய
நின்று கூத்துப் போடுது
நீண்ட காலைத் தூக்கி மயிலும்
நின்று கூத்துப் போடுது.

3 கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது.

4 வானம் பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்தி ருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது.

5 மானும் புலியின் பக்கம் நின்று
மயிலின் கூத்தைப் பார்க்குது
மலையைப் போல யானை நின்று
மயிலின் கூத்தைப் பார்க்குது.

6 நஞ்சைக் கக்கும் நாகபாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளித்திடாமல்
அருகில் நின்று பார்க்குது.

7 கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறாள்.

# 18. குயில்

1 கூகூ கூகூ கூகூ என்று
கூவிக் கீதம் பாடுவேன்
கூடி வாழும் சோடிக் குயிலைக்
கூவிக் கூவித் தேடுவேன்.

2 காகம் என்று நீங்கள் என்னைக்
கருதிக் கொள்ள வேண்டாம்
காதில் இனிக்கக் கூவும் குரலால்
கண்டு கொள்வீர் என்னை.

3 பார்க்க நானும் கறுப்பு நிறந்தான்
பாடும் குரலைக் கேளும்
பாலும் தேனும் கரும்பும் போலப்
பாடும் குரலைக் கேளும்.

4 காகக் கூட்டில் முட்டை இடுவேன்
காகம் குஞ்சு பொரிக்கும்
காலஞ் செல்ல எனது குஞ்சு
கனிந்த குரலில் கூவும்.

5 கூவுங் குரலைக் கேட்ட காகம்
குஞ்சைக் கொத்திக் கலைக்கும்
கூவிக்கூவி எனது குஞ்சு
கூட்டை விட்டுப் பறக்கும்.

6 குஞ்சை நானும் கூட்டிக் கொண்டு
கூவிக் கூவித் திரிவேன்
கூகூ கூகூ கூகூ என்று
கூவிக் கூவித் திரிவேன்.

7 குச்சுப் பொறுக்கிக் கூடு கட்டிக்
குஞ்சு பொரிக்க மாட்டேன்
கூகூ கூகூ கூகூ என்று
கூவிக் கூவித் திரிவேன்.

8 காகக் கூட்டில் முட்டை இட்ட
கள்ளக் குயிலோ நானும்
கல்லும் கனியக் கூவும் குரலைக்
காது கொடுத்துக் கேளும்.

# 19. கூவுதே குயில்

1 குக்குக் குக்கூ கூகூ வென்று
கூவுதே குயில்
கோலக் கொம்பின் மேலி ருந்து
கூவுதே குயில்.

2 பக்கத் திலே உள்ள கல்லுப்
பாரும் உருகுதே
பாட்டுக் குதவும் யாழும் குழலும்
கேட்டுக் குழையுதே.

3 கொடிய புலியும் மானும் ஒன்றாய்க்
கூடிக் கேட்குதே.
குரங்குக் கூட்டம் மரத்தில் இருந்து
குனிந்து கேட்குதே.

4 எலியைக் கலைக்கும் பூனை சுவரில்
இருந்து கேட்குதே
இளநீர் அரிக்கும் அணிலும் தலையை
எடுத்துக் கேட்குதே.

5 தாயின் பாலைக் குடிக்கும் குழந்தை
தவழ்ந்து கேட்குதே
தவளை பாம்பின் முதுகில் ஏறிச்
சாய்ந்து கேட்குதே.

6 கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தும் ஆடிறான்
கொட்டிக் கிழங்கைக் கிண்டும் குறத்தி
கும்மி கொட்டிறாள்.

# 20. பார்க்குந் தெய்வம்

1 அன்பின் சாயல் ஒளிவீச
அறிவின் ஆற்றல் நிழலாட
என்றும் இன்பம் எமக்குதவும்
எழிலார் கல்விப் பொருளொன்றே.

2 உள்ளத் தூறி உணர்வாகி
உரிமை வேட்கை அலைமோதுந்
தெள்ளத் தெளிந்த கல்வியைப்போல்
திருவும் எமக்கு வேறுண்டோ.

3 காலங் கடந்து மொழிகடந்து
கலைதேர் புலவர்க் குயிராகி
ஞாலம் புரக்குங் கல்வியைப்போல்
நற்றாய் எமக்கும் வேறுண்டோ.

4 கொல்லுந் துன்பம் வந்தாலும்
குளிர்ந்த உளத்தால் வரவேற்று
வெல்லும் வீரம் எமக்குதவும்
விறலார் கல்விப் பொருளொன்றே.

5 கண்போல் எம்மைக் காப்பாற்றிக்
கலைதேர் வாழ்வில் நிலையாக்கும்
பண்பார் கல்விப் பொருள்போலப்
பார்க்குந் தெய்வம் வேறுண்டோ.

6 பெற்ற இளமைப் பருவநலம்
பேணிக் கல்வி நனிபயின்று
வெற்றி யீட்டுங் கலைமுரசை
விண்ணா டதிரக் கொட்டிடுவோம்.

**வித்துவான் க. வேந்தனார்**

# ௨௧. நாட்டில் அன்பு

1 நாட்டில் அன்பு வேண்டும்
நன்றி அறிதல் வேண்டும்
பாட்டுப் பாட வேண்டும்
பந்தும் அடிக்க வேண்டும்.

2 துள்ளிக் குதிக்க வேண்டும்
தொண்டு செய்ய வேண்டும்
பள்ளிக் கூடஞ் சென்று
பாடம் படிக்க வேண்டும்.

3 ஈர நெஞ்சம் இல்லார்
எவர் எதிர்த்த போதும்
வீரன் போசைப் போன்ற
வீர நெஞ்சம் வேண்டும்.

4 ஆய்ந்து பஞ்சை நூலாய்
ஆக்கப் பழக வேண்டும்
காந்தித் தாத்தா போலக்
கதரும் உடுக்க வேண்டும்.

5 பொருளும் நிலமும் எவர்க்கும்
பொதுவாய் இருத்தல் வேண்டும்
அருளுந் தொண்டும் உலகை
ஆளப் பார்க்க வேண்டும்.

# 22. ஊஞ்சல் ஆடுவோம்

1 ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
உயர மான மரத்திலே
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்.

2 வலித்து மேலே ஏகுவோம்
வந்து கீழே சேருவோம்
குலுக்கி மரத்தை ஆடுவோம்
குருவி நுழைந்தும் ஓடுவோம்.

3 கூடிக் கூடி ஆடுவோம்
கும்மி கொட்டிப் பாடுவோம்
தேடி வந்த சேயுடன்
சேர்ந்து ஊஞ்சல் ஆடுவோம்

4 தம்பி வந்து பாரெடா
தமிழும் ஊஞ்சல் ஆடிறாள்
வெம்பி வெம்பி அழுதவள்
மெத்தப் புளுகாய் ஆடிறாள்.

5 எண்ணிப் பத்து முறைக்குமேல்
இருந்து கண்ணன் ஆடிறான்
கண்ணீர் விட்டுக் கதறுவாள்
கமல ராணி ஆடட்டும்.

# ௨௩. பந்தடிப்போம் நாங்கள்

1 பந்தடிப்போம் பந்தடிப்போம்
பந்தடிப்போம் நாங்கள்
பாய்ந்துதுள்ளி ஓடிஆடிப்
பந்தடிப்போம் நாங்கள்.

2 எங்கள்பக்கம் வெற்றிகொள்ளும்
என்றெதிர்த்துக் கூறி
எதிரெதிராய் நின்றுபந்தை
எடுத்தெறிந்து மாறிப் - பந்தடிப்போம்

3 உச்சிவானில் உயரும்பந்தை
ஓடிக்கையால் ஏந்தி
அச்சமின்றி எவர்வரினும்
ஆர்ப்பரித்துப் பாய்ந்து - பந்தடிப்போம்

4 வந்தபந்தை மறித்தடித்து
மற்றப்பக்கம் போக்கி
மண்டியிட்டுக் கைகளினால்
மாற்றுப்பந்தைத் தாக்கிப் - பந்தடிப்போம்

5 விழுந்துயர்ந்த பந்தைத்தட்டி
வீரமுடன் கூடி
வெற்றிவெற்றி யென்றுசொல்லி
வெற்றிப்பாட்டுப் பாடிப் - பந்தடிப்போம்

# ௨௪. இளநீர் குடிப்போம்

1 இளநீர் குடிப்போம் நாங்கள் நல்ல
இளநீர் குடிப்போம் நாங்கள்
இனிக்க இனிக்கச் சீனி போட்டு
இளநீர் குடிப்போம் நாங்கள்.

2 அல்லும் பகலும் தண்ணீர் ஊற்றி
ஐயா வளர்த்த தென்னை
ஆடும் மாடும் துரத்தி எங்கள்
அம்மா வளர்த்த தென்னை.

3 வட்டு நிறையக் குலைகள் தாங்கி
வாழும் தென்னம் பிள்ளை
எட்டி நாங்கள் இளநீர் பிடுங்கும்
இளைய தென்னம் பிள்ளை.

4 அடியில் ஊற்றும் நீரை இளநீர்
ஆக்கித் தந்த தென்னை
குடியில் பிறந்தோர் போல நன்றிக்
குணம்நி றைந்த தென்னை.

5 ஆண்டு நூறு வரையும் நின்றே
ஆக்கம் அளிக்கும் தென்னை
வேண்டும் நீரை இறைத்து நாங்கள்
விரும்பி என்றும் வளர்ப்போம்.

# ௨௫. கரும்பு தின்போம்

1 கரும்பு தின்போம் கரும்பு தின்போம்
கரும்பு தின்போம் நாங்கள்
கடித்துக் கடித்து இனிக்க இனிக்கக்
கரும்பு தின்போம் நாங்கள்.

2 தின்னத் தின்ன இனிக்கும் நல்ல
செங்க ரும்பைப் பாருங்கள்
தென்னை போலவளர்ந் துயர்ந்த
செங்க ரும்பைப் பாருங்கள்.

3 அடித்த டித்துக் கொல்லும் போதும்
ஆத ரிக்கும் அன்பர்போல்
இடித்தெ டுத்துத் தின்னும் போதும்
இனிக்கும் கரும்பைப் போற்றுவோம்.

4 கருப்பஞ் சாற்றைப் பிழிந்து வெல்லக்
கட்டி ஆக்கித் தின்னுவோம்
விருப்பம் போல அவலிற் போட்டு
விருந்தி னர்க்கும் நல்குவோம்.

# உ௬. உதவி

1 கண்ணில் லாத குருடன்
காலில் லாத முடவன்
உண்ண உணவு கேட்டால்
உவந்து கொடுக்க வேண்டும்.

2 ஆருங் குற்றம் செய்தால்
அதனைப் பொறுத்தல் வேண்டும்
சீறும் கோபம் ஆறிச்
சேர்ந்து வாழ வேண்டும்.

3 உள்ள பொருளில் பிறர்க்கும்
உதவி செய்ய வேண்டும்.
கள்ளம் கபடம் செய்தால்
கடவுள் பொறுக்க மாட்டார்.

4 இல்லா தார்க்குப் பொருளை
ஈவோர் தம்மைக் கண்டால்
நல்லாய் வாழ்த்த வேண்டும்
நன்றி கூற வேண்டும்.

5 உன்னை நீயே புகழ்ந்தால்
ஊரார் எல்லாம் சிரிப்பார்
அன்னை போன்றாய் என்றே
அறிஞர் புகழ வேண்டும்.

6 வெள்ளம் போன்ற துன்பம்
மேலும் மேலும் வரினும்
உள்ளங் கலங்கி டாமல்
உழைக்கும் ஊக்கம் வேண்டும்.

# 27. செயல்

1 செய்யும் வேலை எல்லாம்
திருத்த மாகச் செய்தால்
உய்ய வழியும் ஆகும்
ஊரும் புகழ்ந்து பேசும்.

2 அண்டிக் கெடுக்க நினைத்தால்
அழிவு நமக்கே ஆகும்
ஒண்டிக் கதைகள் கேட்டே
உரைக்கும் பழக்கம் தீது.

3 அரிய நூல்கள் எல்லாம்
அழுத்த மாகக் கற்ற
பெரியோர் கூறும் சொல்லைப்
பேணி நடத்தல் வேண்டும்.

4 பண்பைப் பார்த்து நன்றாய்ப்
பழகிக் கொண்ட பின்பே
நண்பன் இவனே என்று
நம்பி நடக்க வேண்டும்.

3 வாடித் துன்பத் தாலே
மடிய நேர்ந்த போதும்
கூடிப் பிரிந்தி டாமல்
குழைந்து வாழ வேண்டும்.

6 கள்ளச் சாட்சி சொல்லிக்
காசு தேடு வோரைத்
தள்ளி மிதிக்க வேண்டும்
சனியாய் நினைக்க வேண்டும்.

# ௨௮. ஒழுக்கம்

1 அல்லும் பகலும் நல்ல
ஆர்வத் தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்.

2 ஊனும் உலர்ந்து பசியால்
உயிரும் போக வரினும்
மானம் இன்றிப் பிச்சை
வாங்கி உண்ண வேண்டாம்.

3 பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத் தோடும் ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்.

4 இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது.

5 கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்.

6 பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.

# 29. கொடிய மொழிகள்

1 கொடிய மொழிகள் கூறும் பழக்கம்
கொள்ள வேண்டாம் நீங்கள்
முடிவி லாத கோபம் அதனால்
மூளும் பகையும் சேரும்.

2 அன்பும் சிரிப்பும் அகன்று போகும்
அயலும் உறவும் நீங்கும்
துன்பம் கொடுக்கும் கொடிய சொற்கள்
சொல்ல வேண்டாம் நீங்கள்.

3 இன்ப மான இனிய மொழிகள்
இயம்பி மகிழும் நீங்கள்
துன்பமான கொடிய மொழிகள்
சொல்லிப் பழக வேண்டாம்.

4 இனிய மொழிகள் இருக்கக் கொடிய
இன்னா மொழிகள் வேண்டாம்
கனிய ருந்திக் களித்தி டாமல்
காயைத் தின்ன லாமோ.

# 30. பச்சைக் கிளியின் பழைய நினைவுகள்

(ஓர் ஆங்கிலப் பாட்டின் மொழிபெயர்ப்பைத் தழுவியது)

**பவளம் வளர்த்த கிளி**

1 பவளம் பச்சைக் கிளியைப் பிடித்துப்
பாலும் பழமுங் கொடுத்தாள்
தவழும் பருவக் குழந்தைக் குருகும்
தாயைப் போல வளர்த்தாள்.

2 பச்சைக் கிளியும் பவளம் போலப்
பாடும் தமிழிற் பேசும்
இச்சை யுடனே பவளம் கேட்க
இளமை நினைவைக் கூறும்.

**முட்டையில் கரு**

3 முட்டைக் குள்ளே கருவாய் நானும்
முடங்கி வாழ்ந்த போது
வட்ட மான உலகம் நீல
வண்ணம் என்று நினைத்தேன்.

**கூட்டிலே குஞ்சு**

4 குடியி ருந்த முட்டை போகக்
கூட்டில் குஞ்சாய் வாழ்ந்தேன்
கொடியும் குச்சும் கொண்ட உலகம்
கூடே என்று நினைத்தேன்.

**இறகு முளைத்த சிறு பறவை**

5 இறகு முளைக்கக் கூட்டின் வெளியே
இறங்கி நின்று பார்த்தேன்
நிறையக் கிளைகள் இலைக ளோடு
நின்ற மரத்தைக் கண்டேன்.

6 உச்ச மான மரத்தின் மேலே
உலாவி வாழ்ந்த போது
பச்சை யான இலையால் உலகைப்
படைத்த தென்று நினைத்தேன்.

**பறக்கும் பெரும் பறவை**

7 காலப் போக்கில் இறகு வலிமை
காட்டி வளர நானும்
நீல வானில் பறந்து நின்று
நேரில் உலகைப் பார்த்தேன்.

8 உலகம் மிகவும் பெரிய தென்ற
உண்மை உணர்ந்து கொண்டேன்
நிலவும் நீல வானின் அகலம்
நினைந்து வியப்புக் கொண்டேன்.

9 இந்த உலகின் பரப்பை நோக்கி
எனது சிறுமை தெரிந்தேன்
எந்த வகையில் முயன்றும் உலகின்
எல்லை காண ஏலுமோ.

# 31. கூண்டிற் கிளி

**பவளம்:**

1 பச்சைக் கிளிநீ பாடாயோ
பவளம் என்றும் கூறாயோ
கொச்சி மிளகாய் தருகின்றேன்
கொய்யாப் பழமும் தருகின்றேன்.

2 வண்ணக் கூண்டில் இருக்கின்றாய்
வளையத் தின்மேல் நடிக்கின்றாய்
கண்ணில் நீரை நிறைக்கின்றாய்
கவலை உனக்கும் வேறுண்டோ.

3 பூனை வந்து பிடிக்காமல்
பூட்டி உன்னைக் காத்திடுவேன்
தேனைப் போன்ற மாங்கனிகள்
தேடித் தின்னத் தந்திடுவேன்.

**கிளி:**

4 பச்சைக் கிளியும் நானேதான்
பவளக் கொடியும் நீயேதான்
கொச்சி மிளகாய் தின்றென்ன
கொய்யாப் பழமும் தின்றென்ன.

5 கூட்டில் என்னை அடைத்துநீ
குழந்தை மொழிகள் சொல்கின்றாய்
வீட்டில் உன்னை அடைக்கநீ
விரும்பும் இன்பம் கொள்வாயோ.

6 காலைத் தூக்கி நடிக்கின்றாய்
கையைக் காட்டி அழைக்கின்றாய்
கோலப் பந்தை அடிக்கின்றாய்
கூந்தல் பின்னி முடிக்கின்றாய்.

7 பள்ளிக் கூடம் போகின்றாய்
படமும் பார்க்கப் போகின்றாய்
வெள்ளம் பெருகும் ஆற்றிலே
வீழ்ந்து நீந்திக் குளிக்கின்றாய்.

8 கல்லைத் தூக்கி எறிகின்றாய்
கனிகள் வீழ்த்தித் தருகின்றாய்
நல்லம் மாவுன் தோழியுடன்
நாளுங் கூடித் திரிகின்றாய்.

9 சிறகை விரித்துப் பறக்கவோ
தேடிப் பழத்தைப் புசிக்கவோ
பறவை இனத்தைக் கலக்கவோ
பாவி எனக்கு விதியில்லை.

10 பச்சைச் சிறகை விரித்துநான்
பறந்து வானிற் பாடுவேன்
உச்சிக் கொம்பிற் சேருவேன்
உன்னை அங்கு கூவுவேன்.

11 சோலைதோறும் சென்று சென்று
தோழி மாரைக் கூடுவேன்
மாலை தோறும் வந்துனது
மாம ரத்திற் பாடுவேன்.

12 தோழிக்கிளிகள் சூழ வந்து
தோழி யுன்னைப் போற்றுவேன்
வாழி பவளம் என்னைநீ
வைத்த சிறையில் நீக்குவாய்.

13 அடிமைவாழ்வு ஒழிக வென்றே
அன்புக் காந்தி சொல்லவும்
கொடிய சிறையில் வைத்தென்னைக்
கொல்லு கின்றாய் நல்லதோ.

**பவளம்:**

14 நல்ல மொழிகள் கூறியே
நாண வைத்தாய் என்னைநீ
செல்வக் கிளியென் தோழியே
சிறையை நீக்கி விடுகின்றேன்.

15 கூட்டில் உங்கள் குலத்தினைக்
கொண்ட டைத்தல் கொடியது
காட்டில் வானிற் பறந்துநீர்
காணும் இன்பம் பெரியது.

16 பவளம் கூட்டைத் திறந்தனள்
பச்சைக் கிளியும் பறந்தது
அவளும் வானைப் பார்த்தனள்
அன்புக் குரலுங் கேட்டது.

# 32. அணில்

1 துள்ளிக் குதிக்கு தடா - வாலைச்
சுழற்றிப் பாயு தடா
கொள்ளிக் கண்க ளடா - வண்ணக்
கோட்டு வரிக ளடா.

2 வட்டம் போடு தடா - பெரிய
மரத்தில் ஏறு தடா
கிட்டப் போக வென்றால் - ஓடிக்
கிளையில் மறையு தடா.

3 காய்கள் கனிகள் எல்லாம் - பல்லால்
கடித்துத் தின்னு தடா
நாய்கள் வருதல் கண்டால் - உள்ளம்
நடுங்கிப் பதுங்கு தடா.

4 கிலுங்குஞ் சதங்கை போல - நல்ல
கீதம் பாடு தடா
குலுங்கும் மலரை எல்லாம் - காலால்
குத்திக் கொட்டு தடா.

5 பொறியில் இருக்கும் உணவை - மெல்லப்
பொறுக்கித் தின்னு தடா
பறியும் நேரம் பார்த்துத் - துள்ளிப்
பனையில் எறு தடா.

6 குலையில் குந்திக் குந்தி - இளநீர்
குடித்து மகிழு தடா
தலையைச் சாய்த்துப் பார்த்துப் - பகைக்குத்
தப்பி ஓடு தடா.

7 பிள்ளை அணிலைக் கண்போல் - என்றும்
பேணி வளர்க்கு தடா
கள்ளம் பாய்ச்சல் ஓட்டம் - எல்லாம்
காட்டிக் கொடுக்கு தடா.

8 உச்ச முகட்டில் ஏற்றி - நல்ல
ஓட்டம் பழக்கு தடா
அச்ச மின்றி எங்கும் - கூட்டி
ஆட்டம் பழக்கு தடா.

9 கூட்டில் அணிலைப் பூட்டி - வைத்தல்
கொடுமை கொடுமை யடா
காட்டில் மரத்தில் அணில்கள் - வாழும்
காட்சி இனிய தடா.

10 துள்ளும் அணிலின் கூட்டம் - எங்கள்
சொந்தத் தோழ ரெடா
கள்ள மின்றித் தென்னந் - தோட்டம்
காட்டிக் கொடுப்போ மடா.

# 33. கீரிமலை

1 கீரி மலைநீர் ஆடுவோம்
கிளர்ச்சி கொண்டு பாடுவோம்
ஊரில் உறையும் மக்கள்நாம்
உரிமை யோடு கூடுவோம்.

2 அன்பும் அருளும் பெருகவே
அறமும் பொருளும் நிறையவே
இன்பக் கீரி மலையிலே
இன்று தீர்த்தம் ஆடுவோம்.

3 பொய்யும் கொலையும் போகவே
புதிய வாழ்வு சேரவே
தெய்வக் கீரி மலையிலே
சென்று தீர்த்தம் ஆடுவோம்.

4 ஆடிக் கரையில் ஏறுவோம்
ஆடை அணிகள் போடுவோம்
தேடிக் கீரி மலையிலே
தெய்வம் பரவச் சேருவோம்.

# 34. பண்ணைப்பாலம்

1 பண்ணைப் பாலம் நாங்கள் சென்று
பார்க்க நல்ல பாலம்
கண்ணைக் கவரும் கடலின் அழகைக்
காண நல்ல பாலம்.

2 வெள்ளித் துண்டு போல மீன்கள்
மேலும் கீழு மாகத்
துள்ளித் துள்ளிப் பாலத்தின் மேல்
சுழன்று சுழன்று வீழும்.

3 பாலத்தின் மேல் நடந்து நடந்து
பார்க்கும் போது நல்ல
நீலக் கடலின் அலைகள் எல்லாம்
நெளிந்து நெளிந்து சுருளும்.

4 பாட்டுப் பாடிக் கொண்டு நிலவில்
பாலத்தின் மேல் நின்று யாழ்க்
கோட்டை அழகைப் பார்க்கும் போது
குதூகலிக்கும் உள்ளம்.

5 தீவுப் பகுதி மக்களுக்கோர்
தெய்வம் போலத் தோன்றும்
ஆவிக்கினிய பண்ணைப் பாலம்
அழகுக் காட்சிப் பாலம்.

# 38. இனிய மொழிகள்

1 இனிய மொழிகள் பேசி நீங்கள்
இன்பம் எய்த வேண்டும்
கனியைத் தின்று மகிழும் இன்பம்
கண்டு வாழ வேண்டும்.

2 எல்லோ ருக்கும் இன்பம் ஈதல்
இனிய மொழியால் ஆகும்
நல்ல அன்பும் நண்பும் புகழும்
நம்மை வந்து சேரும்.

3 அல்லல் அகலும் செல்வம் குவியும்
அருளும் சுரந்து பாயும்
நல்ல இனிய மொழிகள் கூறி
நாங்கள் சேர்ந்து வாழ்வோம்.

# நாடு

# 1. இலங்காதேவி வாழ்க

1 தேனை அமிழ்தினைப் பாலைக் கனியினைச்
சேரக் கலந்திடும் பாகினைப்போல்
ஊனை உருக்கியே இன்பப் பெருஞ்சுவை
ஊற்றிடுஞ் செந்தமிழ் வாழியவே.

2 செந்தமிழ் அன்னையின் செல்வத் திருமகள்
சீரிலங் காதேவித் தேமொழியாள்
எந்தமை ஆட்கொள வந்த திருநாளை
இன்ப வெறியுடன் ஏத்துவமே.

3 உள்ளத் துணர்வினை ஊட்டிடு வாள்இந்த
உலகினை ஆளவுங் காட்டிடுவாள்
வெள்ளப் பெருக்கினில் ஆய்வுக் கலைகளை
வீறுகொண் டோங்கிடச் செய்திடுவாள்.

4 ஏழை முதலாளி என்னும் வகுப்பிந்த
இலங்கையில் இல்லையென் றோட்டிடுவாள்
வாழை யடிவாழை யென்றே வழிவழி
மன்னுஞ் சுதந்திர மாக்கிடுவாள்.

5 வெற்றி முரசினைக் கொட்டிடு வாள்எங்கும்
வீரக் கனலொலி விட்டிடுவாள்
கொற்ற மளிப்பது மக்களின் அன்பெனக்
கூறிநின்றே மார்பு தட்டிடுவாள்.

6 உண்டி உடையின்றி மக்கள் உலைவதும்
ஊழின் பயனென் றுரைத்திடுவோர்
அண்டி அவர்க்கென்றும் அடிமைசெய் மக்களை
ஆக்கிடுஞ் சூழ்வினை யாளரென்பாள்.

7 தந்தை யடிமையும் மைந்த னடிமையும்
சாற்றும் வழிமுறை நின்றதென்றால்
எந்த வகையிலும் இன்ப விடுதலை
எய்தும் வழியவர்க் கில்லையென்பாள்.

8 தந்தை அடிமைத் தளையறுத் தேயவன்
தனயனைச் சுதந்திர முடிகவித்தே
இந்த உலகினில் ஊழின் வழிதொலைத்
தெங்களை ஊக்குமோர் தேசமென்பாள்.

9 தெய்வத்தின் பேரினால் மக்களை அடிமைகொள்
தீவினை யாளரைப் போக்கிடுவாள்
மெய்ம்மை அறிவுடன் உலகுக் குழைத்திடும்
வீரப்பண் பாளரைப் போற்றிடுவாள்.

10 போற்றிடுவோம் இலங்கா தேவியின் பொன்னடி
பொங்குஞ் சுதந்திர தாகமுடன்
ஆற்றலுடன் எங்கள் ஆவி பொருளெல்லாம்
அன்னை விடுதலைக் காக்கிடுவோம்.

**வித்துவான் க. வேந்தனார்**

# ௨. இலங்கை எங்கள் நாடு

1 இலங்கை எங்கள் நாடடா இனப்பு ரட்சி ஏனடா
துலங்கு கின்ற சுதந்திரம் சொல்லிப் பள்ளுப் பாடடா.

2 ஆளும் சாதி நாமடா அன்புக் குரலிற் கூவடா
பாழும் வகுப்பு வாதிகள் படப டப்பைப் பாரடா.

3 செல்வ னென்றும் ஏழையென்றும் செப்பு கின்ற வகுப்பினி
இல்லைஈழ நாட்டி லென்றே எங்குஞ் சங்கம் ஊதடா.

4 பிறப்பு ரிமை யாகஈழம் போற்றி வந்த தமிழரின்
சிறப்புரிமைத் தோழர் என்றும் சிங்க ளவர் தானடா.

5 வீர முரசைக் கொட்டடா வெற்றிக் கொடியைக் கட்டடா
ஓர மின்றி யொன்றுகூடி உரிமை வாழ்வைப் பற்றடா.

# ૩. கொடி தாங்குவோம்

**(இலங்கை சுதந்திரம் பெறுமுன் பாடியது)**

1 எங்க ளிலங்கையும் ஆங்கி லேயரின்
இல்லமோ - இது - நல்லதோ
தங்க ளாட்சியை இங்கு நாட்டிடச்
சாற்றினார் - வழி - மாற்றினார்.

2 பொங்குஞ் சுதந்திரம் இலங்கையர்க் கேயென்று
போற்றினார் - பறை - சாற்றினார்
எங்கும் வீழ்ந்திடும் ஆங்கி லக்கொடி
ஏற்றினார் - விழ - வாற்றினார்.

3 ஆளும் படைப்பெலன் ஆங்கி லேயர்க்கே
ஆவதோ - நாங்கள் - சாவதோ
வாழுஞ் சுதந்திரம் மான மழிந்தினி
வாங்கிடோம் - உயிர் - தாங்கிடோம்.

4 ஆளும் முதலாளிக் கூட்டத் தினரெம்மை
ஆட்டிறார் - உயிர் - வாட்டிறார்
மீளும் வழியின்றி ஆங்கிலர்க் கேயெமை
விற்கிறார் - கொல்ல - நிற்கிறார்.

5 காட்டிக் கொடுத்திடுங் கட்சிக் கிலங்கையுங்
காணியோ - சொந்தப் - பூமியோ
நாட்டிற் பிறந்திடும் நாங்க ளனைவரும்
நாய்களோ - பெல்லிப் - பேய்களோ.

6 நாட்டின் மக்களை நசுக்கிச் சுதந்திரம்
நாட்டினார் - புகழ் - ஈட்டினார்
ஏட்டுச் சுதந்திர மென்றெதிர்ப் போர்களை
ஏசினார் - வீரம் - பேசினார்.

7 மக்கள் கொதித்தெழின் ஆங்கிலப் பீரங்கி
மாட்டவோ - தளை - பூட்டவோ
தக்க விழிப்புடன் ஆங்கில ரொப்பந்தந்
தாங்கினார் - உயிர் - வாங்குவார்.

8 ஆட்சிப் படைபெறு மாங்கில ராட்சியை
அஞ்சிடோம் - இனித் - துஞ்சிடோம்
மாட்சி கொளிலங்கை வாழச் சுதந்திரம்
வாங்குவோம் - கொடி - தாங்குவோம்.

# 4. தீயணைத்திடக் கூடுங்கள்

1 தொண்டு செய்திடச் சேருங்கள்
தோளைத் தட்டியே வாருங்கள்
இன்று சுதந்திர தாகத்தால்
எத்தனை பேருயிர் விடுகின்றார்.

2 கொலைகள் செய்வதும் வீரமோ
கொள்ளை அடிப்பதும் வீரமோ
நிலைமை தளர்ந்துயிர் போகினும்
நேர்மையைக் காப்பது வீரமே.

3 வஞ்சனை செய்திடு வோர்களும்
வழிப்பறி செய்திடு வோர்களும்
விஞ்சிய வீரர்க ளாகநாம்
வீட்டி லுறங்கிடும் வீரரோ.

4 கொடுமை புரிந்திடு வோர்களைக்
கும்பிட்டு வாழுதல் வீரமோ
அடிமை யிதிற்பெரி தாகுமோ
ஆண்மை யென்பதும் வாழுமோ.

5 ஏழை யொருவனின் துன்பமும்
எங்கள் யாவர்க்குந் துன்பமே
வாழ்வு பெரிதெனக் கொண்டநாம்
மானங் காத்திட வேண்டுமே.

6 ஊரை யெரித்திடுந் தீயினை
உடனே யணைத்திடக் கூடுங்கள்
கூரை வீட்டினிற் பற்றியே
கோவி னரண்மனைக் கேறிடும்.

# ந. சுதந்திர வெள்ளம்

1 அலையெ றிந்து சுதந்தி ரத்தின்
ஆற்று வெள்ளம் பெருகுதே
கொலை செறிந்த அடிமைத் தீயின்
குலம விந்து முடியுதே.

2 வீர னெங்கள் நேரு நின்று
விருந்த ளிக்குஞ் சுதந்திரம்
ஓர மின்றி வாய்மை ஊறி
உலக மெங்கும் பாயுதே.

3 அன்பு தொண்டு வீரம் மூன்றும்
ஆர்த்தெ ழுந்த பண்பினால்
வன்பு கொண்டெ திர்த்து ளோரும்
வாழ்க வென்று பாயுதே.

4 கொள்ளை போன சாதி சமயக்
கொடிய போர்கள் ஒழியவே
உள்ள மார ஊற்றெ ழுந்த
உரிமை வீறிப் பாயுதே.

5 ஆளு கின்ற சாதி யென்றும்
அடிமை யென்றும இல்லையே
வாழு கின்ற மக்க ளிங்கு
மன்ன ரென்று பாயுதே.

6 அன்புக் காந்தி நெஞ்சில் நின்ற
ஆண்மைக் கனலின் ஆற்றலால்
துன்பக் கானைச் சுட்டெ ரித்தே
சுதந்தி ரத்தேர் ஏறினோம்.

7 தலைமை கொண்ட சுதந்தி ரத்தின்
தாய்மை யின்பத் தேட்டமாங்
கலைகள் யாவு மாய்ந்து புதுமை
காட்டக் கொடிகள் தூக்குவோம்.

8 கஞ்சி யின்றி நொந்த லைந்து
கதறு கின்ற குரலிலே
விஞ்சு கின்ற சுதந்தி ரத்தின்
வீர நாதங் கேட்குதே.

9 நெஞ்சில் என்றும் ஈர மின்றி
நிறைந்த செல்வர் வாழ்விலே
அஞ்சி நொந்து கூவு கின்ற
அவல நாதங் கேட்குதே.

10 வீர முற்று விழித்தெ ழுந்த
விடுத லைப்போர் வீரர்நாம்
பார தத்தாய் சுதந்த ரத்தின்
பயனு லகுக்காக் குவோம்.

# ௬. உழவு

1 எங்கள் வாழ்வு உலகில் என்றும்
ஏற்ற மெய்த வேண்டினால்
பொங்கு கின்ற ஆற்றலோடு
புதுக்கி வயல்கள் திருத்துவோம்.

2 உழவுத் தொழிலே உலகைத் தாங்கும்
உண்மைத் தொழிலென் றேத்துவோம்
விழவுக் கால வெறியைக் கொண்டு
வெற்றிக் கொடியைத் தூக்குவோம்.

3 உழுதுண் வாழ்வை இகழ்ந்து வெளியில்
உணவுப் பொருளைப் பெற்றநாம்
தொழுதுண் வாழ்வின் சுவையில் நீங்கித்
தொன்மை உழவைத் தொடங்குவோம்.

4 உழவன் எங்கள் தந்தை என்றே
உரைக்க நாணும் வீரர்நாம்
பழைமை யான உழவர் எங்கள்
பரம்பரை யென்றாக் குவோம்.

5 உண்ட நெல்லின் மிகுதி வேறோர்
ஊருக் குதவும் ஈழத்தோம்
மண்டு கின்ற பசியில் இன்று
மான மின்றி வாழ்வதோ?

6 ஈழ நாட்டின் காட்டை வெட்டி
எங்கும் வயல்கள் ஆக்குவோம்
தாழ மாட்டோம் பிறருக் கென்று
சாற்றி ஏரைப் பூட்டுவோம்.

# 7. ஒன்றுசேர்வோம்!

1 அளவில் அன்பும் அறமும் பிறரின்
அல்லல் போக்கி அருளும் பண்பும்
உளமு வந்து கலைகள் யாவும்
உணரு கின்ற ஒளியுந் திறமும்
இளமை தொட்டு மக்கள் வாழ்வில்
இயைந்து வீறி இலங்கும் வண்ணம்
விளைவு செய்திவ் வுலகை ஓம்ப
வீரர் ஒன்று சேர்ந்து வாரீர்.

2 மொழியி னாலும் நெறியி னாலும்
மூண்டெ ழுந்த பகையில் வீறி
அழிவு செய்யும் வகைகள் நாடி
அல்ல லடையும் மக்கள் உள்ளம்
வழிவ ழியாய் அன்ப ரும்பி
மலரும் இன்பச் சோலை யாக
விளைவு செய்திவ் வுலகை ஓம்ப
வீரர் ஒன்று சேர்ந்து வாரீர்.

3 கம்பன் கவிதை வளமும் கருணைக்
காளி தாசன் புலமை நெறியும்
இம்பர் உலகில் வள்ளு வப்பேர்
ஏந்தல் ஈந்த குறளின் அறமும்
நம்புந் தெய்வப் பண்பை நாட்டி
ஞான வாழ்வை விளைவு செய்வோம்
உம்பர் உலகில் இந்த உலகம்
உயர்ந்த தென்றே உவகை கொள்வோம்.

4 புத்தன் அன்புக் குரலும் யேசு
புகன்ற மறையும் காந்தி வாழ்வும்
சித்தஞ் சிவமாய் வாத வூரர்
தெளிந்த ஞானத் தேனின் சுவையும்
இத்த ரைக்கண் அலைஎ றிந்தே
எங்கும் பெருகிப் பரவச் செய்வோம்
நித்த மான அன்பின் விளைவை
நிறைய நிறைய நுகர்ந்து வாழ்வோம்.

5 பொய்ம்மை களவு பொறாமை யென்னும்
புன்மைக் களைகள் போக்கி மேலாம்
மெய்ம்மை தொண்டு வீரம் முதலாய்
விளம்பு கின்ற பயிர்கள் விளைவு
செய்தல் ஒன்றே நோக்க மாகத்
திரண்டு வாரீர் தேச மெல்லாம்
தெய்வ நீதி ஓங்கச் செய்து
தேவர் போலச் சிறந்து வாழ்வோம்.

# ௮. உலகம் எங்கள் தாயகம்

1 உலகம் எங்கள் தாயகம்
உண்மை எங்கள் வாழ்வகம்
நிலவுங் காந்தி ஆகமம்
நிறைந்த தெங்கள் பாரதம்.

2 கொடுமை கண்டும் அஞ்சிடோம்
கொள்ளை கண்டும் அஞ்சிடோம்
கடமை என்றும் ஆற்றுவோம்
காந்தி வாய்மை போற்றுவோம்.

3 ஆளுந் தொண்டர் கூடுங்கள்
அன்புக் குரலிற் கூவுங்கள்
பாழுஞ் சாதிப் பகுப்பெலாம்
பட்ட தென்று பாடுங்கள்.

4 ஆட்டை அன்புக் கோவில்முன்
அறுக்கும் கொடுமை அகற்றுவோம்
நாட்டில் இந்தக் கொடுமையோ
நாங்கள் காட்டு மறவரோ.

5 தொண்டு செய்யச் சேருங்கள்
துன்பக் கனலிற் பாயுங்கள்
குண்டு நெஞ்சிற் பாயினும்
கும்பிட் டுண்மை கூறுங்கள்.

**வித்துவான் க. வேந்தனார்**

6 கள்ளுக் குடியைப் போக்குவோம்
களவுத் தொழிலை நீக்குவோம்
உள்ளந் துணிந்து வாருங்கள்
உண்மை வெல்லும் பாருங்கள்.

7 தன்ன லத்தைக் கொன்றவர்
தாய கத்தைத் தந்தவர்
இன்னல் கோடி எய்தினும்
இன்ப வாழ்வு கண்டவர்.

8 உடலும் பொருளும் ஆவியும்
உலகம் வாழக் கொடுப்பவர்
கடவுள் போல எங்களைக்
காக்கும் வீரத் தொண்டர்கள்.

9 அடிமை வாழ்வு நீங்கிநாம்
ஆளும் வாழ்வு தாங்கியும்
கொடுமை போக வில்லையே
கொலைகள் போக வில்லையே.

10 பெற்ற உரிமை ஆட்சியைப்
பேணல் எங்கள் மாட்சிமை
வெற்றி வாழ்வின் காட்சியை
வீறும் அன்பால் நாட்டுவோம்.

# வாழ்வு



# 1. நாமகள் வழிபாடு

1 செந்தா மரைமேவுஞ் செல்வன் திருவுளஞ்சேர்
சிந்தா மணியே செழுந்தேனே-கொந்தார்
நறுங்கூந்தற் கோமளமே நாமகளே என்றும்
உறுங்கூர்ந்த கல்விதா ஓர்ந்து.

2 முலைமுகங் கொண்டெழுந்த முற்றாப் பருவங்
கலைமுகங் கொண்டெழுந்த கண்ணே - அலைமுகம்
அன்றெழுந்த செந்திருவும் ஆர்கலையின் தண்ணிலவும்
இன்றெழுந்த வுன்னிடத்தே ஏர்ந்து.

3 உள்ளங் கவர்ந்தென்றன் ஊக்கந் தனிற்கலந்து
தெள்ளுந் தமிழான தெய்வமே - கள்ளம்
அறியாப் பருவமென் அன்பிற்கே ஆர்ந்தாய்
குறியாயோ இன்றென்னைக் கூறு.

4 மெய்கண்டார் உள்ளம் விளங்குங் கலையமிழ்தே
பொய்கண்டார் காணாப் பொருள்நிறைவே - உய்நெறியின்
செம்மை கனிந்த திருநான் மறைமுதலே
அம்மையே உன்னருளால் ஆக்கு.

5 நலமா மணியே நறுந்தமிழின் தெய்வப்
புலமாருஞ் செல்வர் புணையே - நிலமார்ந்த
பன்மொழியின் தாயே பனுவற்பூங் கற்பகமே
மன்னளியா ரின்பம் வழங்கு.

6 சேக்கிழார் அன்பின் தெளிவே திருவருளின்
ஆக்கமார் நால்வர் அருள்நிதியே - நோக்கமைந்த
வள்ளுவரின் முப்பால் வழங்குங் கலைமகளே
தெள்ளுந் தமிழ்ப்புலந்தா தேர்ந்து.

7 சிந்தாமணி நலத்தைச் சேரன் சிலம்பொலியை
நந்தாக் கலித்தொகையை நற்றிணையைத் - தந்தருளிச்
செந்தமிழின் இன்பச் சுவையுணர்த்துந் தேமொழியே
வந்தருள்வாய் பல்கலையின் மாண்பு.

8 செழுநான் மறைக்கொழுந்தே செந்நாவின் வாழ்வே
தொழுவார்க் கருள்சுரக்குந் தோழி - வழுவாத
தெய்வப் புலமைவளர் செம்பொருளே நீயன்றி
உய்வைத் தருவாரார் ஓது.

9 இப்பிறவி தன்னில் இளங்கிளியே நாமகளே
தப்பியுன தின்னருளைச் சார்ந்திலனேல் - எப்பிறவி
உற்றிடினும் உன்சீர் உரைத்தே யொருகாலம்
பெற்றிடுவேன் இன்பம் பெரிது.

10 தென்பொதிகைத் தென்றலும் தீந்தமிழின் இன்சுவையும்
அன்பொழுகும் ஐந்திணையின் ஆய்நலனும் - இன்புதவும்
தொல்காப்பியப் பயனும் தோலாச்செந் நாப்புலனும்
நல்குவாய் நாமகளே நன்கு.

**வித்துவான் க. வேந்தனார்**

# உ. அன்பின் சாயல்

1 ஈர மான நெஞ்சும் ஈகை கூடு வாழ்வும்
ஓர மான நீங்கி உண்மை கூறும் பண்பும்
வீர மாக நின்று வெற்றி ஈயு மல்லால்
ஆர வாரப் போரின் ஆகும் வெற்றி உண்டோ.

2 குயிலின் குரலின் இன்பம் குழந்தை மொழியின் இன்பம்
மயிலின் சாயல் இன்பம் மலர்ந்த மலரின் இன்பம்
அயிலின் விழிகள் வீசும் அழகுப் பெண்ணின் இன்பம்
பயிலும் அன்பி னாகப் பகையும் போரு மென்னோ.

3 தெள்ளுந் தமிழின் இன்பம் தெய்வத் தென்றல் இன்பம்
அள்ளும் தேற லின்பம் அமிழ்தப் பிழிவின் இன்பம்
விள்ளுங் கனியி லூறி விளைந்த சுவையி னின்பம்
உள்ளும் அன்பி னாக உலகிற் பகைமை யென்னோ.

4 கலைகள் ஆயு மின்பம் கவிதை பாடு மின்பம்
உலையும் மக்கள் வாழ உறுதி தேடு மின்பம்
நிலையில் அடிமை நீங்கி நெஞ்சு மகிழு மின்பம்
அலகில் அன்பி னாகும் ஆண்மைப் பணிக ளன்றோ.

# ௩. கவிஞன்

1 பாடுகின்றோர் எல்லோருங் கவிஞ ரல்லர்
பாட்டென்றாற் பண்டிதர்க்கே உரிமை யல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெழுந்த ஒளியால் ஓங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சி கொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்கு மாற்றல்
கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி கொண்டு
குமுறுகின்ற கோளரியே கவிஞ னாவான்.

2 பஞ்சணையில் வீற்றிருந்து பனுவல் பார்த்துப்
பாடுகின்ற கவிதைகளும் பாராள் வேந்தர்க்
கஞ்சியவர் ஆணைவழி அடங்கி நின்றே
ஆக்குகின்ற கவிதைகளும் அழிந்து போகும்
கஞ்சியின்றிக் கந்தைசுற்றி வாழ்வா னேனுங்
கனல்வீசி எரிமலைதீக் கக்கல் போல
விஞ்சுகின்ற சிந்தனையால் விழுங்கப் பட்டு
விருந்தளிக்கும் விறலோனே கவிஞ னாவான்.

3 கற்கண்டே செழுந்தேனே கனியே யென்று
கலகலப்பாய்ச் சுவைப்பெயர்கள் கலந்த நல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதை யெல்லாஞ்
சொன்னவர்க்குந் தெரியாமல் தொலைந்து போகும்
விற்கொண்டு விடும்வீரன் அன்பு போல
விசைகூடும் அறிவுப்போர் வீறு தாங்கித்
தற்கொண்ட புலமைவெறிச் சொல்லாற் சான்றோன்
சாற்றுகின்ற கவிதையென்றுஞ் சாத லில்லை.

4 அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதி கலம்பகங்கள் பார்த்துப் பார்த்து
விம்மாமற் பொருமாமற் கண்ணீர் விட்டு
விலைக்குமா ரடிக்கின்ற மெல்லி யர்போல்
சும்மாயோர் உணர்வின்றிச் சொற்கள் சேர்த்துச்
சொன்மாலை தொடுக்கின்றோர் கவிஞ ரல்லர்
தன்மானத் துள்ளொளியால் உலகை ஓம்புந்
தனியாற்றல் தாங்கிநிற்போர் கவிஞ ராவார்.

5 பாட்டிற்கோர் புலவனென்றே தமிழ்நா டெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கை யின்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்பு வோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதி னாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும்.

# ௫. வீறுகொண்ட தமிழன்

1 ஊறுகின்ற உணர்ச்சி வெள்ளம்
உயிர்க லந்து பாய்தலால்
வீறு கொண்ட தமிழனிங்கு
வீர மோடு தோன்றினான்.

2 ஆறெழுந்து பொருதல் போல
அலையெ றிந்த உணர்வினால்
வேறெழுந்த கொள்கை வேரை
வெட்டி வெந்நீர் ஊற்றினான்.

3 ஆறிநின்று கைகள் கட்டும்
அடிமை யாளர் நாங்களோ?
தேறுகின்ற அறிவி னாற்றல்
தெய்வந் தந்த தில்லையோ?

4 சாறுகொண்டு கோது வீசும்
தறுக ணாளர் குழுவினால்
ஏறுகின்ற எங்கள் வாழ்வு
இடிந்தி டிந்து வீழ்வதோ?

5 கூறுகின்ற கொள்கை வீரர்
கூட்ட மெங்கள் நாட்டிலே
ஏறுகின்ற தன்றி வேறோர்
ஏற்ற மென்ப தில்லையே.

6 மாறுகின்ற உலகில் நாங்கள்
மாற்ற மின்றி வாழ்வதால்
சேறுகொண்ட கிணறு போலச்
சிறுமை கொண்டு வீழ்வதோ?

7 நூறுகண்ட ஊழி தொன்மை
நுவலு கின்ற தமிழர்நாம்
வேறுகொண்ட தன்மை நீங்கி
வெற்றி கொண்டு வாழுவோம்.

# ந. வீரர் முரசு

1 வீர மென்னுந் தெய்வ முண்ண
விருந்த ளித்த வீரர்கள்
சேர சோழ பாண்டி மன்னர்
செந்த மிழ்நா டாண்டநாள்
ஈர நெஞ்சி னோடெ வர்க்கும்
ஈகை யென்று கொட்டிடும்
வார ணிந்த முரசி தென்றே
வாழ்த் தெடுத்துக் கொட்டுவோம்.

2 வெல்லு கின்ற போர்க்க ளத்தில்
வீர ராக நின்றவர்
கல்லில் நின்ற வீர ராதல்
கண்டு வக்கும் தமிழர்நாம்
கொல்லு கின்ற அடிமை வாழ்வின்
கொடுமை வீழக் கொட்டிடும்
நல்ல வெற்றி முரசி தென்றே
ஞால மெங்குக் கொட்டுவோம்.

3 ஆளு கின்ற எம்மை யின்றும்
அடிமை யாக வைத்திடும்
தாழு கின்ற சாதி சமயச்
சண்டைக் கான மெரியவே
மூளு கின்ற சுதந்தி ரத்தீ
முனைத்தெ ழுந்த துடிப்பினாற்
சூழு கின்றோம் தமிழ ரென்று
சொல்லி முரசைக் கொட்டுவோம்.

# ௬. கைதொழுவேன்

1 தன்னலமே பெரிதாகக்
கருதியிந்த உலகில்
தவிக்கின்ற மக்கள்தமை
அவிக்கின்ற கொடியோர்
கன்னல்குடித் திறுமாக்கும்
பெருமிதப்பேய் வாழ்வைக்
கண்டிகழும் தொண்டரடி
கைதொழுவேன் யானே.

2 கனிப்பிழிவுங் கொழுந்தேனுங்
கருக்கண்டிற் கலந்து
காய்ச்சியிளம் பதத்தெடுத்த
கட்டியுடன் பாகின்
இனிப்பளைந்த பாலடிசில்
அருந்தியெமக் குதவா
தெடுத்தெறிமின் எனத்தருக்கி
இருப்பாரை மதியேன்.

3 தனித்திருந்து தானடைந்த
துன்பமெலாஞ் சாற்றித்
தலைவிதியோ வெனப்புலம்பித்
தளர்ச்சிமிகக் கொண்டு
பனிக்குளிருங் கொடுவெயிலும்
பசிக்கனலுங் கொல்லப்
பதைபதைக்கு மேழைக்கோர்
பணங்கொடுத்தார்க் கடியேன்.

# 7. உரிமை வாழ்வு காண்போம்

1 சிந்தனையால் உண்மைநிலை தெளிந்து நல்ல
செயலாற்றி உலகோம்புந் திறமை இன்றி
முந்தையுளோர் மொழிந்தமொழி முற்றும் நம்பி
முயன்றுபுது நெறிகாணும் முதன்மை தேய்ந்து
நொந்துலைந்தோம் இனிப்பழைமை நுவலும் பண்பை
நொடிப்பொழுதில் ஒழித்திடுவோம் நுடங்கி நாய்போல்
வந்தனையும் வழிபாடும் பிறர்க்குச் செய்து
வாழும்வழி அடைத்துரிமை வாழ்வு காண்போம்.

2 உலகாண்டோம் கடல்கடந்தோம் உம்ப ரோடும்
உறவானோம் அருள்நூல்கள் உரைத்தோம் என்று
பலவாண்டாய்ப் பழங்கதைகள் பேசிப்பேசிப்
பகைவர்வரப் பயந்தோடிப் பதுங்கி வாழ்ந்தோம்
புலமாண்ட அறிவியல்நூற் புதுமை கண்டும்
பொய்யுலகம் அழியுமெனப் புகலு கின்றோம்
நலமாண்ட உரிமைப்போர் நயப்பால் இன்று
நம்நாட்டை நாமாள நாட்டங் கொண்டோம்.

3 பொருளோம்பித் தம்நலத்தைப் போற்றி வாழ்ந்து
பொன்றுகின்ற மக்களினம் பொலிந்த நாடு
மருளோம்பும் அடிமைவிளை வயலாய் இந்த
வையமெலாம் நகைத்திகழ வறுமை மிஞ்சி
இருளோம்பும் பொய்க்கதைகள் இயம்பி ஏத்தி
எண்ணிறந்த சிறுதெய்வம் எங்கும் நாட்டித்
தெருளோம்பும் ஆய்வுணர்ச்சி சிறிதும் இன்றிச்
சீரழிந்து பாழ்பட்டுச் சிதைந்து போகும்.

**வித்துவான் க. வேந்தனார்**

4 மலைவளமும் நிலவளமும் வாய்ந்து நல்ல
மழைபொழியும் பெருநாட்டில் வாழ்வா ரேனும்
கலைவளமும் உளத்திறனும் கருத்தின் மாண்பும்
கடலலைபோல் எழுந்துரிமை காக்கும் வீறும்
தலைமுறையே வழிவழியாய்த் தாங்கி வாழும்
தன்மானத் துடிப்புமின்றிச் சாய்ந்தா ராகில்
நிலைதவறி அரசுரிமை நீங்கி என்றும்
நீளடிமைப் பட்டுலைந்து நெஞ்சம் நோவார்.

5 காடுவெட்டி வயலாக்கிக் கவினுஞ் செந்நெல்
களங்குவித்து வளம்பெருக்குங் கருத்தி னோடு
பாடுபட்டு நம்நாட்டைப் பாதுகாப்போம்
பழம்பெருமைக் கடிபணியும் பழக்கத் தாலே
ஏடுதட்டி எடுத்ததற்கும் விதிபா ராமல்
இளந்தமிழிற் பலகலைநூல் இயற்றி எங்கள்
கூடுவிட்டே ஆவிநிலை குலைந்திட் டாலுங்
கொள்கைநிலை குலையாமற் கூடி வாழ்வோம்.

# 8. எழுத்தாளன் உறங்குவானோ

1 வள்ளுவரின் குறளொளியால் வீறு வாய்ந்த
மறுமலர்ச்சித் தமிழரினம் வாழ்க்கைப் போரில்
தள்ளுகின்ற தீநெறிகள் தலைமை தாங்கித்
தனியாட்சி புரியுநிலை தாங்க மாட்டோம்
கொள்ளுகின்ற நன்னெறிகள் கூட வேண்டிக்
கூடாத கொடுவழக்கைக் கொல்ல வென்றே
விள்ளுகின்ற சிந்தனையின் வீரர் தோன்றி
விருந்தளித்த அறநூல்கள் விளங்கிக் கொண்டோம்.

2 பொய்கூறல் பிறர்மனையை நயத்த லோடு
புறங்கூறல் முதற்றீய நெறிக ளெல்லாம்
செய்யாமல் மக்களினஞ் சிறக்க வென்றே
திருக்குறளில் வள்ளுவனார் செப்பி அந்நாள்
உய்வான நன்னெறியை உதறித் தள்ளி
ஒழுக்கமின்றி உலைந்தோரை உருத்தல் கண்டோம்
செய்வாழும் புல்லினத்தைக் களைந்தா லன்றோ
செந்நெல்லின் பயிர்செழித்துத் தேட்டங் கொள்ளும்.

3 சிந்தித்துச் செயலாற்றும் வீரர் பொல்லாத்
தீச்செயல்கள் புரிவோரைத் தெளியச் சொல்வார்
வந்துற்ற போர்வாளை மார்பில் ஏற்று
மாய்ந்தாலும் அவர்க்கஞ்சி மறைக்க மாட்டார்
முந்துற்ற பெருவீரன் "சீசர்" முன்னாள்
முடிந்ததுவுந் தீநெறியில் முனைவுற் றோரை
வெந்துற்ற சிந்தையுடன் அறத்தைக் காட்டி
வெறுத்துரைத்து நீதிபுரி விறலா லன்றோ.

4 பாதகங்கள் புரிவோரைப் பார்த்து நெஞ்சம்
படபடக்க அஞ்சியவர் பாரா நேரம்
மோதமருக் கெழுகின்ற சிங்கம் போல
முழங்கிவசை மொழிகின்றோர் முனைப்பொன் றின்றி
ஆதலுக்கும் அழிதலுக்கும் அறமா மென்றே
அணிமொழிகள் வரிசையுற அடுக்கும் பாட்டை
ஓதலினால் தீயவர்கள் கூட்ட மெல்லாம்
ஒழிந்திடுமேல் ஆட்சிமுறை உலகுக் கேனோ.

5 கற்பழிந்தாள் இவளென்றும் பிறனில் லாளைக்
காதலித்தான் இவனென்றும் காவி யத்தில்
முழுதுணர்ந்த பெரும்புலவர் மொழிந்து காட்டும்
மூதுரைகள் கற்றுணரார் முதன்மை தேய்ந்த
வெற்றுரையால் எழுத்தாளன் உண்மை கண்டு
விளம்புகின்ற ஆய்வுரையை வேண்டா மென்றால்
உற்றெழுந்த சிந்தனையின் ஒளியால் இந்த
உலகோம்பும் எழுத்தாளன் உறங்கு வானோ.

# 9. புதுமைக் காதல்

1 புதுநலக் கன்னியைக் கூடி - அவள்
புணர்நலச் சுவையினில் ஊறி
மதுமிகப் பருகிடும் அளிபோல் - உளம்
மகிழ்வுறல் ஒன்றுமோ காதல்.

2 அன்பினில் ஆரின்று காதல் - உயர்
அறத்தினில் ஆரின்று காதல்
துன்பினைப் பெருக்கிடும் போரால் - உயிர்
துடிக்கின்ற எமக்கேது காதல்.

3 கொலைவினை வெறிகொண்ட மக்கள் - தம்மைக்
கொன்றிடும் போதென்ன காதல்
கலைகளின் ஆய்வெலாம் உயிர்கொல் - புதுக்
கருவிகள் புனைவதோ காதல்.

4 தன்னலம் போற்றிடுங் கொடியோர் - பொருள்
தமக்கெனப் பெருக்கிடுங் காதல்
இன்னலில் ஏழைகள் வாட - உயிர்
எரித்திடும் போதென்ன காதல்.

5 காதலுக் கெனவொரு எல்லை - ஆய்வுக்
கலையினுங் கண்டவர் இல்லை
ஆதலுக் காம்பணி யெல்லாம் - உயிர்
அனைத்திற்கும் ஆற்றலே காதல்.

6 இந்திரச் செல்வத்தின் இன்பம் - இங்கு
எய்தியே ஒருசிலர் வாழக்
கந்தைக்குங் கஞ்சிக்கும் மக்கள் - நின்று
கதறிடும் போதென்ன காதல்.

**வித்துவான் க. வேந்தனார்**

7 கடவுளின் அருள்நிலை காதல் - பெருங்
கலைகளின் உயிர்நிலை காதல்
இடமகல் வானத்தைப் போல - ஓர்
எல்லையற் றெழுவதே காதல்.

8 சாதலை இகழுமக் காதல் - அடிமைத்
தளையினைத் தறிக்குமக் காதல்
ஈதலும் இரத்தலும் இல்லா - ஓர்
எழிலுல காக்குமக் காதல்.

9 மணிமுடி வேந்தெனும் வாழ்வைப் - பொய்
வாழ்வென வெறுக்குமக் காதல்
பணிபுரிந் துலகினைக் காத்தல் - அறப்
பயனெனப் பகருமக் காதல்.

10 காந்தியின் திருவுளக் கதிரால் - உளக்
கட்டவிழ்ந் தலர்ந்ததக் காதல்
ஏந்திய சுதந்திரத் தேனை - உயிர்
இனித்திட ஊட்டுமக் காதல்.

# 10. காதற் கனல்

**(தலைவி கூற்று)**

1 காதலூறிக் கனிந்துயர் வாய்மையிற் கலந்து
தன்னியல் தானென வோங்கிடின்
சாதலேனுந் தளர்ந்துயிர் பேணுமோ தன்னின்
வேறுள தென்றது காணுமோ
ஆதலோடிங் கழித்தலுங் காதலென் றன்பி
னைந்திணை யன்றுரை செய்தனர்
ஈதலாதுயர் பேரின்ப வீட்டினை யெய்துஞ்
செந்நெறி எந்நெறி சொல்லுமின்.

**வேறு**

2 தேன ழைந்துயர் தென்றலும் வீசுதே
தெய்வத் தண்கதிர் சேண்முழு தாளுதே
ஊன ழைந்துயிர் ஊற்றின்பங் காணுதே
உண்மைக் காத லுரைத்ததிவ் வாய்மையே.

3 உள்ள வுள்ளவென் உள்ள முருக்குதே
உணர்ச்சி வீறி யுலகை மறக்குதே
மெள்ள வந்தெனை நாணமும் வெளவுதே
வீட்டி லன்னையின் வெவ்வுரை கொல்லுதே.

4 காத லுண்மையைக் கண்டிலர் பெற்றவர்
கட்டுப் பாடெனுங் காரிருள் கண்டனர்
சாத லன்றித் தனித்துணை காண்கிலேன்
தண்ட மிழ்த்திருச் சான்றவர் போற்றுமின்.

5 உணர்ச்சி யூறி யுருத்தெழு காதலின்
ஒளியை யிவ்வுல கேற்குதல் சாலுமோ
புணர்ச்சி தன்னுடன் பொய்யுடற் கென்தொடர்
புகழு டற்கொடு பொன்னுல கெய்துவேன்.

**வித்துவான் க. வேந்தனார்**

# 11. நன்றியுள்ளம்

ஒருநாள் அம்மா திருநெல் வேலி
மருமகள் வீட்டில் மணப்பேச் சென்று
வெள்ளித் தட்டத்தில் வெற்றிலை யோடு
தெள்ளிய தீஞ்சுவைச் சிற்றுணாக் கொண்டு
வெள்ளென எட்டு மணிக்குப் போனார்
பள்ளிக் கென்று பவளமும் சென்றாள்
வித்தியா லயத்தில் விபுலா னந்தரின்
முத்தமிழ்ச் சிலம்புச் சொற்பொழி வென்றே
அத்தானும் அக்காவும் அகன்றார், அண்ணா
பத்தரைக் கோடும் படத்திற் கேகினார்
ஐயா கட்டிலில் அயர்ந்து விட்டார்
தையற் பொறியில்யான் சட்டை தைத்தேன்
தம்பி தண்ணீர் அள்ளி விளையாடச்
செம்பு கொண்டு கிணற்றுக் கோடினான்
நில்லடா தம்பி நீதண்ணீர் அள்ளாதே
சொல்லவா ஐயாவுக் கென்றுயான் தொடர்ந்தேன்
தம்பி முந்திப்போய்த் துலாவைத் தாழ்த்தி
வெம்பி யான்புலம்ப வீழ்ந்தான் கிணற்றுள்
ஐயோ தம்பி கிணற்றுள் வீழ்ந்தான்
ஐயா வோவென அலறிக் கூவினேன்
வந்திலர் ஐயா வடக்கு வேலியால்
பந்தடிக் கோலுடன் பாய்ந்தான் ஒருவன்
பாய்ந்தவன் எட்டிக் கிணற்றைப் பார்த்தான்
பாய்ந்தனன் கிணற்றுள் பார்த்தேன் அதற்குள்
தோய்ந்தஎன் தம்பியைத் தோளோ டணைத்துப்
போந்தனன் மேலே பொன்மலை போல்வான்
ஈரம் போக்கியும் தலைகீழ் ஆக்கியும்
ஆரம்ப உதவி அனைத்தும் செய்தான்

தண்ணீர் குடித்துத் தளர்ந்து போனான்
வெந்நீர் கொடுக்க வேண்டும் என்றான்
வெந்நீர் எடுக்க வீட்டிற்குச் சென்றேன்
அண்ணா வோடு ஐயாவும் வந்தார்
சொன்னேன் நடந்ததைத் துடித்தார் ஐயா
அண்ணா ஓடி அந்த வீரனைத்
தழுவிப் போற்றித் தண்ணளி செய்தார்
அழுத வண்ணம் அம்மாவும் அடைந்தார்
என்தன் புதல்வனின் இன்னுயிர் காக்க
வந்த நல்லூர்க் கந்தன் நீயென்றே
அந்த இளைஞனை அம்மா புகழ்ந்தார்
ஐயா நிறைந்த அன்பி னோடு
கையால் அவனின் முதுகைத் தடவி
செய்யாமல் செய்தவுன் உதவிக் கென்ன
கைம்மாறு செய்வோம் என்று கழறினார்
உங்களின் அன்பே உயிரினும் பெரிதென
அங்கை கூப்பியவன் ஐயாவை வணங்கினான்
என்தன் உள்ளத்தில் என்று மில்லா
இன்ப உணர்ச்சி எழுந்தலை மோத
நின்றேன் அவனும் நிமிர்ந்தென்னைப் பார்த்தான்
அன்றே யானும் அவனை விழைந்தேன்
பணமும் பட்டமும் அல்ல அவனின்
குணமும் நன்றியும் என்னையாட் கொண்டன
அம்மாவும் ஐயாவும் அடுத்த மாதம்
எம். ஏ. இளங்கோவுக் கென்னைக் கொடுக்கப்
பொருத்தம் பார்த்து வீடும் புதுக்கினார்
வருத்தமும் அச்சமும் என்னுயிர் வாட்டின
சென்ற கிழமையென் சிந்தையில் உள்ளவை
ஒன்றும் ஒளியாமல் அம்மாவுக் குரைத்தேன்
அம்மா ஆயிரம் சிங்கமாய் ஆர்த்தார்
எம்.ஏ வேண்டாம் ஏழையா வேண்டும்

என்றெனைத் திட்டி நெருப்பாய் எரிந்தார்
தன்தலை வெடிக்கத் தடியால் மோதினார்
ஐயாவும் வந்திதைக் கேட்டதும் அதட்டிக்
கையால் ஓங்கியென் கன்னத்தில் அறைந்தார்
குணமும் கொள்கையும் உதவியும் கொள்ளார்
பணமும் பட்டமும் பெரிதெனப் பார்க்கிறார்
ஓடியல் கூழை உப்பின்றிக் காய்ச்சிக்
குடிக்கும் வறுமையில் துடிக்க நேரினும்
என்னுயிர்த் தம்பியின் இன்னுயிர் ஈந்த
மன்னெழில் வள்ளலை யன்றி இப்பிறப்பில்
இளங்கோ வல்ல இந்திரன் ஆயினும்
இணங்கேன் மணக்க என்பதை என்தன்
அன்னையும் தந்தையும் அறியும் வண்ணம்
இன்னொரு முறைநீ இயம்புவாய் தோழி
மறுத்துரைத் தாரேல் வாழேன் என்பதை
உறுத்தி வருதலும் உனக்குக் கடனே.

# 12. கனவு தந்த காதல்

1 ஆவிக்குள் ளேநிழ லாடும் - என்
அன்புக் குரியநல் அமிழ்தம்
தூவியந் தோகையின் சாயல் - என்
துயிலைக் கெடுத்திட லாமோ.

2 கல்விக் கழகமென் றுணராள் - என்
கலையின் நிலையினைத் தெளியாள்
அல்லிக் கமலங் குவிந்தோ - என்
அகத்தை மலர்த்திட வந்தாள்.

3 நண்பர்கள் பக்க லுறங்க - என்
நாணங் குலைத்திட லாமோ
பெண்களின் தெய்வமென் றாலும் - என்
புலனை மயக்கிட லாமோ.

4 நிலவு பொழிந்திடும் முறுவல் - என்
நெஞ்சை யளந்திடும் விழிகள்
உலவு தென்றலைப் போலே - உயிர்
ஊற்றங் கனிந்திடும் மென்மை.

5 அழகுக் குயிர்தருஞ் செல்வி - என்
அன்பை விழைவது போலே
மழலை மொழிகளா லென்னை - நீர்
வாழ்கபல் லூழிக ளென்றாள்.

6 என்னை மறந்திட்ட நிலையில் - காதல்
இன்ப வெறிமிகக் கொண்டு
மின்னை யணைத்திட வென்றே - கைகள்
வீசி விழித்திட லானேன்.

**வித்துவான் க. வேந்தனார்**

7 தழுவிய கைகளின் நடுவே - என்
தலையணை தங்கிடக் கண்டேன்
பொழுது விடிந்ததும் நண்பர் - யான்
புகன்றவை கூறி நகைத்தார்.

8 காதற் கொருகாவ லுண்டோ - இன்பக்
கனவின் துணையுள போது
போதிற் பொலிந்திடும் திருவும் - என்
பொறிகள் நுகர்ந்திட வந்தாள்.

9 உள்ளங் கவர்ந்தெழு மன்பு - நல்
உயிரிற் கலந்துணர் வாகிக்
கள்ளங் கொளுங்காத லின்பம் - ஓர்
கனவின் பயனெனக் கண்டேன்.

10 கண்கள் விழித்திலாக் காலம் - என்
கருத்து விழித்திடுங் காலம்
பெண்கள் பெருந்தவச் செல்வி - கனாப்
பேதை யுடன்வரு வாளோ.

# 13. இன்று பொங்கல்

1 செங்கதிரோன் ஒளிபரப்பித் திரைகடல்மேல் எழுந்தான்
சிரித்தனசெந் தாமரைகள் செந்தமிழ்நா டெங்கும்
பொங்கலின்று பொங்கலெனப் புள்ளினங்கள் ஆர்த்த
புலவர்களும் உளமலர்ந்து புதுக்கவிகள் புனைந்தார்.

2 உழுதுண்டும் பிறர்க்கீந்தும் உலகோம்பும் ஒளியால்
உயிர்விடினும் உண்மைநிலை உலையாத வீரர்
தொழுதுண்டு வாழாத தோள்வலியை வேண்டித்
தூயசுடர்க் கதிரோனைத் தொழுகின்ற பொங்கல்.

3 சேல்போல விழியுருட்டுந் தெரிவையர்கள் சேர்ந்து
திங்கள்முகம் வியர்வரும்பச் செந்நெல்லைக் குற்றிப்
பால்போலத் தீட்டியநல் அரிசியினைப் பார்த்துப்
படர்முல்லை அரும்பவிழ்ந்து பகல்மலரும் பொங்கல்.

4 தேமாவின் தீங்கனியும் செங்கரும்புந் தேனும்
செழும்வாழைக் கொழும்பழமும் சிறந்தவைகள் தேடிப்
பூமாலை தூக்கியொளிர் பொன்விளக்கும் ஏற்றிப்
புதுப்பானைக் கிஞ்சியிலை மஞ்சள்இலை புனைந்து

5 பகலவனை வரவேற்றுப் பல்லாண்டு பாடிப்
பசுப்பாலில் உலைவைத்துப் பாற்பொங்கல் பொங்கி
மிகவுவகை யுடன்வந்த விருந்தினரை ஊட்டும்
மெல்லியலார் கைவளைகள் விரைந்தொலிக்கும் பொங்கல்.

6 கரும்பூற்றும் கருக்கண்டும் கனிப்பிழிவுங் கலந்து
காய்ச்சியிளம் பதத்தெடுத்த கட்டியினை வந்த
விருந்தினர்கள் விழைந்தருந்த விளைகின்ற இன்பம்
வேளாளர் உயிர்தளிர்க்க விருந்தாகும் பொங்கல்.

**வித்துவான் க. வேந்தனார்**

7 விற்கொடியும் புலிக்கொடியும் மீன்கொடியும் தாங்கி
வீரமுடன் தமிழகத்தை மூவேந்தர் ஆண்ட
கொற்றமுர சொலிகேட்டுக் குதூகலிக்கும் தமிழர்
கொண்டாடுந் தைப்பொங்கற் கொண்டாட்டம் இதுவே.

8 ஆட்சியின்றி அடிமைகளாய் அல்லலுறும் போதும்
அன்பீகைப் பண்பாட்டை ஆவியெனக் காத்து
மாட்சிபெறும் தமிழரினம் வழிவழியாய்ப் போற்றும்
வாய்மைதனை நிலைநாட்டி மலர்கின்ற பொங்கல்.

9 கொஞ்சுமிளங் குதலைமொழிக் குழந்தைகளுங் கூடிக்
கூத்தாடி வெடிகொளுத்திக் கொண்டாடும் பொங்கல்
நெஞ்சினிலே கற்பினொளி நிழலாட நின்று
நேரிழையார் காதலரை நினைந்துதொழும் பொங்கல்.

10 மழைபொழிந்து வயல்விளைந்து வறுமையின்றி மக்கள்
மகிழ்ச்சியுடன் வாழவழி வழங்கியருள் என்றே
விழைவுடனே நெஞ்சுருகி வெயிலவனை இரந்து
வேண்டுகின்ற அன்பருளம் மிகமலரும் பொங்கல்.

11 அருள்பூத்து அறங்கனிய ஆண்டகைமை வீறி
ஆளுகின்றோர் தமிழகத்தில் தமிழர்களே ஆகப்
பொருள்பூத்துப் புகழ்புத்துப் பொன்பூத்து நல்ல
புலம்பூத்துப் பொலிகவெனப் பொங்குகவே பொங்கல்.

# 14. தீபாவளித் திருநாள்

1 அறத்தெய்வம் முடிசூட்டி ஆட்சிசெய்யுந் திருநாள்
அன்புநெறி உலகெங்கும் அலைமோதுந் திருநாள்
திறத்தோங்கும் செயல்வீரர் சிந்தைமகிழ் திருநாள்
திருவளரும் உயர்தீபா வளியெங்கள் திருநாள்.

2 புதல்வர்களும் புதல்வியரும் பொன்னாடை அணிந்து
பொலிகின்ற புத்தெழிலைக் கண்டுகண்டு பெற்றோர்
இதயமதில் இன்பவெறி எழுகின்ற திருநாள்
இரப்போரும் ஈவோரும் இல்லாத திருநாள்.

3 "மாப்பிளை"யைப் பெண்வீட்டார் வரவேற்குந் திருநாள்
மணமக்கள் குதூகலமாய் வாழ்கின்ற திருநாள்
பாப்புனைந்து திருமாலைப் பணிகின்ற திருநாள்
பழங்கோபம் விட்டுறவு பயில்கின்ற திருநாள்.

4 கொடுகிவிழும் கூன்கிழவி கோடிகட்டி நல்ல
குமர்ப்பிள்ளை போலழகு கொள்கின்ற திருநாள்
படுகிழவன் பட்டுடுத்துப் பழம்வீரம் பேசிப்
பதினாறு வயதாளன் பண்புகொளுந் திருநாள்.

5 புதுப்புனலில் மூழ்கிநல்ல புத்தாடை புனைந்து
பொன்தட்டில் காணிக்கைப் பொருளேந்திச் சென்று
மதுத்துளிக்கும் மலர்தூவி இறைவனடி வாழ்த்தி
மங்கைநல்லார் மக்களுய்ய வரம்வேண்டும் திருநாள்.

6 வண்ணவண்ணச் சட்டையிட்டு மலர்சூட்டிக் கொண்டு
மழலைமொழிக் குழந்தையினைத் தாய்மகிழ்ந்து கொடுக்கக்
கண்ணிலொற்றித் தந்தையுளங் களிக்கின்ற திருநாள்
கன்னியர்கள் காதலரைக் காண்கின்ற திருநாள்.

7 காதலரும் பாவலரும் கடிதங்கள் பாக்கள்
கட்டுரைகள் எழுதியுளங் களிக்கின்ற திருநாள்
போதலரும் பருவந்தேர் வண்டுகள்போற் புலவோர்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணுந் திருநாள்.

8 கொல்லுகின்ற கொடியோனும் கோடியுடுத் தாடும்
குழந்தைகளைக் கண்டுள்ளம் குழைகின்ற திருநாள்
நல்லகுலப் பெண்களுந்தம் நாயகரை வணங்கி
நண்ணுபுகழ் விருந்தினரை நன்றாற்றுந் திருநாள்.

9 எல்லையிலா ஆற்றலெலாம் எய்தியிந்த உலகில்
இமயம்போல் இறுமாந்து வாழ்கின்ற வீரர்
அல்லல்செய் துலகுயிரை அலைத்திடுவா ரானால்
அறங்கொல்லும் அவரையென அறிவுறுத்துந் திருநாள்.

10 இன்பமே எந்நாளும் எமக்கென்று பாடி
எல்லோரும் ஓரினமாய் இந்நாட்டிற் கூடித்
துன்பமே பகையென்று சூழ்ந்தெம்மை வாட்டும்
தொல்லசுரர் குலம்வீழத் தொண்டாற்றி வாழ்வோம்.

# காவியம்

# கற்பனைக் காதல்

## 1. நிலைக்களம்

### ஆய்வும் நுகர்வும்

1 ஆவியில் அமுதாய் ஊறி
ஆனந்தம் அளிக்கும் நல்ல
காவிய வகுப்பை யானும்
கருத்துடன் நடாத்தி வந்தேன்
பாவையர் இளைஞர் கற்ற
பண்டிதர் பாவல் லோர்கள்
யாவரும் வகுப்பில் சேர்ந்தார்
ஆர்வத்தால் எழுச்சி கொண்டேன்.

2 முல்லையின் பந்தர் சூழ்ந்த
முன்றிலில் மணலைத் தூவிப்
பல்வகைத் தவிசும் இட்டுப்
படைத்திடும் பள்ளி தன்னில்
எல்லையில் உவகை யோடும்
இருந்தவர் இனிது கேட்க
நல்லிசைப் புலவர் நூலின்
நயமெலாம் நவில லுற்றேன்.

3 சேரனின் சிலம்பி னோடு
திருக்குறள் பத்துப் பாட்டும்
ஆரமு தென்னக் கம்பன்
ஆக்கிய கவிதை, ஈசன்
சீரருள் வெள்ளந் தோய்ந்த
சேக்கிழார் செய்யுள் எல்லாம்
ஓரிரு பருவந் தன்னில்
உரைத்திட உணர்ச்சி கொண்டார்.

4 சிந்தா மணியும் கலித்தொகையும்
தேம்பா வணியும் நற்றிணையும்
செந்தேன் மணிமே கலையினுடன்
சீறாப் புராணம் குறுந்தொகையும்
நந்தா இன்பம் நிழலாட
நாளும் பொழுதும் நயந்துரைத்தேன்
வந்தார் கவிதை வளங்கனிய
மகிழ்ந்து மகிழ்ந்து கேட்டார்கள்.

5 பழகு தமிழின் புதுப்புலவன்
பாரதி யாரின் கவிதைகளும்
தழுவு சுவைத்தீந் தமிழ்ப்புலவன்
தங்கத் தாத்தா கவிதைகளும்
மழலை மொழியின் கவிமணியார்
வாரி வழங்கும் கவிதைகளும்
அழகும் சுவையும் பெற்றவகை
ஆய்ந்தும் நுகர்ந்தும் அறிந்தார்கள்.

## 2. நிலைக்களம்

### கவிதைகள் புனைவோம்

6 இலக்கிய இன்பம் என்னும்
இன்சுவை அமுதம் உண்ட
நலத்தியல் அவையோர் எல்லாம்
நற்றமிழ்ப் புலமை வீறி
நிலத்தியல் நீரைப் போல
நிழலிடும் கவிதை உள்ளக்
கலப்பினால் அள்ளுப் பட்டுக்
கவிதைகள் புனைவோம் என்றார்.

7 எந்தெந்தப் பொருளில் நாங்கள்
இயற்றுவம் கவிதை என்றே
வந்தந்தக் கற்றோர் என்னை
வணக்கமாய் மகிழ்ந்து கேட்டார்
சிந்தித்தென் உளத்திற் பட்ட
சிறப்புறு பொருளை எல்லாம்
முந்துற்ற ஆர்வத் தோடும்
மொழிந்திட அவர்கள் ஏற்றார்.

8 இங்ஙனம் கவிதைக் கான
இயற்பொருள் இயம்பும் என்முன்
மங்கையர் போற்றும் நல்லாள்
வள்ளியென் றுரைக்கும் தூய
கொங்கலர் கூத்தற் செல்வி
கொடியிடை நுடங்க வந்து
பொங்கிய ஆர்வம் விஞ்சப்
பொன்மகள் போல நின்றாள்.

9 நின்றவள் என்னை நோக்கி
நெஞ்சினை அள்ளி ஆவி
ஒன்றிய உணர்வில் என்தன்
உள்ளொளி நிழலை வீசக்
குன்றினின் தலைமேல் நின்று
குதித்திடும் அருவி போல
இன்றுயர் கவிதை பாட
எப்பொருள் ஏற்ற தென்றாள்.

# நரன்

## புனைகுவம் காதற்பாக்கள்

10 உள்ளொளி நிழலிட் டாட
உணர்ச்சியின் ஊற்றம் வீற
அள்ளிய ஆர்வத் தால்நீ
ஆயிரம் ஊழி நிற்குந்
தெள்ளிய கவிதை பாடச்
சிறந்தது காதல் ஆகும்
வள்ளியுன் மனத்தில் காதல்
மலர்ந்திடக் கவிதை வாழும்.

11 கற்பனைக் காதல் உன்தன்
கவிதையின் பொருளாய்க் கொண்டால்
அற்புதக் கவிதை நீயும்
ஆக்கலாம் ஐயம் இல்லை
பொற்பலர் கலைத்தேன் சொட்டும்
புதுமலர் அனையாய் யானும்
மற்றிதற் காகும் நல்ல
வழியொன்று வழுத்து கின்றேன்.

12 காதலன் நானும் உற்ற
காதலி நீயும் என்றே
போதலர் திருவைப் போல்வாய்
புனைகுவம் காதற் பாக்கள்
ஏதமொன் றிதனில் இல்லை
இலக்கியப் படைப்பு மாகும்
ஏதுனக் கிதன்மேல் எண்ணம்
இன்தமிழ் மரபும் கண்டாய்.

# அவள்

## புலவர்தமக்கோர் விருந்து

13 இன்பத் தமிழின் இலக்கியங்கள்
இனிக்க இனிக்க எனக்கூட்டும்
அன்புக் குரவன் நீருங்கள்
ஆணை வழியே நின்றடியாள்
என்றும் அழியாப் பேரின்பம்
எய்தும் தெய்வக் காதலியாய்க்
கன்றுக் குருகும் புனிற்றாப்போற்
காதற் கவிதை புனைகின்றேன்.

14 இறைவன் தன்னைக் காதலனாய்
எண்ணிப் பாடும் அடியார்போல்
பொறையும் புலமைப் பெருவாழ்வும்
பொலியும் குரவ யானும்மை
நிறையும் காதல் தலைவனென
நினைந்து நெஞ்சம் நெக்குருகிப்
புனையுங் காதற் கவிதைகளும்
புலவர் தமக்கோர் விருந்தாகும்.

15 அன்புக் குரவ! தமிழ்மரபாம்
ஐந்திணை அன்பின் வழிநிற்கும்
இன்பத் தலைவி என்றென்னை
எண்ணி எண்ணி இறுமாந்து
பொன்புக் கலரும் எழிலேபோல்
பொருந்தும் பிரியாக் காதலினால்
என்புக் கினிக்கும் கவிதைகளை
இன்று புனைந்தே ஈந்தருள்வீர்.

# நான்

## பெண்ணின் தன்மை

16 காதலின் அணைப்பே இன்பம்
கனிந்திடும் வாழ்வுத் தென்றல்
ஓதரும் உணர்ச்சி ஊற்றால்
உளங்கலந் துயிரொன் றானோர்
சாதலும் பிறப்பும் இல்லாத்
தனிநிலை அடையச் செல்லும்
பாதையின் தொடக்கங் காணப்
பயில்வதுங் காதல் கண்டாய்.

17 உலகுயிர் அனைத்துங் காதல்
உணர்ச்சியால் ஒளிபெற் றோங்கி
மலரெழில் பூத்த வாழ்வே
வையத்தின் செல்வ மாகும்
புலவரின் கவியுந் தெய்வப்
புலனெறி மரபும் ஆய்வுக்
கலைகளின் படைப்பும் எல்லாங்
காதலின் பயனே கண்டாய்.

18 உன்னெழில் உருவை நோக்கி
ஊற்றெழுங் காத லாலே
கன்னலைச் சுவைத்தல் போலக்
கம்பனின் கவிதை இன்பம்
சொன்னதை எண்ணி எண்ணிச்
சுரந்திடும் அமுதை வாரிப்
பன்னரும் ஊழி காலம்
பருகுவேன் பாடி வாழ்வேன்.

19 தேனை வெல்லுந் தீஞ்சுவைசேர்
சிலப்பதி காரங் கற்றிடும்நாள்
கானல் வரியில் கனிந்தொழுகும்
காதல் நலத்தின் சுவையுன்தன்
ஊனை உருக்க நீயெந்தன்
உளத்தை உருக்கி ஒன்றானாய்
போன கிழமை நல்லூரில்
புனித வதியோ டுனைக்கண்டேன்.

20 கன்னிமை நிறைந்த இன்பக்
கரும்புனைக் கவிதை என்னும்
இன்னமு தத்தில் இட்டே
இலக்கியச் சாறும் சேர்த்து
மன்னிய காதல் என்னும்
வண்தமிழ்க் கலத்தில் ஊற்றி
என்னுயிர்த் தீயில் காய்ச்சி
இனித்திடும் பாகாய் உண்பேன்.

21 உன்னையே நினைந்து பாடி
உள்ளம்நான் உருகும் வண்ணம்
என்னையே ஏவு கின்ற
இன்தமிழ் ஊழி வாழ்க!
பொன்னையே உருக்கிச் செய்த
புதியபூம் பாவை போல்வாய்!
என்னையேன் கவர்ந்தாய் நீயும்
இதுவன்றோ பெண்ணின் தன்மை.

# அவள்

## சுப்பிரமணியம் பூங்கா

22 செந்தமிழ்ப் புலமை வெள்ளம்
தேன்சுவைக் காத லோடு
கொந்தளித் தெழுந்து மோதிக்
கொழுஞ்சுவைக் கனியின் சாறாய்ச்
சிந்தனை செழிப்புக் கொள்ளத்
தீட்டிய காதற் பாக்கள்
இந்திரன் அனையாய் என்தன்
இதயத்தில் இனிமை ஏற்றும்.

23 கற்பனைக் காதற் பூங்கா
களிப்புடன் விரைந்து செல்வோம்
அற்புத நிலவில் தென்றல்
அமுதமாய் வீசும் காலம்
நற்சுனை மருங்கில் கூடி
நாம்பெறும் இன்பம் போல
உற்றிடும் ஒருபே ரின்பம்
உலகினில் வேறும் உண்டோ?

24 காவியம் நானே யாகக்
கவிஞனும் நீயே யாகி
மேவிய நுகர்ச்சி ஒன்றே
வீட்டின்பம் ஆவ தல்லால்
ஆவியில் இனியாய் வேறோர்
ஆக்கமும் அடைதற் கில்லை
காவலும் கட்டும் எல்லாம்
கற்பனைக் காதற் குண்டோ?

25 நல்லூரிற் புனிதத் தோடு
நான்நின்ற போது நீங்கள்
கல்லூரித் தோழ னோடு
கலித்தொகைக் காட்சி ஒன்றை
எல்லோரும் சுவைக்கும் வண்ணம்
எழுதுவேன் நாளைக் கென்று
சொல்லிடும் உரையைக் கேட்டுத்
துளித்ததென் உள்ளம் தேனாய்.

26 கன்று கலக்கிய சின்னீரைக்
களிறு தான்முன் உண்ணாமல்
ஒன்றிடும் அன்பால் மடப்பிடியை
ஊட்டியே உண்ணும் எனநீங்கள்
அன்றோர் கலித்தொகைச் செய்யுளினால்
அன்பின் ஐந்திணை நலங்காட்டி
என்றன் உளத்தினை ஈர்த்ததெலாம்
எண்ணி யான்மிக இறுமாந்தேன்.

27 சொல்லெழில் யாழ்ப்பா ணத்துச்
சுப்பிர மணியங் காவில்
நல்லிசைப் புலவ நீரும்
நாலரை மணிக்கு வந்தால்
எல்லையில் லாத காதல்
இன்தமிழ் இயற்கை இன்பம்
புல்லியும் புலந்தும் போற்றிப்
புதுநலம் பூத்து வாழ்வோம்.

28 மச்சான் நீங்கள் எனைக்காண
வந்தால் மறந்து போகாமல்
கச்சான் கடலை ஒருகொத்தும்
கலைக்கதிர் பொங்கல் மலர்ஒன்றும்

புத்தம் புதிதாய்த்தங் கப்புலவன்
புனையும் இலங்கை வளமொன்றும்
மெச்சும் "பீடா" வெற்றிலையும்
விருந்துங் கொண்டு வந்திடுவீர்.

29 பூங்காவில் நீங்கள் வந்து
புதுநெல்லி மரத்தின் பக்கம்
ஏங்காமல் இருங்கள் யானும்
ஏணியில் சறுக்கி விட்டு
நீங்காமல் நிற்குந் தம்பி
நிலாவண்ணன் தன்னைக் "கல்கி"
வாங்கிவா என்று போக்கி
வந்துங்கள் விருந்தா கின்றேன்.

30 நாலரை மணிக்கும் பின்தான்
நல்லூருக் கப்பா செல்வார்
வேலவன் பூசை கண்டு
வீட்டிற்கு வந்து "காரில்"
மாலதி அக்கா தன்னை
மருதனா மடத்தில் விட்டு
மாலையேழ் மணிக்குப் பூங்கா
வந்தெனைக் கூட்டிச் செல்வார்.

31 அப்பா வின்"கார்" வருமோசை
அறிவேன் யானும் ஆதலினால்
எப்போ தும்போல் நடுங்காமல்
இதுதான் தமிழின் சுவையென்று
முப்பால் நூலில் வள்ளுவனார்
மொழிந்த இன்பப் பால்மரபைத்
தப்பா தடையும் தலைமக்கள்
நாமென் றுள்ளம் தழைத்திடுவோம்!

# நான்

## மூவாத் தமிழின் சாயல்

32 காதலைக் கவிதை ஆக்கிக்
கருத்தினைக் கவர்ந்து வாயால்
ஓதரும் வெறியை ஊட்டி
உன்னையே என்னுள் வைத்த
போதுறை திருவே உன்தன்
புலமையை உணர்ந்து விட்டேன்
ஏதெனக் கிதன்மேற் செல்வம்
என்றைக்கும் இன்பந் தானே.

33 சிந்தா மணியின் இன்பம்
சேரன் சிலம்பின் இன்பம்
வந்தார் என்தன் உளத்தை
வாரி அள்ளும் வண்ணம்
கொந்தார் கூந்தற் குயிலே
கூடுங் கவிதைக் காதல்
தந்தாய் இதன்மேல் இன்பம்
தண்ணார் தமிழில் உண்டோ?

34 கடிதக் கவிதை தனில்நீ
காட்டும் காதல் முல்லைக்
கொடியில் குலுங்கும் மலர்போல்
குழந்தை தவழும் எழில்போல்
முடிவில் அன்பைச் சுரந்து
மூவாத் தமிழின் சாயல்
வடியும் சுவையாய் மலர்ந்தென்
மனத்தை வாரிக் கொள்ளும்.

35 காதலி! உன்னை நான்முன்
கண்டிடுங் கல்விச் சாலை
போதரும் வழியில் உன்தன்
பொன்னடி பதிந்த சாயல்
ஆதர வாக நீயும்
அமர்ந்திடும் "காரின்" மெத்தை
ஓதிவை அனைத்தும் உன்தன்
உருவமாய் எனக்குத் தோன்றும்.

36 காப்புடன் "கல்கி" நல்ல
கலைக்கதிர் கச்சான் கண்டால்
பூப்புரை முகத்தாய் உன்தன்
பொன்னுரு முழுதுங் காண்பேன்
யாப்புடன் அமைந்த பாவில்
அணியியல் நூலில் கம்பன்
காப்பியக் கடலில் உன்தன்
கற்பனைத் திறத்தைக் காண்பேன்.

37 வீரகாளி அம்மன் கோவில்
வீதியில் வெள்ளிக் கிழமை
காரைக்குடி அருணா சலத்தின்
கச்சேரி நடக்கும் அப்பா
ஊரிலே இல்லை நல்ல
உவகைதான் நமக்கு நானும்
"காரிலே" அக்கா வோடு
வருகின்றேன் கண்டு கொள்வோம்.

38 என்றுநீ எழுதி என்னை
ஏமாற்றி விட்டாய் நானும்
அன்றந்தக் கச்சே ரிக்கென்
அன்பேநீ வருவாய் என்று

சென்றுன்னைத் தேடித் தேடி
தெருவெல்லாம் திரிந்தேன் ஐயோ
ஒன்றும்நீ அதனைப் பற்றி
உரைத்திலை ஊமை யானாய்.

39 கல்வியும் கவிதையும் பண்பும்
கலந்திடும் கலைமாச் செல்வி
சொல்லிய வண்ணம் நீயும்
சுப்பிர மணியங் காவில்
வல்லிநுண் மருங்கு நோவ
வந்தெனைக் களவிற் கூடி
நல்லிசைத் தமிழ்போல் இன்பம்
நல்கியென் ஆவி காப்பாய்.

40 வள்ளியென் மடிமேல் உன்னை
வாரியே தூக்கி வைத்துக்
கள்வெறிக் காத லோடு
கற்பனை கலந்து பாயும்
வெள்ளம் போற் பாரதியார்
விளம்பிடும் குயிலின் பாட்டை
அள்ளிசை யாழிற் பாடி
ஆயிரம் முத்தம் ஈவேன்.

# அவள்

## மாணவி வணங்குகின்றேன்

41 கற்பனைக் காதல் எங்கள்
கவிதையின் பொருளே என்று
நற்றமிழ்ப் புலவ நீங்கள்
நவின்றதை நானும் நம்பி
உற்றிடும் காத லாலே
உங்களை விழைதல் போலச்
சொற்றிடும் கவிதை பாடித்
துன்பத்தைத் தேடிக் கொண்டேன்.

42 கனிச்சுவைத் தமிழால் எங்கள்
கருத்தினை அள்ளி அள்ளி
இனித்திடும் காதற் பாக்கள்
இயற்றுவோம் ஏதம் இல்லை
தனிப்பெரும் முதலாம் ஈசன்
தாளினை பரவல் போல
நினைத்திடு நங்காய் என்ற
நீங்களே மறத்தல் நன்றோ!

43 கற்பனைக் காதல் என்னுங்
கருத்தினை மறந்து நீங்கள்
சொற்பனங் கண்டேன் என்றும்
சோலையில் என்னைக் கூடல்
அற்புதத் தமிழில் ஆய்ந்த
ஐந்திணை மரபே என்றும்
பற்பல பகர்ந்து நொந்து
பாடுதல் பண்போ சொல்லீர்!

44 கற்பனை தன்னை மெய்யாய்க்
கருதிநீர் காதல் கொண்டு
பொற்றொடி நீயே என்தன்
புகலெனப் புலம்பி நைந்து
நிற்பதை எண்ணி எண்ணி
நெஞ்சகங் கலங்கு கின்றேன்!
கற்றுணர் நீங்கள் தெய்வக்
கற்பறங் கடக்க லாமோ?

45 கற்பனைக் காதல் என்னுங்
கவிதையில் வெறியை ஊட்டிக்
கற்பனை கடந்த தெய்வக்
காட்சியாய் விளங்கி என்தன்
இற்பிறப் பொழுக்கம் வாய்மை
இவையெலாம் புரக்கும் தூய
கற்பெனும் பெண்மைப் பண்பைக்
கவர்ந்திட நினைந்து விட்டீர்!

46 தெள்ளிய புலவ நீரும்
சிந்தனை திரிந்து விட்டீர்
உள்ளெழில் நிலையே அன்றி
உடலெழில் அழிந்து போகும்
கள்ளமும் வெளியிற் பூச்சும்
கண்ணிமைப் பொழுதில் மாயும்
வள்ளியென் மனத்தில் நீங்கள்
வாழ்த்திடுங் குரவர் அன்றோ?

47 காரைக்குடி அருணா சலத்தின்
கச்சேரி நடக்குங் காலம்
ஆரைத்தேடி அலைந்தீர் ஐயோ!
அங்குயான் வரவே இல்லை

ஊரிற்கூடும் மக்கள் எல்லாம்
உங்கள்கா தலியென் றோதும்
பேரைத்தேடித் தருவ தற்கோ
பெரிதும் முயன்றுவரு கின்றீர்!

48 சிவத்திரு திகழும் வேலணையில்
திருமுறை விழாவின் இரண்டாம்நாள்
தவத்திரு குன்றக் குடியடிகள்
சாற்றிடுந் தமிழ்நான் மறைப்பொருளைச்
சுவைத்திடும் என்னைத் தொட்டழைத்துத்
தோழியர் சிரிக்க நீர்சிரித்தே
உவப்புறும் போதும் வெறுக்காமல்
உங்களைக் குரவ னெனக்கொண்டேன்.

49 கலையுணர் கரும்பே! உன்னைக்
காவிய வகுப்பிற் கண்டால்
அலையலை யாகச் சொல்வேன்
அருங்கவி நயங்கள் என்று
புலவநீ யாழ்ப்பா ணத்துப்
புதியநூல் நிலையந் தன்னில்
பலரெனை நகைத்துப் பார்க்கப்
பகர்ந்திடும் பண்புந் தேர்ந்தேன்.

50 பொன்னெழில் அமுதில் தோய்த்துப்
புனைந்திடும் பாவை போல்வாய்
உன்னெழில் உருவங் காட்டும்
ஓர்படம் உதவு வாயேல்
என்னுயிர் எனக்குத் தந்த
இசையுனக் காகும் என்று
முன்னம்நீர் மொழிந்த தெல்லாம்
முகமனென் றெண்ணி விட்டேன்.

51 காவிய வகுப்பில் நீங்கள்
கவிநயங் காட்டும் போது
மேவிய பலருங் காண
விழைவுடன் என்னை நோக்கிப்
பாவியல் பயிலும் வள்ளி
பகரிதன் நயத்தை என்றே
ஆவலாய்க் கேட்ப தெல்லாம்
ஆக்கமென் றெண்ணி விட்டேன்.

52 தொழுதகும் குரவ நீங்கள்
சுப்பிர மணியங் காவில்
எழுதிய வண்ணம் வந்தே
என்னையும் தேட வேண்டாம்
முழுவதுங் கற்ப னையாய்
மொழிந்ததென் றுணர்ந்து கொள்வீர்
மழவிடை ஈசன் சான்றாய்
மாணவி வணங்கு கின்றேன்

## நான்

### வள்ளிநின் மாண்பு வாழ்க

53 மங்கைநின் கவிதை பெற்றேன்
மலர்ந்ததென் உள்ளம் எல்லாம்
எங்ஙனும் நிறைந்த காதல்
எழுச்சியால் இருக்கின் றேன்யான்
பொங்கிய வெள்ளக் காடாய்ப்
பொழியுது மழைதான் என்றும்
அங்குங்கள் நலத்தை ஈசன்
ஆக்குவான் அறிய வேட்கை.

54 வானொலிப் பேச்சுக் காகக்
கட்டுரை வரைகின் றேன்யான்
தேனொலித் தமிழில் நல்ல
தீங்கவி தீட்டி உங்கள்
ஊனுயிர்க் குகந்த கொள்கை
உரைத்திட நேரம் இல்லை
மானொடு மாறுங் கண்ணாய்
வாய்மையே காதல் வாழ்வு.

55 அழகினை மேலே போர்த்தே
அழுக்கினை மூடி எங்கள்
மழவிடை ஈசன் இந்த
வையத்தைப் படைத்து வைத்தான்
மழையெனும் கூந்தல் நீல
மயில்வண்ணம் வெளியில் அன்றிப்
பழகதன் உடலில் உண்டோ
பாம்பெழில் பகரப் போமோ?

56 உள்ளென்றும் புறமே என்றும்
உரைத்திடும் வேறு பாடு
கள்ளுண்ட வண்டைப் போலக்
கலையுண்டார் காண்ப தில்லை
வெள்ளம்போல் உணர்ச்சி வந்தால்
வேற்றுமை மறைந்து போகும்
கள்ளமும் அச்சப் பேயும்
காலற்று வீழ்ந்து மாயும்.

57 உடம்பின்றி உயிருக் கென்றும்
உயர்வில்லை உணர்ச்சி இல்லை
குடங்கொண்டு நீரை வார்த்தால்
குளிர்ந்திடும் முல்லைப் பூங்கா

மடங்கலின் தோற்றங் கண்டால்
மான்கணம் மயங்கி வீழும்
தடங்கொண்ட நீரில் அன்றோ
தாமரை மலர்ந்து வாழும்.

58 காந்தியார் கண்ட வாழ்வே
கடவுளின் கொள்கை அல்ல
ஏந்திய வாளி னாலும்
இறைவனைக் கண்டோர் பல்லோர்
ஆய்ந்துணர்ந் தடங்கி நின்றால்
ஆலமும் அமுத மாகும்
ஏந்திழை இவற்றுக் கெல்லாம்
எல்லையார் உரைக்க வல்லார்?

59 வெளியினில் பூச்சைப் பூசி
மினுக்கிடும் செயலால் அன்றோ
பளபள என்று தோன்றிப்
பயன்தரும் கதிரோன் சாயல்
மழைமுகில் கறுத்தால் அன்றோ
வையகம் வாழ்வு கொள்ளும்
குழைகளில் பச்சை வண்ணம்
கொடுத்தவன் ஈசன் அன்றோ!

60 உள்ளத்தின் உயர்ச்சி எல்லாம்
உடல்பெறும் எழுச்சி காட்டும்
கள்ளத்தில் மறைவோர் வேடம்
கண்ணிமைப் பொழுதில் மாயும்
எள்ளுக்குள் எண்ணெய் போல
எங்குமாய்ப் பரந்து நிற்கும்
தெள்ளூற்ற உணர்ச்சி யன்றோ
தேடருஞ் செல்வ மாகும்.

61 இயற்கையோ டெந்த நாளும்
இருந்துநாம் வாழ லாமோ?
மயற்படும் பற்றை விட்டோர்
மரவுரி தரித்தல் ஏனோ?
கயற்புரை விழியாய் காந்தி
கதருடை அணிதல் கண்டாய்!
செயற்கையை வெறுத்தால் ஈசன்
திருக்கொன்றை சூட லாமோ?

62 தென்றலைக் குயிலை மின்னைச்
சிரித்திடும் புதிய பூவைக்
குன்றினின் அருவி ஊற்றைக்
கோலமா மயிலின் கூத்தை
என்றும்யான் பாடி இன்பம்
எய்திடும் தன்மை போல
உன்றன்பேர் எழிலைப் பாடி
உவத்தலில் குறையும் உண்டோ?

63 கற்பனைக் கவிதைக் கல்லாற்
கட்டிய காதற் கோட்டை
பற்பல ஊழி சென்றும்
பாழ்படப் போவ தில்லை
அற்புதப் பார்வை இல்லார்
அழிந்திடும் உடம்பென் பார்கள்
பொற்புடன் புணர்ந்த உள்ளம்
புலமையின் ஊற்ற மாகும்.

64 கனவினில் உன்னைக் கண்டு
கலந்திடும் காதல் இன்பம்
தினமுமே என்னைக் காதல்
தீங்கவி பாடத் தூண்டும்

மனமுமே தளர்ந்த தில்லை
வாய்மையான் கூறு கின்றேன்
நனவிலே கிடையாப் பேற்றை
நல்கிடும் கனவே தெய்வம்.

65 ஒட்டியே உலரும் என்றாய்!
உன்னெழிற் கன்னம் தன்னை
தொட்டியான் சுவைக்கும் போது
சுரந்திடும் காத லன்பால்
மட்டிலா இன்பம் பெற்றேன்;
மாயமும் மருந்தும் அல்ல
கட்டிவெஞ் சிறைவைத் தாலும்
கற்பனைக் கழிவுண் டாமோ?

66 பாட்டினில் உன்னை என்றும்
படைத்துநான் நுகர்ந்து கொள்வேன்;
ஏட்டினில் எழுதா இன்பம்
ஏழ்ஏழு பிறப்பும் எய்தி
நாட்புது மலராம் நின்னை
நயந்தொரு வண்டாய் நிற்பேன்;
ஆட்படு கற்ப னைக்கோர்
அரணில்லை அளவும் இல்லை.

67 கற்பனைக் காதல் இன்பம்
கனிந்திடுங் கவிதைக் காவில்
பொற்பினை ஈன்று வீறும்
பூங்கொடி நின்னைப் புல்லிப்
பெற்றிடும் இன்பம் போலப்
பேரின்பம் பிறிதும் உண்டோ?
கற்றுணர் நீயே என்தன்
கற்பனைக் காதற் செல்வம்!

68 உன்கையால் தொட்டு நீயும்
உதவிடும் படத்தில் என்றும்
மின்செய்நுண் இடையாய் நீயே
வீற்றிருந் தருள்செய் கின்றாய்!
அன்பர்கள் தெய்வ மாக
ஆதரித் தேத்துங் கல்லில்
பொன்செய்த மேனி ஈசன்
புகுந்தருள் செய்தல் போல.

69 எத்தனை ஊழி காலம்
என்னைநீ தெருட்டி னாலும்
முத்தினை வென்ற இன்ப
முறுவலால் என்னைக் கொல்லும்
பத்தினி வள்ளி என்றே
பாடியான் பயனுங் கொள்வேன்
புத்தமு தூறுங் காதற்
புதியபூங் காவிற் காண்பேன்!

70 கலைமகள் அனையாய் எங்கள்
கற்பனைக் காதல் வாழ்வு
அலருறப் போவ தில்லை
அச்சம்நீ கொள்ள வேண்டாம்
நிலவினிற் களித்தல் போல
நெஞ்சினில் நினைப்ப தெல்லாம்
புலனுணர் வாவ தன்றிப்
புலப்படும் பொருள தாமோ?

71 உன்னையான் தேடி உள்ளம்
உருகினேன் என்ப தெல்லாம்
கன்னலை வெல்லும் சொல்லாய்
கற்பனை யாகுங் கண்டாய்

இன்னல்நீ எய்த வேண்டாம்
இலக்கிய உணர்ச்சி யாலே
மன்னிடும் காதல் என்றும்
மாண்டிடப் போவ தில்லை.

72 கட்டினேன் காதற் கோட்டை
கற்பனைக் குயிர்நீ என்றே
மட்டுணும் வண்டு போலுன்
வளர்புலம் மருவி நின்றேன்
தொட்டுனைப் புணர யான்செய்
சூழ்ச்சியென் றெண்ணி அந்தோ
பொட்டணி நுதலாய் நீயும்
புலம்புதல் புலமை யாமோ?

73 காதலின் கற்ப னையாய்க்
கவிதைகள் புனைய வல்லாள்
மாதரின் மணியாம் என்தன்
மாணவி வள்ளி என்றே
ஓதரு முவகை கொண்டேன்
உண்மைமற் றிதனை நீயும்
தீதுறு நோக்க மாகச்
சிந்தித்துத் திகைத்து விட்டாய்.

74. “கனவினிற் கலத்தல் போலக்
கற்பனைக் காதற் பாக்கள்
புனைவதில் நீரும் உள்ளம்
பொலிந்தொளிர் புலமை பெற்றால்
அனைவரும் போற்றும் நல்ல
அழகிலக் கியமும் தோன்றும்
புனமயிற் சாயல்!” என்று
புகன்றதை மறந்து போனீர்!

75 செம்மைசேர் கவிதைப் பண்பால்
தெளிந்துளங் கலந்த காதல்
இம்மைசேர் பிறப்பில் எம்மை
இனித்திடும் தமிழாற் சேர்த்துத்
தம்மையே உணருஞ் சான்றோர்
தவநெறிப் பயன்போல் ஓங்கி
எம்மையே கூட்டி வைக்கும்
இறப்பிலா இன்ப வீட்டில்

76 மாதவி மகளாய்த் தோன்றும்
மணிமே கலைபோல் நீயும்
ஆதலும் அழிவுங் காட்டி
அறநெறி புரக்கும் வண்ணம்
ஓதியென் உளத்தை மாற்றி
உள்ளொளி பெருகச் செய்யும்
மாதவத் தாட்டி யானாய்
வள்ளிநின் மாண்பு வாழ்க!

# அவனும் அவளும்

**கவிதைக் கடிதம்**

## 1. அவள்

**மறவேன் இந்த உதவி**

1 கரும்பின் இனிய தமிழைக்
கற்றுக் களிக்கும் புலவோய்
பொருந்து முடலின் நலத்தைப்
போற்றும் கும்மிப் பாக்கள்
சுரும்புண் தேனைப் போலச்
சொல்லும் பொருளுங் கனிய
விருந்தின் இயற்றி நாளை
வெள்ளிக் கிழமை தருவீர்.

2 வெள்ளிக் கிழமை எட்டு
மணிக்குப் பாட்டு வேண்டும்
வள்ளல் எனக்கு நீரே
மறவேன் இந்த உதவி
பள்ளிக் கூட விழாவில்
பாடி வெல்லா விட்டால்
எள்ளி நகைத்தே என்னை
இகழ்வார் தோழிப் பெண்கள்.

3 எங்கள் வீட்டுத் தெருவால்
ஏகும் பள்ளிச் சிறுமி
தங்க மலரின் கையில்
சரியாய் ஏழு மணிக்கே

உங்கள் பாட்டைக் கொடுங்கள்
உடனே எனக்குத் தருவாள்
பொங்கும் உங்கள் புலமைப்
புகழால் நானும் பொலிவேன்.

## உ. அவன்

### இதுவோ தமிழின் தன்மை

4 தெள்ளும் அறிவின் சாயல்
திருவின் திருவே உந்தன்
உள்ளம் மகிழும் பாக்கள்
உதவும் ஒளியும் பெற்றேன்
அள்ளும் அமுதின் தமிழை
ஆவி கனியக் கனியக்
கொள்ளும் புலமைச் செல்வம்
கொண்டாய் குழைவாய் உள்ளம்.

5 அன்பின் சாயல் வீசி
அறிவின் கதிரைக் காலும்
இன்பத் தமிழ்போல் என்னுள்
இனிக்கும் கலைமாச் செல்வி
முன்பின் அறியா என்னை
முறுவல் நிலவால் உருக்கி
என்பும் நெகிழச் செய்தாய்
இதுவோ தமிழின் தன்மை.

6 உள்ளங் கலந்த காதல்
ஊழி காலம் நிற்கும்
தெள்ளுந் தமிழ்போல் நீயென்
சிந்தை உறைவாய் என்றும்

கள்ள மின்றிச் சொன்னேன்
கலைமேல் ஆணை இட்டேன்
கொள்ளுங் குறையொன் றில்லை
குயிலே உள்ளம் குளிர்வாய்.

7 பாட்டுப் பெற்ற உடனே
பாவாய் பதிலைத் தீட்டு
கேட்டுக் கொண்டேன் உன்னைக்
கேண்மை தமிழால் பெற்றோம்
வீட்டுக் குள்ளே இருந்து
விம்மும் பெண்கள் போலப்
பாட்டுக் கண்டு பயந்தால்
பதிலும் போட வேண்டாம்.

## 3. அவள்

8 உங்கள் கும்மிப் பாட்டால்
உயர்ந்த வெற்றி பெற்றேன்
எங்கள் வகுப்பில் யானே
எடுத்தேன் முதலாம் பரிசில்
திங்கள் ஒளிபோல் நல்ல
தேனின் சுவைபோல் உங்கள்
பொங்கும் புலமை இன்பம்
பொலிக தமிழ்நா டெல்லாம்.

9 குற்றால அருவி ஆடிக்
குளிர்ந்திடும் இன்பம் போல
வற்றாத இனிமை ஊற
வடித்திடும் கன்னித் தமிழால்

கற்றாரும் வியக்க நீங்கள்
கட்டிய கும்மிப் பாக்கள்
பெற்றாவி தளிர்த்தேன் மாறாப்
பேரின்ப வாழ்வும் பெற்றேன்.

10 "பாட்டுக் கண்டு பயந்தால்
பதிலும் போட வேண்டாம்
கேட்டுக் கொண்டேன்" என்று
கேண்மை காட்டிப் புகன்றீர்
பாட்டால் நீங்கள் என்னைப்
பாடிப் புகழ வேண்டாம்
கேட்டால் ஊரும் சிரிக்கும்
கேண்மை எனக்கும் உண்டு.

11 "தெள்ளும் தமிழ்போல் நீயென்
சிந்தை உறைவாய் என்றே"
உள்ளம் விட்டு நீங்கள்
உரைத்த தொடர்கள் என்னைக்
கொள்ளை கொண்டு நெஞ்சைக்
குழைத்துக் குழைத்து நெகிழ்க்கும்
கள்ளம் எனக்கும் இல்லை
கவிதைக் கடிதம் வேண்டும்.

**தமிழர் வாழ உழைத்தல் வேண்டும்**

12 உள்ளத்தைக் கவர்ந்து பாயும்
உயிரினுஞ் சிறந்த காதல்
வெள்ளத்தைக் கவிதை யாக
விருந்தளித் தெனது நெஞ்சை

அள்ளிக்கொண் டாட்சி செய்யும்
அருங்கலைப் புலவோய் உன்தன்
கள்ளத்தைக் கவிதை காட்டக்
கட்டற்ற நிலைமை பெற்றேன்.

13 காதலால் நீரும் நானுங்
கலந்திடும் புதிய வாழ்வில்
சாதல்தான் வருமென் றாலும்
தளர்ந்திடா உள்ளத் தோடு
தீதெலாம் அடைந்து நாளும்
சிதைந்திடும் தமிழர் வாழக்
காதலாய் உழைத்தல் வேண்டும்
கலையின்மேல் ஆணை யிட்டேன்.

14 அன்னமே குயிலே என்றும்
அரும்பெறல் அமிழ்தே என்றும்
முன்னைநாள் உவமை கூறி
முயங்குதல் மட்டும் வாழ்வோ
இன்னலும் அடிமை வாழ்வும்
எம்தமிழ் இனத்தை விட்டு
வென்றிடும் வழியைத் தேடி
விடுதலைப் போர்க்குச் செல்வோம்.

15 கங்கையைக் கொண்டா ரென்றும்
கடாரத்தை வென்றார் என்றும்
இங்குநாம் பழைமை பேசி
எடுத்திடும் பயனொன் றில்லை
அங்கையோ டங்கை கூப்பி
அடிமைசெய் கூலி யாக
எங்கும்போய்த் தமிழர் வாழும்
இழிவினைப் போக்க வேண்டும்.

16 இமயத்தில் கொடியை நாட்டி
இவ்வுல காண்டோம் என்று
சுமையினைத் தூக்குங் கூலி
சொல்வதாற் பெருமை உண்டோ
நமையொத்த அடிமைச் சாதி
நானிலத் தெங்கு மில்லை
சமயப்போர் சாதிப் போரால்
தமிழர்கள் தாழ்ந்து விட்டோம்.

17 கும்மிப்பாட் டுதவுங் காதற்
கொள்கையாற் கூடும் நாங்கள்
எம்மையீன் றளித்த தாயும்
எம்மருந் தந்தை யாரும்
தம்முயிர்க் குயிராய்ப் போற்றும்
தமிழினம் வாழும் வண்ணம்
செம்மைசேர் தொண்டு செய்யும்
திறத்தினால் உயர்ச்சி கொள்வோம்.

## 4. அவன்

### விழிப்புக் கொண்டேன்

18 காதலாற் கூடி நாங்கள்
களித்திடும் புதிய வாழ்வில்
சாதல்தான் நேர்ந்திட் டாலும்
தமிழர்க்காய் உழைப்போம் என்றே
ஓதுமுன் உரைகள் என்தன்
உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளம்
மோதிடும் விடுத லைப்போர்
வெறிதர விழிப்புக் கொண்டேன்.

19 வழிவழி அடிமை யாக
வாழ்ந்திடும் உள்ளத் தோராய்
இழிதொழில் செய்து வாழும்
ஏழைகள் தமிழர் என்றே
பழிமொழி அயலார் சொல்லப்
பாழ்படும் தமிழர் மீளும்
வழிகளை எனக்கு நீயே
வழுத்திட வேண்டும் நங்காய்.

20 உலகினைத் தமிழர் ஆண்ட
உரைமிகப் பழைய தொன்றாய்ப்
புலவர்கள் பாட லாகப்
போயது புதுமை இல்லை
நிலமிசை உரிமை ஆட்சி
நீங்கிட அடிமை ஆகித்
தலைமுறை பலவாய்த் தாழ்ந்தேன்
தமிழர்கள் வாழ்கின் றார்கள்.

21 ஆரெமை ஆண்டா லென்ன
அவரவர்க் கேற்ற தாகக்
காரியம் புரிந்து வாழ்ந்து
காலத்தைக் கழிப்போம் என்னும்
ஓரினம் தமிழர் போல
உலகத்தில் எங்கும் இல்லை
காரிகை இதற்கு நீயே
காரணம் கழற வேண்டும்.

22 தனியர சாட்சி கொண்ட
தமிழகம் இருந்த தென்றால்
இனியெவர் ஒப்புக் கொள்வார்
இலக்கியப் புளுகே என்பார்

பனிதவழ் இமயங் காணப்
பரந்திடும் தமிழர் ஆட்சி
சனியுறு வாழ்வு போலச்
சாய்ந்ததேன் சாற்று வாயே.

## 5. அவள்

**தமிழர் தன்மானங் காத்தல்**

23 செந்தமிழ் நாட்டு மக்கள்
சிறந்திடும் ஆட்சி நீங்கி
நைந்திடல் ஏனோ நங்காய்
நவிலுதல் வேண்டு மென்றே
எந்தனைக் கேட்டு நீங்கள்
எழுதிய கடிதம் பெற்றேன்
சிந்தையில் எனக்குத் தோன்றும்
செய்திகள் செப்பு கின்றேன்.

24 வழிவழி தமிழர் என்றும்
வாழ்ந்தவர் பிறர்க்காய் என்ற
மொழிதனைப் படைத்த தோடு
முடிந்தது தமிழர் ஆட்சி
விழிவழிக் கண்ணீர் வீழ
வெம்பிடும் பிறரைக் காத்தே
அழிவுறும் தமிழர் முன்போல்
ஆளுதல் எந்த நாளோ.

25 ஊரெலாம் எங்கள் ஊரே
உறவினர் உலக மாந்தர்
ஆரெமக் கின்னல் செய்வார்
அறத்தினைக் காப்போம் என்னும்

பேருளம் தாங்கி வாழ்ந்த
பெருமையால் தமிழர் தாழ்ந்தார்
நீரிதைச் சான்று காட்டி
நிறுவவும் வல்லீர் அன்றோ.

26 எங்களின் நாட்டை ஆள
எங்களுக் குரிமை என்று
பொங்கிய உணர்ச்சி யோடும்
புகலுவர் பிறநாட் டுள்ளோர்
எங்களின் தமிழ்நாட் டாட்சி
எங்களுக் குரிமை யென்றே
இங்குள தமிழர் சொன்னால்
ஏதமென் றுரைக்கின் றார்கள்.

27 தமிழகம் தமிழர்க் கென்றால்
தமிழரே சிரிக்கின் றார்கள்
தமிழினால் தமிழ ரோடு
தமிழர்கள் பேசல் தாழ்வாம்
தமிழ்மொழி குறைந்த தென்று
தமிழர்கள் சாற்று கின்றார்
தமிழினைத் தமிழர் போற்றித்
தன்மானங் காத்தல் வேண்டும்

**தமிழர்தானோ மற்றவர்க்கடிமை**

28 ஆங்கிலர் வல்லா ரென்றும்
அமெரிக்கர் பெரியா ரென்றும்
ஓங்குயர் “ரூசியா” வே
உலகத்தை ஆளு மென்றும்

ஈங்கிவை பேசித் தம்முள்
இகலுறும் தமிழர் தாங்கள்
ஏங்குறும் அடிமை வாழ்வில்
இருத்தலைச் சிறிதும் எண்ணார்.

29 கற்றிடுந் தமிழர் தம்முள்
கலந்துரை யாடும் போதும்
உற்றிடும் உத்தி யோகம்
ஊதியம் இவற்றால் தாங்கள்
பெற்றிடும் பெருமை பேசிப்
பெருமிதம் அடைத லன்றி
இற்றைநாள் தமிழர் எய்தும்
இன்னலை எண்ண மாட்டார்.

30 எங்கள்நா டெமக்கே என்ற
எண்ணத்தில் ஊறி வாழ்ந்தோர்
தங்களின் நலத்தைப் போற்றித்
தனியர சாள்கின் றார்கள்
பொங்கிய அன்பி னாலே
புகல்பிறர்க் கெம்நா டென்றே
இங்குறை தமிழர் ஆட்சி
இழந்துளம் இடிகின் றார்கள்.

31 வந்திடும் பிறநாட் டாரை
மகிழ்வுடன் ஏற்று வாழ்ந்து
சிந்தையில் உவகை கொள்வோர்
செந்தமிழ் நாட்டா ரென்றே
வந்தனை புரிந்து போற்றி
வழிவழி யாக எங்கள்
அந்தமில் செல்வ மெல்லாம்
அயலவர் வாரிக் கொண்டார்.

32 அறத்தினைப் போற்றி வாழ்வோர்
அருந்தமிழ் நாட்டா ரென்னும்
திறத்தினைப் பிறநாட் டார்கள்
தீயதோர் கருவி யாக்கி
மறத்துடன் அறத்தைக் காத்து
வையமாள் தமிழர் என்ற
இனத்தினை அடிமை வாழ்வில்
இருத்தியின் றிகழ்கின் றார்கள்.

33 ஆந்திரர் அரசு பெற்றார்
அதுமிகச் சிறந்த தென்பார்
ஏந்திய உரிமை ஆட்சி
எமக்கெனத் தமிழர் கேட்கப்
போந்தது தீமை யென்றே
புகல்கின்றார் ஆட்சி யாளர்
மாந்தரில் தமிழர் தானோ
மற்றவர்க் கடிமை யாவோர்.

## ௬. அவன்

### தறுகண்மை தமிழர்க்குண்டு

34 வந்தவர்க் கிடங் கொடுத்து
வாழ்ந்திடும் பழக்கத் தாலே
நைந்தனர் தமிழர் என்று
நங்கைநீ நவிலுங் கொள்கை
சிந்தனைக் குரிய தாகும்
சென்றநாட் பெருமை சொல்லி
இந்தநாள் வாழும் மாந்தர்
இறந்திடும் பிணங்க ளாவர்.

35 சாதியால் சமய வாழ்வால்
தனித்தனி பிரிந்து வாழும்
பேதைமை ஒழிந்து நாங்கள்
பிறப்பினால் தமிழர் என்றே
ஓதியோர் கணத்தில் சேர்ந்தால்
உலகத்தை ஆள வல்லோம்
சாதலே வாழ்வாய்க் காணும்
தறுகண்மை தமிழர்க் குண்டு.

36 கொள்கைகள் நூறு நூறாய்க்
கொண்டொரு குறிக்கோ ளின்றி
உள்ளமும் உரையும் வேறாய்
உணவுக்கும் உடைக்கும் வாழும்
வெள்ளைகள் தமிழர் என்றே
விளம்பிடும் வடுவைப் போக்க
வெள்ளமாய்த் தமிழர் கூட்டம்
வீறுகொண் டெழுதல் வேண்டும்.

37 தமிழர்கள் நாங்க ளென்றே
தழைத்திடும் உணர்ச்சி யோடு
தமிழர்கள் ஒன்று பட்டால்
தமிழகம் தமிழர்க் காகும்
தமிழர்கள் உலகில் மீண்டும்
தலையெடுத் துலவுங் காலம்
தமிழர்கள் காண்ப தென்றால்
தனியர சாட்சி வேண்டும்.

38 உடல்பொருள் ஆவி யெல்லாம்
உரிமையைப் பெறுதற் காக
விடலுறும் வீறு தாங்கி
விடுதலைப் போரை ஆற்றி

அடலுறும் ஆண்மை ஆளர்
ஆயிரம் தமிழர் கூட்டம்
திடமுடன் எழுச்சி கொண்டால்
செந்தமிழ் நாட்டை ஆள்வோம்.

## 7. அவள்

### தொண்டராய் எழுதல் வேண்டும்

39 ஒன்றுபட் டெழுந்தால் இந்த
உலகத்தை ஆட்சி செய்யும்
வன்றிறல் தமிழர் வாழ்வில்
மலர்ந்திடும் என்று நீங்கள்
குன்றின்வீழ் அருவி போலக்
குமுறிய குரலைக் கேட்டேன்
என்றுதான் தமிழர் கூட்டம்
எழுச்சிகொண் டுரிமை ஏற்கும்.

40 தன்னல மற்ற வீரத்
தலைவனே தோன்றி எங்கள்
இன்னலைப் போக்க எண்ணி
இடைவிடா துழைத்தல் வேண்டும்
முன்னமோர் கொள்கை கூறி
முடிவிலோர் கொள்கை ஏற்கும்
தன்னலத் தலைவர் சொல்லே
சாப்பறை தமிழர்க் காகும்.

41 தக்கவர் என்று நாங்கள்
தழுவிய தலைவர் பல்லோர்
குக்கல்கள் போல ஆள்வோர்
கொள்கையை ஏற்றுத் தங்கள்

மக்களும் உறவும் வாழ
வாழ்ந்துதம் மானம் விற்றார்
இக்கொடுந் தலைவர் போல்வார்
இனியெமை ஏய்க்க மாட்டார்.

42 கோவில்கள் கோடி கட்டிக்
கும்பிடுந் தொண்டில் எங்கள்
தாயினும் இனிய நாட்டைத்
தளைத்திடும் அடிமை ஆட்சி
மாயநாம் ஆற்றும் தொண்டே
வழிவழி எம்மைக் காக்கும்
தூயநல் இளைஞர் கூட்டம்
தொண்டராய் எழுதல் வேண்டும்.

43 தன்னர சாட்சி கொள்ளச்
சாதலும் தக்க தென்பார்
இன்னல்கள் கோடி ஏற்பார்
எங்கள்போல் மாந்தர் என்றால்
கன்னலோ எங்கள் ஆவி
கட்டிளந் தமிழர் எல்லாம்
இன்னமும் உறங்கல் ஏனோ
இறந்திடா வரம்பெற் றீரோ.

### ஆண்மையால் அரசு கொள்வோம்

44 வீட்டிற்காய் வாழ்ந்து வாழ்ந்து
வீய்ந்திடும் வீரர் இந்த
நாட்டிற்குள் தமிழர் என்றே
நகைத்திடும் பகைவர் நெஞ்சை

ஈட்டிக்கே விருந்து செய்யும்
இளந்தமிழ் வீரர் கூட்டம்
காட்டுத்தீ போலத் தோன்றிக்
கடமையை ஆற்ற வேண்டும்.

45 மற்றவர் நாட்டை ஆள
மறப்படை திரட்டும் இந்நாள்
பெற்றநம் நாட்டை ஆளாப்
பேடிகள் தமிழர் தானோ
உற்றிடும் பொருளும் வாழ்வும்
உரிமையில் பெரிய தாமோ
அற்றைநாள் தமிழர் போல
ஆண்மையால் அரசு கொள்வோம்.

46 சீனர்கள் ஆட்சி பெற்றார்
சீக்கியர் விழிப்புக் கொண்டார்
மானமே உயிரென் றெண்ணி
வாழ்ந்திடும் தமிழர் தானோ
வானவர் பெருமை பேசி
வழிவழி அடிமை ஆவார்
ஏனினி இந்த வாழ்க்கை
இறந்தவர் அன்றோ நாங்கள்.

47 ஊழென்று கூறிக் கூறி
ஊக்கமும் உணர்வும் இன்றிப்
பாழொன்றப் பழமை பேசிப்
பகைவரைப் பணிந்து வாழும்
ஏழைகள் தமிழர் என்றே
இயம்பநாம் இருக்க லாமோ?
வாளென்றால் தோள்கள் வீங்கும்
மறவர்கள் எங்கள் முன்னோர்.

48 வீரரோ தமிழர் என்று
விருந்தினில் இகழ்ந்து சொன்ன
ஆரிய நாட்டு வேந்தர்
ஆண்மையை அடக்கி வென்ற
சேரனின் செய்தி யெல்லாம்
சிலப்பதி காரங் கூறும்
பாரினில் தமிழர் மீண்டும்
படைக்கலம் எடுத்தல் வேண்டும்.

**தீருமோ அடிமை வாழ்வு**

49 தன்னருந் தலைவன் போரில்
சாகவுந் தளர்ந்தி டாமல்
இன்னுயிர் மகனைக் கூவி
இன்றுபோ போர்க்கென் றேவும்
அன்னையர் வாழ்ந்த நாட்டில்
அடிமையாய் வாழ மாட்டோம்
இன்னல்கள் கோடி ஏற்றும்
எம்தமிழ் நாட்டை ஆள்வோம்.

50 இந்தநாள் உலகில் எங்கும்
எழுச்சிகொண் டுரிமைக் காக
வெந்திறற் போரை ஆற்றி
வீந்தவர் வீரங் கண்டும்
செந்தமிழ் நாட்டு மக்கள்
செத்தபின் பேற்றில் சேரும்
சிந்தனை பெருக்கி வாழ்ந்தால்
தீருமோ அடிமை வாழ்வு.

51 அறத்தினைத் தெய்வ மாக்கி
ஆண்மையைக் காத்த எங்கள்
மறத்தமிழ் வீரர் முன்னாள்
வாளமர் ஆற்றும் மாண்பைப்
புறத்திணை ஒழுக்க மாகப்
போற்றிநின் றுரைக்கும் நாங்கள்
இறத்தலுக் கஞ்சி வாழ்ந்தால்
எய்துமோ உரிமை ஆட்சி.

52 தந்தையின் தந்தை யாகத்
தமிழர்கள் ஆண்ட நாட்டை
வந்தவர் ஆட்சி செய்ய
வாழ்ந்திடும் அடிமை வாழ்வு
இந்திர போக மாக
இருக்கினும் இன்பம் உண்டோ
கந்தையைச் சுற்றி னாலும்
களிப்பெமக் குரிமை வாழ்வே.

53 வள்ளுவர் குறளை ஆக்க
வாழ்ந்தவர் தமிழர் என்று
கொள்ளுமோ உலகம் இந்நாள்
கோழைகள் தமிழர் என்ற
உள்ளமும் நோக்கும் போக
உழைத்துநாம் உயர வேண்டும்
தள்ளரும் ஆற்ற லோடு
தமிழர்கள் ஒன்று சேர்வீர்.

## இளந்தமிழ் வீரர் ஆர்த்தார்

54 சிந்தையில் இன்பம் பாயத்
திருந்திய செங்கோல் ஓச்சிச்
செந்தமிழ் நாட்டை முன்னாள்
சிறப்புடன் ஆண்ட வேந்தர்
தந்திடும் புகழைப் போலத்
தமிழகம் மலரும் வாழ்வை
இந்தநாள் உலகங் காண
எங்களின் ஆட்சி வேண்டும்.

55 மணிமுடி தாங்கும் மன்னன்
மாபெரும் கவிஞர் வீரர்
அணிமுடி கற்பே ஆக
அரசுசெய் மகளிர் என்னப்
பணிகுதல் அறியாக் கூட்டம்
பழந்தமிழ் மாந்தர் என்றால்
தணிகுதல் தமிழர்க் கில்லை
தனியரச சாட்சி கொள்வோம்.

56 நாட்டிற்காய்ப் போரில் மாய்ந்து
நடுகல்லில் நின்ற வீரர்
பாட்டிற்கே விருந்தாய் வாழப்
பரம்பரை உணர்ச்சி இன்றி
வீட்டிற்கே உழைத்து வாழ்தல்
வீரமோ விழித்தெ ழுந்து
நாட்டிற்காய்த் தொண்டு செய்வோம்
நம்தமிழ் இளைஞர் வாரீர்.

**வித்துவான் க. வேந்தனார்**

57 காவியங் கவிதை யாழ்நூல்
கற்பனை கனிந்து வாழும்
ஓவியம் கூத்துச் சிற்பம்
உணர்ந்தவர் தமிழர் என்று
கூவியே உலகங் கூறும்
கொள்கைகள் தமிழர் ஆட்சி
மேவிய அந்த நாளில்
விளைந்திடும் விழுப்பம் அன்றோ!

58 செந்நெலும் தெங்கும் மாவும்
தேன்சுவைக் கரும்பும் ஆர்ந்து
மன்னெழில் மலையும் யாறும்
வளஞ்சுரந் தாக்கம் நல்கும்
அன்னையின் இனிய நாட்டை
அயலவர் ஆட்சி செய்ய
இன்னலுற் றிரங்க மாட்டோம்
இளந்தமிழ் வீரர் ஆர்த்தார்.

## 8. அவனும் அவளும்

### விடிந்தது தமிழர் வாழ்வு

59 தமிழர்கள் விழிப்புக் கொண்டார்
தமிழகம் தமிழர்க் காகும்
தமிழினித் தாழ்தல் இல்லை
தமிழர்கள் தமிழைக் காப்பார்
தமிழினில் புதிய நூல்கள்
தழைத்திடும் தமிழர் ஆட்சி
தமிழகத் தோங்கும் மாண்பு
தக்கதென் றுலகம் ஏற்கும்.

60 எழுத்தினில் வல்லார் என்றும்
இலக்கியம் புனைவோர் என்றும்
செழித்திடும் உணர்ச்சிப் பாக்கள்
தீட்டிடுங் கவிஞர் என்றும்
அழித்திடும் அடிமை வாழ்வை
அகற்றிடும் வீரர் என்றும்
விழித்தனர் தமிழர் பல்லோர்
விடிந்தது தமிழர் வாழ்வு.

61 நெஞ்சினில் தாய்நாட் டன்பு
நிழலிடும் புதிய வாழ்வும்
அஞ்சிடோம் அடிமை வாழ்வை
அகற்றுவோம் என்ற வீறும்
நஞ்சினை அமுத மாக
நயந்துணும் சால்புங் கொண்ட
வெஞ்சின மறவர் கோடி
விரைந்தனர் தமிழர் வாழ்ந்தார்.

62 இனியெமக் கின்னல் இல்லை
இன்பமே எந்த நாளும்
தனியொரு தமிழன் தாழ்வும்
தமிழர்கள் தாழ்வாய் எண்ணிக்
கனிவுறும் உணர்ச்சிப் பண்பால்
கலந்தனர் தமிழர் எல்லாம்
பனிதவழ் இமயக் குன்றும்
பண்டுபோல் தமிழர்க் காகும்.

63 வெற்றிச் சங்கூதிப் பாடி
வீரர்க்கு விருந்து செய்வோம்
கொற்றவை அடிகள் போற்றிக்
குன்றெனத் தோள்கள் வீங்கும்

நற்றமிழ் வேந்தர் மூவர்
நாட்டிய தமிழன் ஆட்சி
பெற்றிடும் இன்ப நாளின்
பெருமுர சொலியுங் கேட்போம்.

**சேர்ந்து நாம் தமிழைக் காப்போம்**

64 மன்னும் இமய வரம்பனென
வையம் போற்றுந் தமிழ்வேந்தன்
இன்னும் எம்மோ டிருக்கின்றான்
எங்கள் நாட்டை ஆள்கின்றான்
என்னும் உணர்ச்சி இளந்தமிழர்
இதய மலையில் ஊற்றெடுத்தால்
பொன்னின் முடியைத் தமிழன்னை
புனைவாள் தமிழன் புகழோங்கும்.

65 என்னை இகழ்ந்த பகைவர்களை
இன்று போரில் வென்றிலனேல்
மன்னன் நீயோ என்றென்கீழ்
வாழுங் குடிகள் பழிதூற்றும்
இன்னல் புரிந்தேன் ஆகவென
இயம்பும் மன்னன் நெடுஞ்செழியன்
முன்னர் ஆண்ட தமிழகத்தின்
முதன்மை கண்டோம் முயன்றிடுவோம்.

66 நெல்லும் நீரும் உயிரல்ல
நிறைந்த அன்பால் அரசாளும்
மன்னன் உலகுக் குயிரென்றே
வாழ்த்தும் தமிழன் தாய்நாட்டை

இன்னும் அயலார் ஆள்வாரோ
இன்றே எழுந்தார் இளந்தமிழர்
பொன்னும் பொருளும் ஈகையுமாய்ப்
பொலியுந் தமிழன் பொன்னாடு.

67 இருவரும் போரில் வெல்லல்
இயற்கையும் அல்ல நீங்கள்
ஒருவரை ஒருவர் வென்றால்
உலைவுநுங் குடிக்கென் றோதும்
ஒருபெரும் புலவன் சொல்லை
உணர்ந்தனம் புறநா நூற்றில்
செருவினித் தமிழர்க் கில்லை
சேர்ந்துநாம் தமிழைக் காப்போம்.

68 முற்றுணர் மோசி கீரன்
முரசுறு கட்டி லின்மேல்
உற்றிடும் உறக்கங் கண்டும்
ஒண்தமிழ்ப் புலவன் என்னும்
பற்றினால் கொன்றி டாமல்
பால்நிறக் கவரி வீசும்
கொற்றவன் சேரன் போலக்
குழைந்துநாம் தமிழைக் காப்போம்.

**நந்தமிழ் நாட்டை ஆள்வோம்**

69 தன்னினும் நீண்ட காலம்
தமிழுணர் ஔவை வாழ்தல்
மன்னுயிர்க் காக்க மென்றே
மதித்திடும் அதிக மான்போல்

இன்னலும் நோயும் இன்றி
இன்தமிழ்ப் புலவர் வாழ்வில்
நன்னிலை நிலவி ஓங்க
நந்தமிழ் நாட்டை ஆள்வோம்.

70 அல்லலோர் உயிர்க்கும் இன்றி
அன்னைபோல் காக்கும் அன்பால்
அல்லிசேர் தளிரும் பூவும்
ஆர்ந்தொரு கொழுகொம் பில்லா
முல்லைக்குத் தேரை ஈய்ந்த
முன்னைநாள் பாரி போல
நல்லறம் நிழலைச் செய்ய
நந்தமிழ் நாட்டை ஆள்வோம்.

71 பெரும்புலிக் குகையைப் போன்ற
பெற்றவென் வயிறு நங்காய்
அருந்திறல் எனது மைந்தன்
அமர்க்களந் தன்னில் நிற்பான்
விரும்பிநீ செல்வாய் என்றே
வீரத்தாய் விளம்புஞ் சொல்லை
அருந்தமிழ் நாட்டுப் பெண்கள்
அமுதமென் றருந்த வேண்டும்.

72 மார்பினில் பாய்ந்த வேலை
மறுகையால் பிடுங்கி மாற்றார்
போருடைந் தோட வீசும்
போர்க்குலம் தமிழர் என்ற
பேர்புறத் திணையாய்ப் பேணும்
பெருந்திறல் வீரர் நாங்கள்
ஆரினித் தடுத்திட டாலும்
அருந்தமிழ் நாட்டை ஆள்வோம்.

73 ஈதலே வாழ்வில் இன்பம்
இரந்தவர்க் கீயா மாந்தர்
சாதலே தக்க தென்று
சாற்றிடும் தமிழன் நாட்டிற்
காதலாய் உழைப்போம் என்று
கட்டிளந் தமிழர் ஆர்த்தார்
தீதெலாம் அகலும் முன்போல்
செந்தமிழ் அரசும் ஓங்கும்.

### தழைத்தது தமிழன் நாடு

74 தலையாலங் கானந் தன்னில்
தமிழ்ப்படை திரண்டாற் போல
உலையாத உணர்வும் வீறும்
உளத்தினில் நிலைபெற் றோங்க
அலையாக எழுந்த வீரர்
அளித்திடும் வெற்றி யாலே
தலையான அரசு பெற்றுத்
தழைத்தது தமிழன் நாடு.

75 உப்பின்றி வெந்த கூழை
ஒன்றைவிட் டொருநாள் உண்ணும்
வைப்பின்றி வறுமை வாழ்வு
வந்துற்ற போதும் உள்ளம்
கைப்பின்றிக் கணவன் மாண்பைக்
காத்திடுங் கற்பின் நல்லார்
தப்பின்றி வாழ்ந்த தாலே
தழைத்தது தமிழன் நாடு.

76 நரம்பெலாந் தோன்ற மூத்து
நரைத்திடுங் கிழவி எந்தன்
அரும்பெறற் புதல்வன் போரில்
அழிந்துபின் முதுகு காட்டான்
பொரும்களத் திறப்பான் என்றே
புகன்றுபோய்ப் பிணத்தைத் தேடும்
திருந்திய மறத்தி னாலே
சிறந்தது தமிழன் நாடு.

77 மாற்றலன் போருக் கஞ்சி
மதிலடைத் திருந்த வேந்தைக்
கூற்றுறழ் குரலாற் கூவிக்
குடிகளைக் காக்க வேண்டும்
ஆற்றலில் திறப்பாய் அன்றேல்
அறத்தினில் திறப்பாய் என்றே
சாற்றிய புலவன் சால்பால்
தழைத்தது தமிழன் நாடு.

78 மன்னவன் ஆட்சி நன்றென்
மனைவியும் மாண்பு மிக்காள்
என்னரும் மக்கள் கற்றோர்
இனத்தினர் ஊரார் சான்றோர்
இன்னலை அறியேன் வாழ்வில்
என்றும்யான் இளைஞன் என்றே
பன்னிய சான்றோன் வாழ்வைப்
படைத்தது தமிழன் நாடு.

## சிறந்தது தமிழன் நாடு

79 மாற்றலர் நாட்டை வெல்லும்
மறப்படை நிறைந்திட் டாலும்
ஆற்றலாய் அரசைத் தாங்கும்
அருந்துணை அறமே என்னும்
கூற்றினைப் போற்றி வேந்தே
குடிகளைக் காப்பாய் என்று
சாற்றிய புலமை யாலே
தழைத்தது தமிழன் நாடு.

80 முற்றிய செல்வங் கொண்ட
முடியுடை வேந்த ரேனும்
கற்றிடும் எமது மாண்பைக்
கருத்தினில் மதியா ராகில்
மற்றவர் வழங்கும் பொன்னை
மதித்துயாம் வாங்கோம் என்று
சொற்றிடும் புலவர் ஆற்றல்
சுரந்தது தமிழன் நாடு.

81 பால்சுவை புளிப்புற் றாலும்
பகலவன் இருளுற் றாலும்
நால்வகை மறையும் மாறி
ஞாலமே பிறழ்வுற் றாலும்
கோல்பிழை யாமற் காக்கும்
கொள்கையர் அமைச்சர் என்னும்
சால்பினை உலகம் போற்றத்
தந்தது தமிழன் நாடு.

82 இந்த உலகில் அறம்செய்தால்
எய்தும் இன்பம் எனக்கென்றே
அந்த உலகின் பயன்கருதி
அறத்தைப் புரிவோன் ஆய்அல்லன்
சிந்தை மலர்ந்து தமிழ்ச்சான்றோர்
சென்ற நெறியே அறஞ்செய்தான்
முந்தை மரபே இதுவென்று
மொழிந்த தமிழன் முதல்நாடு.

83 இந்திரன் அமிழ்த மேனும்
இனிதெனத் தமியர் உண்ணார்
சிந்தையில் வஞ்சம் இல்லார்
தீவினைக் கஞ்சி வாழ்வார்
வந்திடும் உலகென் றாலும்
வாய்மையில் மாற மாட்டார்
செந்தமிழ் மாந்தர் என்றே
சிறந்தது தமிழன் நாடு.

**பெரியோன் ஆக்கல் தந்தை கடன்**

84 மன்னன் அதிக மான்படைகள்
மடிந்தும் முறிந்தும் நுனியொடிந்தும்
இன்னும் கொல்லன் பட்டடையில்
இருக்கின் றனவால், நின்படைகள்
பொன்னை வென்ற ஒளியுடனே
பூவுஞ் சூட்டிப் பொலியுதெனப்
பன்னித் தொண்டை மானையிகழ்
பாட்டி ஔவை பயில்நாடு

85 பெற்று வளர்த்தல் எனதுகடன்
பெரியோன் ஆக்கல் தந்தைகடன்
கொற்றப் படைகள் பலவடித்துக்
கொடுத்தல் கொல்லன் தனதுகடன்
குற்றம் போக்கல் வேந்தர்கடன்
கொடிய பகையை வென்றுவரல்
கற்ற என்சேய் கடனென்றே
கழறுங் கன்னித் தமிழ்நாடு.

86 பாவிரி தமிழ்நா டாளும்
பாண்டியன், சோழ னென்னும்
காவிரி நாட னோடு
கலந்தொருங் கிருந்த காட்சி
ஆவியை உருக்கப் பாடும்
அருந்தமிழ்க் காரிக் கண்ணன்
மேவிய சிறப்பி னாலே
விரிந்தது தமிழன் நாடு.

87 மக்களின் வாழ்வில் தோன்றும்
வளர்ச்சியும் குறைவும் என்றே
மிக்குயர் வானில் நின்று
வெண்மதி விளக்கிக் காட்டும்
இக்கணம் நீயும் மன்னா
ஏழைகட் கீந்து வாழ்தல்
தக்கதென் றுரைத்த சான்றோர்
தழைத்திடும் தமிழன் நாடு.

88 எழும்படைப் பெருக்கி னாலே
எய்திடும் வெற்றி யெல்லாம்
உழும்படை ஊன்று சாலின்
ஊதியம் உதவுஞ் செல்வம்

உழுங்குடி ஊக்கம் கெட்டால்
உலையும்நின் அரசு மென்றே
செழுங்குடி நாகன் பாடும்
செந்தமிழ் சிறந்த நாடு.

**களிக்கும் கன்னித் தமிழ்நாடு**

89 தன்னுயிர் கொடுத்தும் நல்ல
தமிழுணர் புலவன் உற்ற
இன்னலைப் போக்க எண்ணி
இலங்குவாள் ஈந்த செங்கோல்
மன்னவன் குமணன் என்னும்
வள்ளலைப் பெற்ற தாலே
தன்னிகர் தானே ஆகித்
தழைத்தது தமிழன் நாடு.

90 மாற்றலர் போரை வென்றென்
மக்களைக் காக்கே னாகில்
போற்றிய தென்னா டாளும்
பொறுப்பினில் நீங்கிப் புன்மை
ஏற்றிடும் பிறர்நாட் டாட்சி
எய்தநான் பிறப்பே னென்று
சாற்றிய வேந்தன் வீரம்
தழைத்தது தமிழன் நாடு.

91 நீதி விலகா நெஞ்சமுடன்
நிறைந்த நயத்தை விரும்பாமல்
ஓதித் தங்கள் கொள்விலையை
ஊரில் பொருளை விற்கின்ற
காதல் வணிகர் நாட்டிலறங்
காத்து வாழ்ந்த காரணத்தால்

தீது சிறிதும் இல்லாமல்
சிறந்தது தமிழன் திருநாடு.

92 உற்ற நேரம் உதவிசெய்தும்
உயர்ந்த பொருளை மிகக்கொடுத்தும்
கற்ற புலவன் கழல்பணிந்தும்
கல்வி கற்றல் இனியதென
வெற்றி வேந்தன் நெடுஞ்செழியன்
விளம்புங் குரலால் விழித்தெழுந்து
கற்ற புலவோர் கலையாய்ந்தே
களிக்கும் கன்னித் தமிழ்நாடு.

93 உண்ணும் உணவை உதவிடுவோர்
உயிரைக் கொடுத்தோர் எனும்முடிவை
எண்ணி வரண்ட நிலப்பகுதி
எங்கும் குளங்கள் பலவெட்டிக்
கண்ணுங் கருத்து மாய்க்குடிகள்
கவலை போக்கி நீயாண்டால்
நண்ணும் புகழென் றரசர்க்கு
நவிலும் புலவன் வாழ்நாடு.

# இரண்டாம் பதிப்பில்
# இணைக்கப்பட்டவை

# திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சி

**எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்**

1 செங்கதிர்ச் செல்வனும் குணதிசை எழுந்தான்
செறியிருள் அகன்றது சிறந்தது வானம்
பொங்கருள் நான்மறை அந்தணர் புகன்றார்
புள்ளினம் ஆர்த்தன போந்தனர் அடியார்
திங்களின் பிறையணி சிவன்தருஞ் செல்வா
திருநல் லூருறை திருமுரு கோனே
எங்களை ஆட்கொளும் இன்னருட் கடலே
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

2 செந்தமிழ் இசையெனச் சேவல்கள் கூவும்
தேமலர்ச் சோலையில் தீங்குயில் பாடும்
மந்திர கீதங்கள் வந்தலை மோதும்
மங்கலச் சங்கொலி வானுல கேகும்
சிந்தையில் இனியவர் செம்பொருள் காணும்
திருநல் லூருறை திருமுரு கோனே
எந்தைநின் திருவடி இறைஞ்சிட விழைந்தோம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

3 மூவரின் முந்திய முழுமுதற் பொருளே
முனிவர்கள் காட்சியில் மூண்டெழுஞ் சுடரே
ஆவலின் அழுதனர் தொழுதனர் அடியார்
ஆண்டருள் புரியென அழைத்தனர் கேளாய்
தேவரிற் செம்மைகொள் துறவிகள் சேரும்
திருநல் லூருறை திருமுரு கோனே
ஏவரும் ஏத்திடும் பேறெமக் கருள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

4 கூடினர் ஆடினர் குழைந்தனர் பணிந்தார்
கோயிலின் மண்டபங் குவிந்தனர் தொண்டர்
வாடினர் வந்துநின் மலரடி காணார்
வழிவழி அடியவர் யாமென வாழ்த்தித்
தேடினர் ஓடினர் திகைத்தனர் நின்றார்
திருநல் லூருறை திருமுரு கோனே
ஏடியல் மலர்நிகர் இணையடி தொழுதோம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

5 பொங்கெழின் மாலையர் பூவினர் ஒருபால்
போற்றிசெய் அருச்சனைப் பொருளினர் ஒருபால்
தங்கொலி முழவினர் குழலினர் ஒருபால்
தமிழ்மறை யாழுடன் சாற்றினர் ஒருபால்
தெங்கிளங் கமுகுடன் செறிந்திடும் பொழிலார்
திருநல் லூருறை திருமுரு கோனே
எங்களை ஏற்றருள் ஈந்திடுந் தலைவா
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

6 பிறந்திடும் பெரும்பயன் பெற்றிட விழைந்தோம்
பேணிநின் திருவடிப் போதினை புகழ்ந்தோம்
அறம்பொருள் இன்பமும் வீடெனும் பேறும்
ஐயநின் ஆரருள் ஆட்சியென் றறிந்தோம்
சிறந்திடும் சிவநெறி தெளிந்தவர் போற்றும்
திருநல் லூருறை திருமுரு கோனே
இறந்திடும் பிணிகெட இன்னருள் புரிவாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

**வித்துவான் க. வேந்தனார்**

7 விழித்திடும் நுதலினன் வீறொளிர் விருந்தே
விண்ணவர் போற்றிடும் விளங்கொளிப் பிழம்பே
கொழித்திடுந் தேன்சுவைக் கொழுந்தமிழ்ப் புலவா
குறமகள் காதலிற் குழைந்திடுங் குகனே
செழித்திடும் செந்நெலும் செல்வமும் ஓங்கும்
திருநல் லூருறை திருமுரு கோனே
இழித்திடும் பிறப்பினை ஒழித்தெமை ஆள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

8 ஐம்பெரும் பூதமும் அறந்தரும் பயனும்
அறிவரும் ஐந்தொழில் ஆற்றிடும் முதலும்
உம்பரில் சுழல்தரு கோள்களின் ஒளியும்
உயரருள் வீட்டினை உதவிடுஞ் சிவமும்
செம்புலச் செல்வர்கள் நீயெனத் தெளிந்தார்
திருநல் லூருறை திருமுரு கோனே
இம்பரில் யாம்பெறும் இன்சுவை அமுதே
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

9 புலவரின் நாமிசைப் பொருந்திடும் பொருளே
புதுமையும் பழமையும் பொலிந்திடும் புகலே
நிலவிய பேரின்ப வீட்டினின் நிறைவே
நிகழ்வுடன் இறப்பெதிர் நீங்கிய நிலையே
செலவுடன் வரவையும் புணர்வையுங் கடந்தோய்
திருநல் லூருறை திருமுரு கோனே
இலகொளி ஈந்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

10 பாற்கடற் பாயலிற் பள்ளிகொள் வோனும்
பயன்கெழு நான்மறை பகர்ந்தருள் வோனும்
மாற்றரும் மறலியும் வானவர் கோனும்
மாதவச் செல்வரும் வாழ்த்திடும் அரசே
சேற்றினிற் சேல்புரள் கழனிகள் ஓங்கும்
திருநல் லூருறை திருமுரு கோனே
ஏற்றெமைப் புரந்துயர் வீட்டுல கருள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

*(நூல்: யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்த்*
*திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும் - 1961)*

# உற்றதுணை!

காதலனும் காதலியும் கடற்கரையில் இருந்து
கடலையுடன் சிற்றுண்டி கனிவகைகள் உண்டும்
மோதியெழும் கடலலையில் முந்திரிகைப் பழத்தை
முகைநீக்கி விட்டெறிந்தும் முறுவலித்தும் மகிழ்ந்தார்.

கடலலையில் முந்திரிகைக் கனிவீசி மகிழும்
காதலரைக் கண்டவுடன் கடுகி நடந்தோடி
உடல்தெரியா வகைசுற்றி உடுத்திருக்கும் கந்தை
உடைதன்னைச் சரிப்படுத்தி ஒதுங்கியொரு புறமாய்;

கஞ்சியின்றிக் கதறியழும் கைக்குழந்தை யுடனே
கண்களில்நீர் வழிந்தோடக் கைகூப்பி வணங்கி
நெஞ்சிரங்கி எனக்கேதுந் தந்திடுவீர் என்றே
நெடுமூச்சும் விம்மலுமாய் நின்றிரந்தாள் ஓர்பெண்.

இரந்தவளைக் கண்டவுடன் இவளென்ன சனியன்
எங்களிடம் தான்பிச்சை எடுக்க வருகின்றாள்
விரைந்தெழுந்து வாநாங்கள் வேறிடத்துச் செல்வோம்,
விண்ணமுதே என்றழைத்தார் கண்ணிறைந்த தோழர்.

உண்டுமிகும் சிற்றுண்டி உணவுவகை தன்னை
ஒன்றாகச் சேர்த்தங்கோர் உருளாகக் கட்டி
மண்டியெழும் கடலலைகள் கொண்டு செலவீசி
மனம்மகிழுங் காதலர்கள் மறுபக்கஞ் சென்றார்.

கடலலையில் சிற்றுண்டிக் கட்டலையக் கண்டும்
கைக்குழந்தை பசித்துயரால் கதறியழக் கண்டும்
உடல்பதறி உயிர்சோர உணர்வழிந்த நிலையில்
ஒருகல்மேல் குழந்தையுடன் உறங்கிவிட்டாள் அந்தோ!

கடல்நடுவே மீன்பிடிக்கச் சென்றிடுந்தன் கணவன்
கடும்பசிக்காம் உணவுகொண்டு கடற்கரைக்கு வந்த
பிடிநடையாள் கருங்கல்மேல் பிள்ளையுடன் உறங்கும்
பெண்ணவளைக் கண்டுள்ளம் பேரிரக்கங் கொண்டாள்.

கந்தைசுற்றும் உடல்பதறக் கைக்குழந்தை யுடனே
கண்ணுறங்கும் அவள்முகத்தில் தண்ணீரைத் தெளித்தே
இந்தநிலை உனக்கேனோ எழுந்திரம்மா என்றாள்;
ஏழையவள் ஏக்கமுடன் எழுந்திரங்கித் தொழுதாள்.

எழுந்தவளை அன்பொழுக இரக்கமுடன் நோக்கி
இவ்வுணவை உண்டிடுவீர் எனக்கொடுத்தே அவளின்
குழந்தைதனைத் தான்தூக்கிக் குடிக்கநீர் பருக்கிக்
குழைந்துள்ளம் சோறூட்டிக் கொண்டிருக்கும் போது

அலைமோதும் கடல்மீது படகோட்டிச் சென்றோன்
ஆண்மையுடன் கடற்பரப்பில் அஞ்சாமல் நின்று
வலைவீசிப் பெருமீன்கள் மிகவாரிக் கொண்டு,
மகிழ்ச்சியுடன் உணவுண்ணக் கரைநோக்கி வந்தான்.

கரையோரம் தன்மனையாள் காத்திருப்பாள் என்ற
காதலுடன் நின்றவனும் கல்லருகிற் கண்டான்;
உரையேதும் சொல்லாமல் உடைமாற்றிக் கொண்டோன்,
உரிமையுடன் மனையாளை உற்றதென்ன என்றான்.

ஏழைப்பெண் குழந்தையுடன் எழுந்துசெல முயன்றாள்;
இருங்களம்மா பயம்வேண்டாம் என்‘புரியன்’ இவர்தான்;
ஏழைக்கே ஏழைதுணை என்பதிவர் கொள்கை
என்றுசொல்லித் தன்கணவன் எழில்முகத்தைப் பார்த்தாள்.

பார்த்தவுடன் அவன்வந்து பாவமிந்தப் பெண்ணின்
பரிதாபக் கோலமென்ன பார்வதிநீ இவளைச்
சேர்த்தன்பாய் உணவூட்டி ஆதரித்த செய்கை
தெய்வத்தின் செயலென்றே தெளிந்துகொள வேண்டும்;

என்றுரைத்துப் பின்பந்த ஏழைப்பெண் தன்னை
இரக்கமுடன் பார்த்தம்மா இனிக்கவலை வேண்டாம்;
இன்றுமுதல் நீயென்றன் இனியயுயிர்த் தங்கை
எடுத்துவிட்டாய் புதுப்பிறப்பும் இறைவனுமைக் காப்பான்;

எக்குலத்தாய் எவர்புதல்லி எவன்மனையாள் என்னும்
இவையொன்றும் யான்கேளேன்; எங்களுடன் நீயும்
இக்கணமே ஓர்குலமாய் இணைந்துவிட்டாய் அம்மா
இனியவுன்றன் குழந்தையிவன் எங்களுயிர் கண்டாய்.

என்மனையாள் உன்மச்சாள் எந்நாளும் உம்மை
இருகண்போல் காத்திடுவாள் இப்பொழுதே நீயும்
உன்னருமைப் புதல்வனுடன் எமதில்லம் உறுவாய்
உலகினிலே அன்பினிலும் உற்றதுணை உண்டோ?

வலைபின்னிப் பறிஇழைத்து வருவாயும் பெறலாம்.
மைந்தனையும் வளர்த்திடலாம்; மாதர் சங்கத்தில்
நிலைகொண்டு நெசவுத்தொழில் நீபழகிக் கொளலாம்;
நினைவென்ன தங்கையென நெஞ்சுருகிக் கேட்டான்.

என்கணவர் ஓரேழைத் தொழிலாளி; அவரும்
திடீர்ப்புரட்சிக் கலகத்தில் இறந்துவிட்டார், எனக்கோ
முன்பேதும் பொருளில்லை, வீடுமில்லை, வீட்டு
முதலாளி எனைத்திட்டி விரட்டிவிட்டார் வெளியே.

வீடுகளில் வேலைசெய்ய இடந்தேடித் திரிந்தேன்;
வேண்டாம்நீ குழந்தையுடன் வெளியேபோ என்றார்.
பாடுபட்டுப் பிச்சையெடுத் தென்றாலும் இந்தப்
பாலகனை வளர்த்துவிட்டால் போதுமென நினைத்தேன்.

பெருஞ்செல்வர் வீடுகளில் பிச்சைக்குப் போனேன்;
பேய்,நாய்,சீ மூதேவி போடியென்று கலைத்தார்.
கருங்கல்லோ இவர்நெஞ்சம் என்றுள்ளம் கலங்கிக்
கைக்குழந்தை யுடன்பின்பு கடைவீதி சென்றேன்.

கடைவீதி தனில்நின்ற காடையர்கள் சிலபேர்,
கைக்குழந்தை யுடன்போறாள் கற்பரசி என்றார்;
உடல்பதறித் திடுக்கிட்டே உளம்நொந்து புலம்பி
ஓடிப்போய் ஓர்கடலைக் காரியுடன் நின்றேன்.

கடலைவிற்கும் பாட்டியெனைக் கருணையுடன் பார்த்துக்
களைத்துவிட்டாய்; பிள்ளையிந்தக் கைக்குழந்தை யுடனே
உடலைமறைத் துடுத்திடவும் நல்லாடை இன்றி
உந்தநகர் வீதியிலே ஏனோடி வந்தாய்?

காடையர்கள் கழிசறைகள் நிறைந்துள்ளார் உன்றன்
கட்டழகைக் கண்டாலோ விட்டுவிட மாட்டார்;
வாடிநீ என்னுடனே மகள்போலக் காத்து
வாழவழி காட்டிடுவேன் ஏனழுவான் என்றாள்.

பாட்டியுடன் கூடியவள் வீட்டினிற்குச் சென்றேன்;
பழங்காலச் சிறுகுடில்தான் பார்க்கநல்ல அழகு;
போட்டிருந்த கட்டிலின்மேல் எனையிருக்கச் சொன்னாள்;
பொன்னம்மா பொன்னம்மா என்றுகுரல் கொடுத்தாள்.

பூப்புனைந்த கூந்தலுடன் புத்தாடை அணிந்து,
புதுமணப்பெண் போலழகாய்ப் பொன்னம்மா வந்தாள்
காப்பைந்து கையொன்றில் போட்டிருந்தாள் மற்றைக்
கையினிலும் கடிகாரம் கட்டிக்கொண் டிருந்தாள்.

வயதிருபத் தைந்திருக்கும் மாநிறந்தான் ஆளும்
வட்டமுகம் கன்னங்கள் ஒட்டியுலர்ந் தவைகள்;
நியதியுடன் திருமணமும் செய்தவள்போல் இல்லை;
நிறைகழுத்தில் சங்கிலிதான் மாங்கலியம் இல்லை.

என்னையவள் கண்டவுடன் ஏமாந்து போனாள்;
ஏனம்மா இவளெவளோ எதற்காக வந்தாள்?
சின்னையாச் செல்வரவர் வருகின்ற நேரம்
திரைமறைவில் இவளைவிடு சிரித்திடுவார் கண்டால்

என்றவுடன் கிழவியென்னை எழுந்துவா மகளே!
இக்கணமே வந்திடுவார் என்னருமை மருகர்;
சென்றிந்தத் திரைமறைவில் இருந்துணவு கொண்டுன்
சிறுவனுக்கும் தீற்றிடவர் சென்றபின் நான்வருவேன்

என்றுரைத்துக் கிழவியவள் ஏகிவிட்டாள்; உடனே
எங்கிருந்தோ ஓரிளைஞன் வந்தடித்தான் கதவில்
ஒன்றுமுண ராதாள்போல் திரைக்குள்ளால் பார்த்தேன்
உவகையுடன் கைகூப்பி ஒதுங்கிநின்றாள் கிழவி.

நிற்கவினி நேரமில்லை, பொன்னம்மா என்றால்
நீகேட்ட படிநூறும் நின்கையில் தருவேன்
“அற்றனிலே” என்தோட்டம் அழைத்துப்போ கின்றேன்;
ஐந்தரைக்கே வந்திடுவாள், ஐயமில்லை சொன்னேன்

என்றவுடன் கிழவியந்த இளைஞனைக் கைகூப்பி
எனக்கொன்றும் ஐயமில்லை, இப்பொழுதே போங்கள்,
நின்றங்கு நேரத்தைப் போக்காமல் நீங்கள்
நினைவாக ஐந்தரைக்கு வந்தாலே போதும்!

பொன்னம்மா அவனுடனே போனவுடன் அந்தப்
பொல்லாத கிழவிமிக நல்லவள்போல் வந்தே
என்னம்மா உறங்குகின்றாய் எழுந்திடுவாய் இனித்தான்
இன்பமன்றித் துன்பமுனக் கில்லையடி பெண்ணே!

பொன்னம்மா என்புதல்வி அவள்'புரியன்' செல்வர்
பொன்பொன்னாய் அள்ளுகின்றான் பிள்ளையொன்றும் இல்லை
உன்னையும்நான் செல்வருக்கே கட்டிவைக்க நினைத்தேன்;
உன்னெண்ணம் என்னம்மா? உரைத்திடுவாய் என்றாள்

பொன்வேண்டாம் எனக்கிந்தப் புதுமணமும் வேண்டாம்;
போகின்றேன் நீபுரிந்த உதவியிது போதும்
என்னையுமோர் வேசையென எண்ணிவிட்டாய் நீயும்
ஏழைநான் என்றாலும் மானத்தை வில்லேன்

என்றுநான் சொல்லிமிக எரிச்சலுடன் எழுந்தேன்
ஏன்பிள்ளை போகின்றாய் இருட்டான நேரம்?
ஒன்றும்நீ சந்தேகம் கொள்ளாதே என்மேல்
உன்விருப்பம் எனக்கென்ன உறுதியுரைக் கின்றேன்.

இளமையுடன் நல்லழகும் இருக்கின்ற போது
எதற்காக நீபிச்சை எடுத்தலைய வேண்டும்?
உளமிருந்தால் ஓரிரவில் இருநூறும் உழைப்பாய்
உன்மகனை ஓரரசன் புதல்வன்போல் வளர்ப்பாய்!

உன்னழகைச் செல்வரவர் கண்டதும்தன் உயிரை
உன்மேலே வைத்திடுவார்; உவகையுடன் நல்ல
பொன்னகைகள் போட்டிடுவார்; புதுப்பட்டும் தருவார்;
பொருள்இல்லார்க் கிவ்வுலகில் இன்பமில்லைப் போடி!

கற்பழிந்து வாழ்வேனோ என்று கதைக்கின்றாய்;
காடையர்கள் உனைக்கண்டு கற்பழித்துப் போட்டால்
உற்றஇடம் இல்லாத ஊமைப் பெண்போல
ஊரெல்லாம் பழிதூற்ற உலைந்திடுவாய் சொன்னேன்.

செல்வர் தனக்குநீ வைப்பாட்டி ஆனால்
சிறப்பாக வாழ்ந்திடலாம் மறுக்காதே என்றாள்
தட்டினால் சதிசெய்வாள் என்றெண்ணி யானும்
சரியெல்லாம் உனதெண்ணம் விடியட்டும் என்றேன்.

புத்தியுள்ள பிள்ளையடி என்றென்னைப் புகழ்ந்து,
பொல்லாத கிழவியவள் போயுறங்கி விட்டாள்,
சத்தமின்றி யானெழுந்து கைக்குழந்தை யுடனே
சரிசாமம் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றேன்.

விறுவிறென்று நடந்துநான் வெள்ளவத்தை அடைய
விடிவெள்ளி காரித்து விட்டதண்ணா பின்பு
உறுதுணையார் எனக்கென்றே உளம்உடைந்து புலம்பி
ஓர்கடையின் வெளிப்புறத்தில் ஒதுங்கியுறைந் திட்டேன்.

கற்பழிந்தும் கைக்குழந்தைக் காகவுயிர் வாழ்ந்தால்
காறியுமிழ்ந் தெல்லோருங் கைக்கொட்டிச் சிரிப்பார்;
மற்றிந்தக் குழந்தைக்கும் மரியாதை இல்லை;
வழிவழியாய் வேசைமகன் என்றுலகோர் வைவார்.

கைக்குழந்தை யுடன்நானும் கடலில்வீழ்ந் திறந்தால்,
கற்பினுக்கும் பழுதிலையென் கணவனுக்கும் பெருமை
தக்கவழி எனக்கிதுதான் தலைவிதியும் என்று
தன்மானத் துடிப்பினுடன் கடற்கரையைச் சார்ந்தேன்.

கடலலையைப் பார்த்த வண்ணம் கண்களில்நீர் சொரியக்
கைக்குழந்தை தனையணைத்து முத்தமொன்று கொடுத்தேன்.
உடல்முழுதும் புத்துணர்ச்சி ஊற்றெழுந்து பாய,
உளங்கனிந்த, தாயன்பால் உறுதியழிந் திட்டேன்.

என்மகனே! இனிக்கொல்லேன், இனிக்கொல்லேன் உன்னை;
இவ்வுலகில் நானுனக்காய் இருந்திடத்தான் வேண்டும்;
உன்னருமைத் தந்தையின்மேல் ஆணையிட்டுச் சொன்னேன்;
உய்யவழி காட்டுமினித் தெய்வமெனக் கொண்டேன்.

என்னுளத்தில் என்றுமிலா இன்பமுடன் நானும்
என்னருமைக் குழந்தையினை ஏந்திநின்ற போது,
மன்னர்குல மக்களைப்போல் வந்தயலில் நின்ற,
மனமொத்த காதலரைக் கண்டுள்ளம் மகிழ்ந்தேன்.

காலையுண வின்றியழும் கைக்குழந்தைக் கேதும்
கருணைபுரிந் தருளுமெனக் கைகூப்பிக் கேட்டேன்.
வேலையுனக் கிதுதானே? என்றென்னை வெருட்டி
மிக்கிருந்த சிற்றுணவை வீசிவிட்டார் கடலில்.

கைக்குழந்தை என்றேனும் கருணையின்றி அந்தக்
காதலர்கள் செய்தசெயல் கண்டதும்நான், ‘ஐயோ!
இக்குழந்தை வாழவழி இல்லை’யென ஏங்கி
இடிவிழுந்த மரம்போல அறிவழிந்து வீழ்ந்தேன்.

கைக்குழந்தை உடனிந்தக் கடற்கரையில் வீழ்ந்து,
கருத்தழிந்து கிடந்தஎன்னைக் கருணையுடன் தூக்கி,
நெக்குருகி உணவூட்டி நேசமுடன் காத்த
நின்மனையாள் தானண்ணா இன்னருளார் தெய்வம்.

அலைகடலில் படகோட்டி அலைந்துவரும் உங்கள்
அரும்பசிக்குக் கொண்டுவரும் விருந்துணவை எல்லாம்
உலையாத பேரன்பால் எமக்கூட்டும் போதும்
உங்கள்மனை யாள்சிறிதும் அஞ்சவில்லை அண்ணா.

படகோட்டி வந்தபெரும் பசியோடு நின்றும்
பாவியெனைக் கண்டவுடன் ஆவிதுடித் தன்பால்
உடலோடும் உயிரோடும் உடனாகி நிற்கும்
ஓர்தெய்வம் போலென்னை உவக்கின்றாய் அண்ணா.

தண்கொண்டல் தரும்மழைபோல் தண்ணளியால் என்னைத்
தங்கையென ஆதரித்தே தாங்குகின்ற உம்மைக்
கண்கண்ட கடவுளெனத் தொழுகின்றேன் அண்ணா
காத்தருள்வாய் என்றவனின் காலடியில் வீழ்ந்தாள்.

*தினகரன் வாரமஞ்சரி - (23 ஜனவரி 1966 - 19 பெப்ரவரி 1966)*

# காதற் கலைவாழ்வினில்...

## 1

மாலைமணி ஏழிருக்கும் மாதவியும் சந்திரனும்
காலையில் வந்த கலைக்கதிரைப் பார்த்தார்கள்
செந்தமிழில் எல்லாச் சிறந்த கலைகளையும்
தந்திடலாம் என்பதற்கோர் சான்றாகும் இந்தக்
கலைக்கதிரில் வந்துள்ள கட்டுரைகள் என்று
கலைப்புலவன் சந்திரனும் மாதவிக்குக் காட்டினான்.
மாதவியும் சந்திரனின் வண்ணமுகம் நோக்கிக்
காதலரே! நீங்கள் கலைக்கதிரில் கட்டுரைகள்
ஆவலுடன் தீட்டி அருந்தமிழைக் காத்திடுவீர்
மூவர் முடிவேந்தர் முன்வளர்த்த தென்றாலும்
புத்தம் புதுக்கலைகள் முத்தமிழில் இல்லையென்று
நித்தம் புலம்பி நிலைதளர்வோர் நாணடைய
ஆராய்ந்து நீங்கள் அறிந்தஅணு ஆற்றலுடன்
சீரார்மின் ஆற்றலையும் செந்தமிழில் தீட்டிடுவீர்
ஓராயிரம் வணக்கம் உங்களுக்கென்றுரைத்தாள்.
அஞ்சொற் கிளியே அழியாத ஓவியமே
செஞ்சொற் புலவர் சிந்தைவளர் கற்பகமே
செந்தமிழ் வாழச் செயலாற்றும் வண்ணம்நீ
சிந்தனை செய்தெனக்குச் செப்பும் பொருளுரைகள்
அத்தனையும் ஏற்றேன் அறிஞரெலாம் பாராட்டும்
புத்தம் புதிய கலைநூற் பொருளார்ந்த
கட்டுரைகள் எல்லாம் கலைக்கதிரில் தீட்டுகின்றேன்
மட்டில்லா இன்பமுடன் மானேநீ கற்றிடுவாய்
மாதவி எனும் மயிலினுக்கு நானளிக்கும்
காதல் பரிசில் கலையாக்க கட்டுரைகள்
என்றெண்ணி எண்ணி இதயம் தளிர்க்கின்றேன்

நன்றென் தவமென்றான் நம்பியுயர் சந்திரனும்.
இஞ்ஞாலம் போற்றும் இணையில் பெருந்தலைவன்
விஞ்ஞானப் பேராசான் வெற்றிமிகு சந்திரனின்
காதற் கலைச்செல்வி கற்பகப்பூங் கொம்பனையாள்
மாதவியென்னும் வளர்செல்வக் குலக் கொடியும்
கற்றவர் போற்றும் கலையாக்க கட்டுரைகள்
பெற்றிடுவேன் என்றெண்ணிப் பேருவகை கொண்டிருந்தாள்.

## 2

செல்வம் படைத்த சிதம்பரனார் தம்மனைவி
நல்லம்மா என்னும் நங்கையுடன் வீற்றிருந்து
மாத முடிவில் வருமானப் பேறெல்லாம்
காதலுடன் கூறிக் களித்துள்ளம் செம்மாந்தார்
வெள்ளவத்தை தன்னிலெங்கள் வீடுகளின் வாடகையாய்
உள்ள பணம் மட்டும் ஓராயிரமாகும்
கோட்டைக் கடைகளுடன் கொல்பிற்றி மேல்மாடம்
நாட்டுப் புறக்கடைகள் நாற்பதுகிட் டங்கிகளில்
நான்பெற்ற வாடகைதான் நாலாயிரம் ரூபா
தேன்சொட்டும் சொல்லுடையாய் இன்னும்கேள் செப்புகின்றேன்.
தேயிலை றப்பருடன் தென்னைகறுவா இவற்றால்
ஆய வருமானம் ஐந்திலட்சத் தைந்நூறே
ஓடும் படப்பங்கில் ஓரிலட்சம் இம்மாதம்
காடு திருத்தியதால் கண்டநயம் நாலிலட்சம்
செட்டித் தெருவில் இரண்டு கிழமைகளில்
வட்டிப் பணமாக வந்ததொகை எண்ணூறு
வாடகைக் காராலும் மன்னார் லொறியாலும்
பீடித் தொழிலாலும் பெற்றநயம் ஓரிலட்சம்
மங்கையே நான்வரு மான வரியாக
எங்கள் கணக்கினிலே இம்மாதம் ஈந்தொகை

ஐம்பதி னாயிரத் தைந்நூற் றறுபதென்றால்
எம்போலச் செல்வர் இலங்கையிலே யாருள்ளார்.
செந்திரு போலெங்கள் செய்தவத்தால் மாதவியும்
வந்து பிறந்தபின்பே வந்ததிந்தச் செல்வமெலாம்
அன்புப் புதல்வியென் ஆவிநிகர் மாதவிக்கே
இன்பம் நிழலாடும் இந்திரச் செல்வமெலாம்
அள்ளிக் கொடுத்தென்போல் ஆயிரம் ஆயிரமாய்
கொள்ளை நிதிபடைத்த கோமானுக்கே ஈந்திடுவேன்
என்ன உனதெண்ணம் என்றுநல் லாம்மாவின்
கன்னத்தில் கிள்ளிக் கதைத்தார் சிதம்பரனார்.
சிந்தைக் கினியதன் செல்வத் தலைவரின்
கொஞ்சு மொழிகேட்ட கோமகள் நல்லம்மா
கட்டலர்ந்த பொன்மலர்போல் காட்சிதரும் மாதவியும்
பட்டம் பெறவே படிக்கின்றாள் ஊக்கமுடன்
பல்கலைகள் வல்லவளாய்ப் பட்டங்கள் பெற்றபின்பு
நல்ல திருமணத்தை நாம்கண் டுளம்மகிழ்வோம்
இன்னும் வயதிவட்கோ ஏழிரண்டும் ஆகவில்லை
என்ன அவதி இருக்கட்டும் என்றுரைத்தாள்.
ஆர்வமுடனிருந்த அன்னையும் தந்தையும்
காரின் ஒலிகேட்டுக் காதலுடன் பார்த்தார்கள்
மாதவியும் வந்து மலர்மகள் போல் நின்றாள்
ஓத முடியாத உள்ளக் கிளர்ச்சியுடன்
அப்பா எனக்கூவி ஆனந்தக் கூத்தாடி
ஒப்புயர்வே இல்லாத உச்ச உவகையளாய்க்
கற்றவர்கள் போற்றும் கலையாக்கப் பேராசான்
கொற்றவன் சந்திரன் தன்கூர்த்த மதியாலே
ஆராய்ந்து தீட்டும் அணுவாற்றல் கட்டுரையில்
ஓரா யிரம்படிகள் உங்கள் முகவரிக்கு
இன்றே வரவிடுக்க என்றுடனே ஓர்தந்தி
என்றன் பொருட்டாக இப்பொழுதே நீங்கள்
கலைக்கதிர் ஆசாற்குக் கட்டாயம் போக்கி

விலைப் பணத்தைக் கட்டிவிடுங்கள் விரைந்தென்று
வேண்டினாள் மாதவியும் மிக்கவியப் போடுதந்தை
ஆண்டு கலைக்கதிரின் ஆசானுக் கோர்தந்தி
போக்கினார் மாதவியும் பொங்கும் பெருமகிழ்வாய்
பாக்கள் பலபாடிப் பைங்கிளியை முத்தமிட்டாள்.

## 3

செல்வர் சிதம்பரரும் செல்லையாச் சோதிடரும்
நல்ல திறங்காரில் கொழும்புநகர் சென்றார்கள்
கோட்டைத் தெருவில் கொடிகள் பறப்பதையும்
கூட்டம் பெருங்கூட்டம் என்றுமக்கள் கூறிமிக
ஓட்டமும் நடையுமாய் ஊக்கமுடன் செல்வதையும்
நாட்டின் நலம்பெருகும் நன்மையினி நன்மைஎன்று
தீட்டும் தமிழ்மடல்கள் திக்கெல்லாம் காண்பதையும்
வாட்டம் இனிநீங்கும் வாழ்க தமிழரென்று
காலி முகவெளியில் காணுங் கடல்போல
நாலிலட்சம் மக்கள் நலங்கூறி ஆர்ப்பதையும்
வெற்றி முழக்கமுடன் வெள்ளவத்தை வீதிவழி
உற்ற தமிழ்மக்கள் ஓர்பதி னாயிரம்பேர்
கொற்றமுடன் சூழ்ந்து குடைகொடி ஆலவட்டம்
வெற்றிலைத் தட்டம் விளக்கு நிறைகுடங்கள்
எல்லாம் உவகையுடன் ஏந்தியே ஊர்வலமாய்
எல்லாளன் போல்வான் எங்கள் பெருந்தலைவன்
வல்லாளன் ஸ்ரீதேவன் வாழ்க தமிழ்வாழ்க
பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு,
செந்தமிழ் வேறென்றும் சிங்களவர் வேறென்றும்
இந்த இலங்கையிலே இன்றெழுந்த பூசல்எல்லாம்
வெந்து பொடியாக மேன்மை நெறிகாட்டித்
தந்தைபோற் காத்தருளும் தண்ணளியான் ஸ்ரீதேவன்

என்று மிகப்பாராட்டி ஏகும் எழுச்சியையும்
நின்று நெடுநேரம் பார்த்தார் சிதம்பரனார்.
பார்த்த சிதம்பரனார் பக்கத்தில் வீற்றிருந்த
சீர்த்திமிகு சோதிடர்செல் லையாதனை நோக்கித்
தேர்தலுக்கு நிற்கின்ற ஸ்ரீதேவன் யார்காணும்
ஊர்அறிந்த பார்ப்பான்நீர் உள்ளபடி சொல்லுமென்றார்.
நல்லாய்த் தெரியவில்லை நல்லூரில் முன்னிருந்த
வல்லிபுர மாப்பாணர் வம்சம்என் றெண்ணுகிறேன்
செல்வம் படைத்தஇவர் சீமையிலே போயிருந்து
கல்விகற்றுத் தேர்ந்தவர் என்று கதைக்கிறார்கள்.
எல்லையில்லாச் செல்வர் இவரென் பதைஎங்கள்
நல்லையா நீதவான் சொல்லநான் கேட்டுள்ளேன்
பாட்டன் வழிமுதிசம் பத்துக்கோடிக் கணக்காம்
கேட்டால் திகைப்பீர்கள் கீழ்மாகா ணந்தனில்
தென்னை வருமானம் செப்பலாம் முக்கோடி
இன்னும் உரைப்பானேன் இங்கிலாந்தில் வீடுமுண்டு
நாட்டின் நலங்கருதி நன்றாய் உழைத்திடுவார்
கூட்டத்தில் சென்றவரின் கொள்கைகளைக் கேட்டிடுவோம்
வாருங்கள் என்று வழுத்தினார் சோதிடரும்.
காரிங்கே நிற்கட்டும் கால்நடையாய்ச் சென்றிடுவோம்
சிற்றெறும்பும் செல்ல முடியாமல் தெருவெல்லாம்
உற்ற சனத்திரளை ஓராண்டு சென்றாலும்
கற்றுவல்ல சோதிடரே காரோ கடக்காது
பெற்ற செல்வம் போல்புகழும் பெற்றுவிட்டான் ஸ்ரீதேவன்
மற்றவனின் பேச்சையும் நாம்கேட்டு மகிழ்ந்திடுவோம்
சற்றுமுன் போயென்று சார்ந்தார் சிதம்பரனார்.
சோதிடரும் தன்சூழ்ச்சி தோல்வியுற வில்லையெனும்
மாதிடத்தால் உள்ளம் மகிழ்ந்தவ ரோடுசென்றார்.

## 4

கண்ணைப் பறிக்கும் கவினார்ந்த மேடையின்மேல்
விண்ணரசன் என்றுரைக்க வீற்றிருந்த ஸ்ரீதேவன்
மாலைகளால் வேய்ந்த மலைபோல் எழுந்துநின்று
கோலமலர்க் கைகூப்பிக் கும்பிட்டுக் கூறுகின்றான்.
அன்புசால் அன்னையரே தந்தையரே ஆர்வமுடன்
இன்பத் தமிழ்வாழ இன்றுழைக்கும் செல்விகளே
தன்மானங் கொண்டெழுந்து தண்ணார் தமிழுக்கெங்கள்
இன்னுயிரும் ஈன்றிடுவோம் என்னும் இளைஞர்களே
எல்லோர்க்கும் என்வணக்கம் இன்றடைந்தோம் நல்வாழ்வு
இல்லை யெமக்கின்னலினி எங்கோனருள் வாழ்க
தன்னலத்தில் கண்ணான தலைவர் சிலராலே
இன்னலுற்ற உங்கள்நிலை எண்ணி இரங்குகின்றேன்
ஈழவள நாட்டில் எல்லாளன் காலமுதல்
வாழவழி காட்டி வாழ்ந்தோர் தமிழரெனும்
உண்மைநிலை தன்னை உலகமெலாம் நன்குணரும்
அண்மையிலே எங்கள் அருமைப் பெருந் தலைவன்
பொன்ராம நாதன் புகழ்பரப்பிச் சிங்களவர்
மன்ராமன் என்றேத்த வாழ்ந்தநிலை பொய்யாமோ
சிங்களமே ஆட்சிமொழி செந்தமிழுக்கில்லை இடம்
எங்கள்தாய் நாடிலங்கை இந்தியரை ஓட்டிடுவோம்
என்றெழுந்தோர் கட்சி இனப்புரட்சிச் சங்கூதி
அன்புநெறிச் சிங்களவர்க்கு ஆட்சிவெறி ஊட்டியதால்
சிங்களவர் தீயரந்தோ செந்தமிழைத் தின்கின்றார்
பொங்கி எழுந்திடுவீர் போர்முரசு கொட்டிடுவீர்
உங்களுயிர்ச் செந்தமிழை ஓம்பிடுவீர் என்றுரைத்தே
எங்கள் தமிழரும் ஈந்தார் இனத்துடிப்பை
ஆட்சி வெறியாளர் ஆக்கும் இனத்துடிப்பால்
மாட்சிநெறி மாறி வகுப்புவெறி மூண்டதுவே

நன்றி உணர்ச்சிகொண்டு நாளும் தமிழருடன்
ஒன்றுபட்டு வாழ்ந்த உரிமைமிகு சிங்களவர்
துண்டுபட்டு நின்று தொடுக்கின்றார் போரந்தோ.
“ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும்”
என்ற முதுமொழிபோல் இன்றுநாம் வாழ்கின்றாம்
நன்றறியாத் தீயோர்கள் நாட்டைக் கெடுத்துவிட்டார்
சொந்த மனைக்குத் துணிந்து தீமூட்டிவிட்டார்
இந்த நிலைமாறி இலங்கையிலே எல்லோரும்
அன்புநெறி கொண்டுரிமை ஆரவழி காண்பதற்கே
இன்றுங்கள் முன்னிலையில் இச்சிறியேன் நிற்கின்றேன்
ஈழவள நாட்டில் இனப்புரட்சி என்றவுடன்
மீளாத்துயர் கொண்டு விட்டுவந்தேன் இங்கிலாந்தை
ஈட்டும் பெரும்செல்வம் எத்தனையோ கோடியுண்டு
நாட்டின் நலத்திற்காய் நானவற்றை ஈந்திடுவேன்
செல்வச் செருக்கால் என்தெய்வத் திருநாட்டில்
அல்லலை மாற்ற அறியா தயர்ந்துவிட்டேன்
மேல்நாட்டு வாழ்வை வெறுத்தேன் இனிஎங்கள்
தாய்நாட்டிற்காய் உழைக்கச் சத்தியம் செய்துவிட்டேன்
பாராளு மன்றத்தில் சென்றே எனதன்பர்
சீராரும் சிங்களச் செல்வருடன் சேர்ந்துநான்
சிங்களமும் செந்தமிழும் சேர்ந்துயரச் செய்திடுவேன்
உங்களின் ஆதரவை உண்மையுடன் வேண்டுகின்றேன்
தொல்லைதரும் கட்சியெனச் சுயேச்சை யாய்நின்றேன்
எல்லோரும் என்முடிவை ஏற்பீர்என் றெண்ணுகின்றேன்
வெள்ளவத்தை மக்களென்னை வெற்றிபெறச் செய்வார்கள்
தெள்ளுந் தமிழ்மொழியும் சிங்களம்போல் வாழ்ந்துயரும்
கள்ளங் கபடம்இன்றி என்கருத்தைச் சொல்லிவிட்டேன்
அள்ளும் பேரன்பர் அனைவோர்க்கும் என்வணக்கம்.
செந்தமிழர் எல்லோரும் ஸ்ரீதேவன் சொற்பொழிவால்
சிந்தை மகிழ்ந்து சிறந்தார்கள் அப்பொழுது
மார்க்கண்டு வந்து வணக்கமுடன் கூறுகின்றான்

கார்க்கொண்டல் போற்பேசுங் கண்ணியவான் ஸ்ரீதேவன்
ஈழத்தில் வந்தபின்பு ஈந்த தருமமெல்லாம்
தோழர்க ளேயானும் சொல்லுகின்றேன் கேளுங்கள்
ஆலயங்கள் கட்டமட்டும் ஐந்திலட்சம் அன்றளித்தார்
பாலர் விடுதிக்குப் பத்தாயிரங் கொடுத்தார்
கண்ணில்லார்க் காகக் கருணையினால் ஈந்ததொகை
எண்ணா யிரமாகும் இன்னுங் கொடுப்பாராம்
ஆதர வற்ற அநாதைக் குழந்தைகட்காய்
ஏதும் தடைஇன்றி எண்பதினாயிரம் ஈந்தார்
நூல்நிலையம் ஒன்றிற்கும் நூறுபவுண் ஈந்துள்ளார்
கால்நடைகள் நீருண்ண ஐந்துகுளம் கட்டிவிட்டார்
தள்ளா முதியோர்க்காய்த் தந்ததொகை ஓரிலட்சம்
வெள்ளப் பெருக்கினால் வீடழிந்தோர்க் கோரிலட்சம்
இன்னும் பலதருமம் ஈந்துள்ளார் நானவற்றை
சொன்னால் அவர்வெறுப்பார் தொண்டுசெயத் தோன்றியவர்
என்றுசொல்லி மார்க்கண்டும் ஏகியபின் வேறுபலர்
நன்றுபுரி ஸ்ரீதேவன் நல்லிசையைச் சொன்னார்கள்.
செல்வர் சிதம்பரனார் ஸ்ரீதேவன் சொற்பொழிவை
எல்லையில்லா இன்பமுடன் கேட்டே உளம்செழித்தார்
வல்லமையுடன் செல்வமுளான் மந்திரியாய் வந்திடுவான்
சொல்லுங்காண் சோதிடரே சும்மாய் இருக்கின்றீர்
என்று சிதம்பரனார் கேட்டார் எழுச்சியுடன்
நன்றாகப் பேசினார் நாளைக்குப் பின்னேரம்
சென்றவரைக் கண்டுங்கள் செல்வச் சிறப்பெல்லாம்
ஒன்றும் ஒளியாமல் உள்ளபடி சொல்லுகின்றேன்
உங்கள் பெருமதிப்பை ஓதிநான் வந்தபின்பு
அங்கவரைக் கண்டுங்கள் ஆதரவைக் கூறிடலாம்
இங்கினி ஏன்நிற்பான் ஏகிடுவோம் காரிலென்று
தங்கும் உவகையுடன் சாற்றினார் சோதிடரும்.
நல்லதிந்த யோசனைநீர் நாளைக்குப் போய்வாரும்
உள்ளபடி நீயோர் உலகறிந்த வீரன்காண்

ஏறி யிருங்காரில் எட்டரைக்கு மேலேன்று
கூறிச் சிதம்பரனார் கோமகன்போற் காரெடுத்தார்

## ௫

சீராரும் சந்திரன் திங்கள் கலைக்கதிர்
ஆராய்ந்து தீட்டும் அணுஆற்றல் கட்டுரையைக்
கற்ற கலைஞரெல்லாம் கன்னித்தமிழ் காக்க
உற்றதெனக்கூறி உவகை அடைந்தார்கள்
இன்பத் தமிழில் இதுபோலக் கட்டுரைகள்
முன்புநான் கண்டதில்லை என்றோர் முதுகலைஞர்
சந்திரனைப் பாராட்டித் தந்தி அடித்திருந்தார்
செந்தமிழ் நாட்டுச் சிறந்த புலவரெலாம்
இந்தக் கலைப்பணிக்கோர் ஈடில்லை இல்லையென்று
சந்திரனை ஊக்கித் தகுதியுரை தந்தார்கள்
கலைக்கதிர் ஆசிரியர் கட்டுரைகள் தீட்டிக்
கலைப்பணி ஆற்றக் கன்னித்தமிழ் வாழும்
என்றோர் கடிதமுடன் எண்ணூறு ரூபாவும்
அன்புடனே சந்திரனுக் கன்பளிப்புச் செய்தார்.
பாராட் டுரைகளுடன் பண்பார் பரிசிலையும்
ஆராமை யோடேற்று அண்ணலுயர் சந்திரனும்
மாதவியால் அன்றே மதிப்பெனக்கு வந்ததெனும்
காதலினால் உள்ளம் களித்துக் கதிர்வீச
வண்ண மலர்ச்செண்டொன்றும் வாங்கி மலர்ச்சியுடன்
விண்ணரசன் போல விரைந்து வழிக்கொண்டான்.
வழிமேல் விழிவைத்து வாசலிலே நின்ற
கிளிமொழியாள் மாதவியும் கேண்மையுடன் வந்தகலைச்
சந்திரனைக் கண்டவுடன் தன்னைமறந் தோடிப்போய்
வந்துவிட்டார் அம்மா வரவேற்பாய் என்றுரைத்தாள்.
வாருங்கள் வாருங்கள் உங்கள் வரவுக்காய்ப்

பாருங்கள் மாதவி பல்லாண்டு பாடுகின்றாள்
ஆராய்ந்த உங்கள் அணுஆற்றல் கட்டுரையில்
ஓராயிரம் படிகள் ஊக்கமுடன் பெற்றுவிட்டாள்
தந்தியிலே காசனுப்பி தம்முடைய பெயருக்கே
இந்தக் கிழமைதான் அப்பா எடுப்பித்தார்
வந்த கலைக்கதிரை வாரி எடுத்துப்போய்ச்
சொந்தச் செலவில் தோழிமார்க் கனுப்புகின்றாள்
செந்தமிழ்த் தொண்டிதுவே என்றெமக்குச் செப்புகின்றாள்
உங்களைப் போல் தானும்ஓர்முறையில் எம்.எஸ்.சி
இங்கே எடுத்துவிட்டு இங்கிலாந்தில் போயங்கே
கற்றுக் கலைப்புலமைப் பட்டமும் பெற்றுவந்தே
உற்ற தமிழ்வாழ உழைத்திடுவேன் என்கின்றாள்
அப்பாவோ என்றால் அடுத்த வருடத்தில்
செய்யலாம் கல்யாணம் என்று சிந்திக்கின்றார்
உள்ள தொருபிள்ளை ஊராளும் செல்வமுண்டு
கல்வியினிப் போதும் கலைப்புலமைப் பட்டமேன்
கற்றிடும் கல்விவிற்றுக் கால்வயிற்றுக்காய் வாழப்
பெற்றோனோ நான்பிள்ளை பேதைக் குழந்தையவள்
உற்றபுத்தி சொல்லியவள் உள்ளத்தை மாற்றென்று
செற்றமுடன் அப்பாவும் செப்புகின்றார் எப்பொழுதும்,
செல்வம் நிலையாது தீயவரும் வைத்திருப்பார்
கல்வியினால் அன்பும் கடவுள் நிலைபெறலாம்
அல்லற்ப டுவாரை ஆதரித்துக் காத்திடலாம்
செல்வப் பொருளையும் சுமையின்றித் தேடிடலாம்
அப்பா விடம்என் ஆசையெல்லாம் நீசொல்லி
எப்படியும் இங்கிலாந்திற் கென்னைவிடச் செய்யம்மா
என்றென்னை எப்பொழுதும் ஏக்கமுடன் கேட்கின்றாள்
ஒன்றும் தெரியாமல் உள்ளம் உடைகின்றேன்
அப்பாவின் சொல்லைமிஞ்சி ஆரென்ன செய்திடலாம்
தெய்வச் செயலென்றே சிந்தித் திருக்கின்றேன்
உங்கள் கருத்தை உரைத்திடுங்கள் தம்பியென்று

நங்கையுயர் நல்லம்மா கேட்குமந்த நேரத்தில்,
புள்ளிமான் போலப் புதிய எழுச்சியுடன்
வெள்ளித் திரைவீசும் வெண்மை நிறத்தட்டில்
அள்ளுசுவைச் சிற்றுண்டி ஆனந்தமாய்க் கொண்டு
கிள்ளைமொழி மாதவியும் கேண்மைநிலை காட்டிவந்தாள்.
வந்த மகளின் மலர்முகத்தில் நின்றாடும்
சிந்தை அடிச்சுவட்டைத் தேர்ந்த நல்லம்மாதன்
உள்ளந் திடுக்குற்றுணர்ச்சி வசம் அற்றுவிட்டாள்
வெள்ளம்போல் காதல் வெளித்தோன்ற மாதவியும்
வள்ளலுயர் சந்திரனை மன்றாடி உண்பித்தாள்
சந்திரனும் தன்னை மறந்த உவகையுடன்
இந்திர போகத்தில் இருப்பாரைப் போலிருந்தான்
கூட்டத்தில் நின்றுவந்த கோமான் சிதம்பரனார்
வீட்டிற்குள் சென்றார் விறாந்தையுள் மாதவியும்
சிற்றுண்டி யொன்றைச் சிரித்த முகத்துடன்
பற்றுமிகப் பாடுபட்டுச் சந்திரனின் வாய்க்குள்
தீற்றுவதைக் கண்டார் செயலற்று நின்றுவிட்டார்
காற்றைப்போல் சந்திரனும் காரேறிச் சென்றுவிட்டான்.

௬

கூட்டத்தில் நின்று மிகக்குதூ கலமாய்த்தன்
வீட்டிற்குச் சென்ற விரிந்தபுகழ்ச் சோதிடர்
செல்லையா மற்றைநாள் சிந்தையிலே தேனூற
நல்லையா நீதவான் நண்பரைப் போய்க்கண்டார்.
செல்லையா வாருமென்ன செய்தியெங்கள் திட்டமெல்லாம்
வெல்லும் வகையுண்டோ சொல்லுமென்றார் நீதவான்.
நல்லபடம் போட்டீர்கள் நானும் அதைமுடித்தேன்
செல்வர் சிதம்பரனார் ஸ்ரீதேவன் பேச்சினிலும்
எல்லையில்லாச் செல்வனவன் என்று சொன்னதிலும்
நல்லாய் மயங்கிவிட்டார் நாளைக்குப் பின்னேரம்

செல்வர் சிதம்பரரைச் ஸ்ரீதேவன் வீட்டிற்குக்
கூட்டிச்செல எண்ணங் கொண்டுள்ளேன் நீங்களினிப்
போட்டுத் தருந்திட்டம் என்ன புகலுங்கள்
திட்டப்படியே செயலாற்றி வெல்வ தென்தன்
கெட்டித் தனமென்றார் கேண்மைமிகு சோதிடரும்.
செல்லையா இங்கேவா செப்புவதை நன்றாய்க்கேள்
எல்லையில்லா வீரன்நீ என்றாலும் இச்செயலில்
நல்லாக யோசித்தே நாம்நடக்க வேண்டுமப்பா
செல்வர் சிதம்பரனார் ஸ்ரீதேவ னைக்கண்டால்
எல்லாம் பிழைத்துப்போம் எங்களுக்குத் தொல்லைவரும்
கூத்தியும் சூதும் குடியுமாய் எப்பொழுதும்
நாத்திகன் ஸ்ரீதேவன் நாட்டியம் ஆடுகின்றான்
கூட்டத்தில் பேசுகையில் மட்டும் குடியாதே
நாட்டில் மதியார்கள் என்றவனை நான் தடுத்தேன்
நல்ல அழகன் நயம்படப் பேசுகின்றான்
வல்லவன் ஸ்ரீதேவன் மானமுளான் என்றெல்லாம்
எண்ணுகின்றார் எல்லாரும், என்னையச் ஸ்ரீதேவன்
உண்மையுள்ளார் என்றே உணரும்படி நானும்,
கண்ணியவான் ஸ்ரீதேவன் கற்றறிந்த சீராளன்
எண்ணுங்கள் எங்கள் தலைவன் இவனென்றெ
ஐந்தாறு துண்டிதழ்கள் ஆதரவாய் விட்டிங்கே
நைந்தாடும் மக்களுக்கோர் நம்பிக்கை ஊட்டிவிட்டேன்.
செந்தமிழர்க் குற்றஇன்னல் தீர்த்திடுவான் ஸ்ரீதேவன்
தந்தையினும் தண்ணளியான் சான்றோன் பெருஞ்செல்வன்
என்னுமென் சொல்லால் எழுந்தார் தமிழரெலாம்
மன்னுபுகழ் நீதவான் வாய்மையுளார் என்றுமக்கள்
என்னை மதித்ததனால் ஏற்பட்ட ஆதரவால்
தன்னைநிகர் தலைவன் தானானான் ஸ்ரீதேவன்
செந்தமிழால் ஸ்ரீதேவன் செய்தநல்ல சொற்பொழிவை
என்தன் உரைப்படி ஈசுவரன் பண்டிதர்தான்
பன்னிரெண்டு நாட்களோர் பாடமாய்ச் சொல்லிவைத்தார்

அன்னை மொழியிலவன் ஆற்றலுடன் பேசியதைச்
சென்னைத் தினசரியும் தீட்டியது பாராட்டி
இன்னுஞ் சிலநாளில் எல்லாம் பறந்துவிடும்
பொய்யனந்தச் ஸ்ரீதேவன் போக்கிரி என்றுமக்கள்
வையும்நாள் அண்மையிலே வந்துவிடும் வந்துவிடும்
ஐயம் இதற்கில்லை ஆதாரம் காட்டுகின்றேன்
கைமேற் பலன்நீர் கவனமாய்க் கேளுமிதை.
இங்கிலாந்தில் ஸ்ரீதேவன் இன்பமாய் வாழ்ந்ததுண்மை
அங்கிருந்து கொண்டவனும் ஆயிரம் ஆயிரமாய்
இங்கிருந்த செல்வமெல்லாம் என்கணக்கில் பெற்றுவிட்டான்
நம்பியான் ஈந்ததொகை நாற்பது லட்சமப்பா
தம்பியிவர் நன்றாகத் தண்ணியும் போட்டதினால்
உள்ள பொருளெல்லாம் ஓடத் தொடங்கியது
வெள்ளை நிறப்பெண்ணை விரும்பி மணஞ்செய்து
கொள்ளை நிதியவட்கே அள்ளிக்கொடுத்து வந்தார்
கள்ளமனத் தோடவளும் காசெல்லாம் வாரிவிட்டாள்
பிள்ளைகள் மூன்றுமவள் பெற்றாள் இதற்கிடையில்
வெள்ளமாய் உள்ளசெல்வம் மெல்லச் சுருங்குவதையும்
தண்ணிக் கவர்தன்னைச் சல்லிதா என்பதையும்
எண்ணி அவளுடனே இன்னொரு வெள்ளையனைக்
கள்ளநட் பாய்க்கொண்டு கனடாவுக் கோடிவிட்டாள்
பிள்ளைகளும் தாயுடனே போய்விட்டார் பின்பெங்கள்
கள்ளனிந்தச் ஸ்ரீதேவன் கண்ணீர் வடித்தவண்ணம்
உள்ளதொரு வீடதனை ஒன்பது லட்சமாய்
விற்றுடனே இங்கிலாந்தை விட்டிங்கு வந்துவிட்டான்
பெற்றஎன் காசெல்லாம் பின்பு தருவேனென்றான்
நல்லாக யோசித்து நானொரு சூழ்ச்சி செய்தேன்
மெல்ல அவனுக்கென் வீட்டில் விருந்தென்று
சொல்லி அழைத்துத் தொடர்ச்சியாய் ஐந்துநாள்
நல்லாய் உணவளித்து நாளொன்றும் நீங்காமல்
சீமைக் குடிவகைகள் தேடிக் கொடுத்தவனை

ஊமை வெறியாக்கி உள்வீட்டுப் பிள்ளைபோல்
கிட்டியவன் என்னுடனே கேண்மை கொளச்செய்து
தட்டி முதுகினிலே தம்பியென் ஸ்ரீதேவா
இந்த இலங்கையிலே உள்ளவுன் தோட்டமொன்றைச்
சொந்தமாய்த் தாஎனக்கு சொன்ன விலைதருவேன்
என்றுநான் கேட்டேன் எழுதுகோல் தாவென்றான்
ஒன்றும் உரையாமல் நானுரைத்த மூன்றிடத்தில்
கையெழுத்து வைத்தான் கடகட என்றுநான்
பொய்உறுதி யொன்றைப் புனைந்தவன் தோட்டமெல்லாம்
மெய்யறுதி யாய்எனக்கே விற்றுவிட்ட மாதிரியாய்
போட்டுவைத்த பத்திரத்தில் போடுவித்தே கையெழுத்தை
மாட்டிவிட்டேன் நானவனை மற்றிந்தச் சூழ்ச்சிகளை
நாட்டிலுள்ளோர் காணாமல் நல்லதொரு சூழ்ச்சியாய்
தேர்தலுக்கு நிற்கவைத்தேன் ஸ்ரீதேவன் தன்னையான்
ஆர்என்போல் சூழ்ச்சிவல்லார் அன்பரே நீர்சொல்லும்
நாற்பது லட்சமாய் நான்முன் கொடுத்தகடன்
நாற்பது கோடியாய் நண்ணியதைக் கண்டீரோ
தேர்தலுக்கு நிற்கின்ற ஸ்ரீதேவன் ஓரிமைப்பில்
வாரி இறைத்திடுவான் வைத்திருக்கும் காசெல்லாம்
ஒன்பது லட்சமும் ஓடியபின் ஸ்ரீதேவன்
மன்பெரும் நண்புடனே வந்தென்னைப் பாராட்டி
ஐந்திலட்சம் தந்தென்னை ஆதரவு செய்யுங்கள்
தந்திடுவேன் தோட்டமென்று தஞ்சம் புகுமுன்னர்
செல்வர் சிதம்பரனார் ஸ்ரீதேவன் கேட்டதெல்லாம்
நல்கும் வகைசூழ்ச்சி நான்செய்யப் போகின்றேன்
மற்றப் புதன்கிழமை மாலைமணி எட்டளவில்
கொற்றச் சிதம்பரரைக் கூட்டியிங்கு வாருங்கள்
பத்திலட்சம் உங்களுக்குப் பங்கு தருகின்றேன்
புத்தியாய்க் காரியத்தைப் போய்முடிக்க வேண்டுமென்று
நல்லையா நீதவான் நண்புரைகள் சொன்னவுடன்
செல்லையாச் சோதிடரும் சென்றார் திருமால்போல்,

# 7

செல்வச் சிதம்பரனார் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்
அல்லல் அறியாமல் ஆர்வமுடன் வாழ்ந்தவரின்
உள்ளத்திலும் துன்பம் ஒட்டத் தொடங்கியது
கள்ளம் கபடமின்றிக் கல்வியிலே கண்ணாகப்
பிள்ளை படிக்கின்றாள் பேரெடுப்பாள் என்றுதான்
உள்ளம் மகிழ்ந்ததெல்லாம் ஊர் சிரிக்கக் காலாச்சே
கள்ளப் பயலந்தக் கல்விவல்ல சந்திரனை
உள்வீட்டுப் பிள்ளைபோல் ஓம்பி நடத்தியதால்
மானம் அழிய வழிவகுத்துக் கொண்டேன்யான்
போன வருடமவன் பொங்கல் திருநாளில்
மாதவியை வாழ்த்தி வரவிடுத்த பாக்களிலே
காதல் அலைவீசக் கண்டேன் கவனமென்றே
ஈசுவரன் பண்டிதர் ஏதோ சொலத்தொடங்க
ஏசி அவரைநான் என்னநீர் எள்ளளவும்
கூசாமல் நாவெடுத்துக் கூறினீர் இந்தமொழி
பேசாமல் போங்கள் பெரிய பிழைப்படுவீர்
கற்றுவல்ல சந்திரனின் கண்ணியத்தை எண்ணாமல்
பெற்றெடுத்த என்குலப் பெண்ணென்றும் பாராமல்
மாணவியை ஆசிரியன் வாழ்த்துகின்ற பாக்களிலே
நாணமின்றி நீர்காதல் நாடகத்தை கண்டுவிட்டீர்
கண்டதற் கெல்லாமோர் காரணங் கூறுகின்ற
பண்டிதர் மாரின் பழக்கம் அதுபோமோ
என்றுநான் வாய்க்கொழுப்பாய் ஏற்றமுடன் சொல்லியதை
இன்றுநான் எண்ணுகின்றேன் ஈசுவரன் பண்டிதர்
அன்றுரைத்த வண்ணம் அறிஞனந்தச் சந்திரனை
நன்கு வரவேற்று நாங்களினி மாதவியைக்
கன்னியர்கல் லூரியிலே கற்கவிடப் போகின்றோம்
அன்னை மொழியிலவள் ஆற்றல் அடைந்துவிட்டாள்
இன்று வரைநீங்கள் எமதில்லந் தேடிவந்து

நன்று திறமையுற நாள்தோறும் மாதவிக்குப்
பாடம் படிப்பித்த பண்பைமிகப் போற்றுகின்றோம்
ஈடில்லை நீங்கள் இயற்றும் உதவிக்கென்று
நன்றி உரைகூறி நானூறு ரூபாவை
அன்று கொடுத்திருந்தால் அல்லல் அகன்றிருக்கும்
காசெனக்கேன் உங்கள் கருணைதான் வேண்டுமென்று
பேசி அவனென்னைப் பெரும்பேயன் ஆக்கிவிட்டான்
ஐந்தாண்டு சென்றால் அதிபராய்ச் சந்திரனும்
இந்துக்கல் லூரியிலே ஏற்றம் பெறுதற்காய்
எந்தன் உதவியை எண்ணித்தான் எப்பொழுதும்
வந்துவந்து பாடங்கள் மாதவிக்குக் கற்பித்தான்
என்றெண்ணி அந்தோநான் ஏமாந்து போய்விட்டேன்,
இந்திரச் செல்வன் இலங்கையிலே என்றுயர்ந்த
மந்திரிமாரும் மதிக்கு மெந்தன் புத்திரியை
சொந்தமாய் வீடுமில்லாத் தோட்டக்காரன் மகன்
சந்திரனா காதலித்தான் தன்மானம் போய்அகல
வந்த வினைக்கென்ன வழிசெய்யப் போகின்றேன்
எந்தன் மகள்வாழ்வும் இப்படியா வந்ததென
எண்ணிச் சிதம்பரனார் ஏங்கி மிகப்புலம்பி
உண்ணவும் போகார் உறங்கிவிட்டார் அப்படியே.
நல்லம்மா அங்கு நடந்தவற்றை எண்ணியெண்ணி
உள்ளம் உடைந்துருக ஒன்றும் தெரியாமல்
வெள்ளம்போற் கண்ணீர் விடுத்தையோ என்கணவர்
மாதவி சந்திரனின் வாய்க்குள் உணவூட்டுங்
காதல் தொடர்பைக் கையோடு கண்டுவிட்டார்
ஏதம் பெரிதாகும் என்னென்ன நேர்ந்திடுமோ
யாதுயான் செய்திடுவேன் அய்யோ கடவுளே
என்றஞ்சி அஞ்சி எழுந்து சுவரோரம்
மெல்லப்போய் தன்கணவர் வீற்றிருந்த மாடத்தின்
கொல்லைப் புறக்கதவால் கூர்ந்து கவனித்தாள்.
ஆறாத் துயரமுடன் ஆவி நிலைதளரக்

கூறாமல் ஒன்றும் குறண்டிய வண்ணமாய்
வேறாக மெத்தையுடன் வெண்பட்டு மேல்விரிப்பும்
மாறாக வீழ்ந்துவிட மண்மேல் புரண்டுமிகத்
துன்பப் படுகின்ற தன்துணைவர் சோர்வுகண்டே
என்ன கொடுமையிது என்றலறி ஓடிப்போய்
தன்மார்பின் மேலவரைச் சார்த்தியே தூக்கிவைத்து
என்னையா என்னையா இப்படியும் கோலமா
என்றுகண் ணீர்விட்டே இரங்கினாள் நல்லம்மா.
ஒன்றுமில்லை நீயேன் உருகி அழுகின்றாய்
"ஒன்றை நினைக்கின் அதொழிந்திட் டொன்றாகும்"
என்ற மொழிப்படியே எல்லாம் முடிந்ததினி
மாதவியைக் கல்லூரி வாழ்வில் விடுக்காமல்
ஆதரவாய்ப் பேசி அறிவுரைகள் கூறவேண்டும்
காதல் மிகக்கொடிது கட்டுப்பாடு காட்டினால்
ஏதம்பல நேரும் இன்னுயிரை விட்டிடவும்
எண்ணுவாள் ஆதலினால் இன்று இங்குகண்ட
உண்மைகளைப் பற்றியான் ஒன்றும் கதைக்காமல்
விட்டுவிடப் போகின்றேன் வேற்றுமை காட்டினால்
திட்டம்போட் டெல்லாம் செயலாற்ற முந்திடுவார்
சந்திரனும் முன்போல வந்திங்கே போகட்டும்
தந்திரமாய் நானவனைத் தாய்நாட்டிற் கோட்டுகின்றேன்
மாதவி சந்திரனை வாய்மையுடன் நம்பிமிகக்
காதலிக் கின்றாள் கலையுணர்வால் ஒன்றுபட்டாள்
எங்கள் தகுதிக்கோ ஏற்றதில்லை என்பதையும்
மங்கையவள் சற்றும் மனத்திலே கொள்ளவில்லை
ஆராய்ந்து தீட்டும் அணுஆற்றல் கட்டுரையில்
ஓரா யிரம்படிகள் ஊக்கமுடன் மாதவியும்
பெற்றுத் தரும்வண்ணம் பேரார்வங் கொண்டென்னைச்
சற்றுந் தயங்காமல் கேட்ட செயலொன்றால்,
சந்திரன்மேல் தான்கொண்ட சால்புநிறை காதலினைச்
சிந்தனையோ டெங்களுக்குச் சொல்லாமல் சொல்லிவிட்டாள்

ஆத்திரப் பட்டால் அவமானம் வந்துவிடும்
கோத்திர மேன்மையெல்லாம் குப்பையிலே போய்ச்சேரும்
என்ற முடிவுக்கே இப்பொழுது வந்துவிட்டேன்
ஒன்றிற்கும் அஞ்சாதே ஊரில் பரவமுன்னம்
மாதவிக்கு நல்லமணம் செய்து வைத்திடுவேன்
ஓத முடியாத உண்மைப் பெருஞ்செல்வன்
தன்னிகர் இல்லாத் தலைவன் ஸ்ரீதேவன்
என்னுமோர் மன்னனுக்கே ஈந்திடுவேன் மாதவியை
எல்லாம் விபரமாய் உன்தனுக்குச் சொல்லஎங்கள்
செல்லையாச் சோதிடர் சேர்ந்திடுவார் நாளையிங்கு
பால்கறந்து காய்ச்சிப் பதமாகக் கொண்டுவா
கால்நல்லாய்ச் சோருது கண்ணயர வேண்டுமென்றார்.
என்ன இடியோ என்றுஏங்கிய நல்லம்மா
அன்னப் பெடைபோல ஆர்வமுடன் ஓடிப்போய்
பால் காய்ச்சிவந்து பருகக் கொடுத்தன்பால்
கால்பிடித்துத் தன்கணவர் கண்ணுறங்க காத்திருந்தாள்.

*(தினகரன் ஞாயிறு இதழ் 08-12-1957 - 26-01-1958)*
*இந்நெடும்பாடலின் இறுதிப்பகுதி கிடைக்காமையால் பாடல் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது*

பாடுகின்றோர் எல்லோருங் கவிஞ ரல்லர்

பாட்டென்றாற் பண்டிதர்க்கே உரிமை யல்ல

ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல

உணர்ச்சியிலே ஊற்றெழுந்த ஒளியால் ஓங்கி

வாடுகின்ற மக்களினம் மாட்சி கொள்ள

மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்கு மாற்றல்

கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி கொண்டு

குமுறுகின்ற கோளரியே கவிஞ னாவான்.

\- வித்துவான் வேந்தனார்

ISBN 9788189748852

9 788189 748852

மித்ர

வெளியீடு